நான் ஒரு சந்தர்ப்பத்தில் நினைத்தேன். எனவே பொருள் வருவாய்யை உத்தேசித்து பதவிக்கு போகவேண்டுமென்றால், கவர்னராக சென்றிருக்க வேண்டும். ஹரிஜன் மக்களிலிருந்து ஒருவரை, கவர்னராக எடுத்திருப்பதாக இதுவரையிலும் தெரியவில்லை. ஆகையினாலே, தாங்கள் இந்தப் பதவியிலிருந்து அப்படியே, கவர்னராக சென்றிருந்தால், சமூகத்திற்கும் பெருமை, உங்களுடைய பெருமைக்கும் அந்தஸ்திற்கும் பொருத்தமாக இருந்திருக்குமென்று நினைத்தேன். என்றாலும், இன்றைய தினம், நீங்கள் செல்லும் அந்தப் புதுப் பதவியானது, பல மக்களை பொறுக்கி எடுக்கக் கூடிய தன்மையில் ஈடுபட வேண்டிய வேலையாகும் என்று சொன்னால், ஒரு விதத்தில், இதுவரை வகித்த பதவியும், இப்போது போகும் பதவியும், ஒன்றாகவே மதிக்கப்படக்கூடியதாக இருக்கின்றன. ஒரு சட்ட மன்றத் தலைவராக வந்தவுடன், நீங்கள் பொது விஷயங்களில் கலந்துகொள்ளாமல் இருக்க வேண்டியதாக இருந்தது. இப்போது, அங்கே செல்லுமிடத்திலேயும், பொதுவாழ்வில் ஈடுபடமுடியாமல், தனிப்பட்ட முறையில் ஆள் பொறுக்கும் வேலையைத்தான் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், நாட்டுக்குப் பணி செய்யும் தன்மையில் மிக அக்கரை கொண்டு, சில காரியங்களை செய்ய அவகாசமும் ஏற்படும். நாட்டு மக்களுக்கும் சிறப்பாக உங்கள் சமூகத்திற்கும், சேர்ந்து பணி செய்யும் வாய்ப்பு இப்போது தங்களுக்கு அதிகமாக கிடைத்திருக்கிறது. ஆகவே, சமூக மக்களுக்குச் செய்யும் பணி, நாட்டு மக்களுக்குச் செய்யும் பணியாகவே முடியும் முறையில், உங்கள் பணியைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை இருப்பதால், எங்களைப்போன்றவர்களுக்கு உங்கள் பிரிவு ஒருவாறு ஆறுதல் அளிக்கிறது என்று சொல்லிக்கொண்டு, நீங்கள் எடுத்துக்கொள்ளும் பணி சிறப்பாக நடைபெற வேண்டும், உங்கள் வாழ்வு சிறப்புற வேண்டும் என்று வாழ்த்தி முடித்துக்கொள்ளுகிறேன்.''

10-14 a.m. * DR. K. B. MENON :—'' Mr. Speaker, Sir, my maiden speech in this House was to congratulate you on your success in the election for the Speakership of this House. We never thought then that you would leave us so soon before the Assembly dispersed and I am not very happy about it. I am unhappy that the valuable services of one of the most ablest and most esteemed son of the State is lost for the Centre. It is the qualities of your head and heart that has endeared you to the Members of this House and it is that that has won for you the appreciation, admiration and affection of the Members of this House. In your official dealings with the Members, you have been very impersonal and very impartial and it is also that factor that has made you very popular with the House. You have dealt with us all in a very fair way be they from the right or from the left, be they Ministers or Members, young or old. Your scholarship and your proficiency in Parliamentary Practice is unquestioned. Your rulings are so profusely backed with books, that the House has willingly conceded to you your claim at the steering wheel. Knowledge is power and you, armed with up-to-date information, were able to satisfy and silence the most incorrigible and argumentative amongst us.

'' Before I close, I would like to say just a word about Sri Sivashanmugham Pillai as a man. It is Sri Sivashanmugham Pillai, the man, than in many respects excels, Sri Sivashanmugham Pillai, the Speaker of the Assembly. From what I know of you and from what I have seen of you, I feel that neither self nor position nor power influences you. The humble cottage in which you live, even as the Speaker of this House, speaks volumes. We get a

10th August 1955] [Dr. K. B. Menon]

glimpse of you in your Chamber which is very different from what we get when you are present in the House. In the Chamber you are very amiable and kind but in the House you sometimes try to put up a formal and furious front. We are sorry to lose you. You have decided to leave us and we, therefore, wish you every success in your new avocation and we are perfectly sure that whatever avocation you accept or whatever position you occupy, you will fill it with dignity and grace. We wish you *adieu*."

MR. SPEAKER :—" A large number of hon. Members want to speak. As the hon. Member, Sri Balakrishnan, has to attend to some urgent business, I now call on him to speak. I hope the House will have no objection to it."

SRI K. VINAYAKAM :—" We also have got some urgent business to attend to."

SRI G. GOVINDAN :—" எங்களுக்கெல்லாம் சில வார்த்தைகள் சொல்ல வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

* SRI V. BALAKRISHNAN :—" Mr. Speaker Sir, the Union Public Service Commission aided and abetted by the Government of India is highly guilty of a daring robbery in the legislative premises of this State. The article involved in the theft, the booty gained by the Union Public Service Commission is the loss to this House of its valuable treasure—the Speaker Mr. Sivashanmugam Pillai. Though the article is replaceable, the intrinsic value of the article, I dare say, is not easily replaceable. The glitter and glamour of the article lay in the impartiality and equity of treatment that you, Mr. Speaker, have meted out to all sections of the House. The size and substance of the article lay in the rich fund of hoary Parliamentary knowledge that you brought to bear in the exercise of your duties. You, as Speaker, have embodied in yourself the highest and the best of the dignity and decorum of this House and by your conduct within and without the House, you have brought credit and honour to the House that every one of us felt proud of being a Member of this House. Your rulings and your statements in this House addorn the page of the 'Hansard' to be read enjoyed, remembered and profited by ages unknown, generations unborn. You, Mr. Speaker, have shown a solicitude for the welfare of the Members not only within the four walls of the Chamber but even outside. I say this not in social platitude but in all truth and reality. Very recently at the Secretariat, Fort St. George when I suddenly took ill, fainted, fell down and lay prostrate on the ground and when I regained consciousness I beheld you Mr. Speaker looking earnestly and anxiously over me and asking whether I would need any help that you could render. You, Sir, took me to my room and day after day—even the doctor was slow and sometimes failed to call upon me—you called upon me with paternal tenderness and affection. This shows your human character, the best side of your character. The Harijans are proud of you. The backward classes are highly appreciative of you and all admiration for you. Both the communities honour, respect and love you, Mr. Speaker.

10-20 a.m.

[Sri V. Balakrishnan] [10th August 1955

"Although we shall miss you, we shall watch your career in New Delhi with interest and it is the wish of all Members of the House that while reaching Delhi you shall not rest within the buildings of the Union Public Service Commission but that you will march forward, progress onward and reach the Presidential Gadi of the Government of India so that you might consummate the unfulfilled but cherished dream of the Father of our Nation that a representative of the Harijan community should occupy the highest and the biggest of the posts of the Government of India.

"On behalf of the small group of unattached independents in this House, Sir, I offer you our good wishes. We, unattached independents, have been most attached to you. May our best wishes go with you, Mr. Speaker."

* Sri K. VINAYAKAM :—"Mr. Speaker, Sir, I shall be rest content with a small speech due to shortness of time. You, as Speaker, with your high Parliamentary efficiency and exquisite qualities have proved beyond reasonable doubt that the country has produced the best Speaker, of our generation in you. You are a phenomena by yourself and there is none comparable to you as a Speaker of any legislature. Sir, some of the junior politicians like me have learned much of the parliamentary procedure at your hands and we shall cherish your association with us with loving memory wherever you may be. I wish you God-speed and good luck in your life. Thank you, Sir."

* Sri U. MUTHURAMALINGA THEVAR :—"கனம் தலைவர் அவர்களே, ஜனநாயக அரசியல் ஏற்பட்டு, சட்டசபைகள் மூலம், சட்டசபை அங்கத்தினர்களையும், மந்திரிமார்களையும் கொண்டு சட்டப் பிரச்னைகளை தீர்ப்பது என்றமுறை வந்ததற்கு பிறகு, தாங்கள் வகிக்கும் இந்த ஸ்தானம் 'பேசுகிறவர்' என்ற பெயரை உடைத்திருப்பினும், பேசாமல் இருக்க வேண்டியவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பேச வேண்டியவர்கள் அங்கத்தினர்களும், மந்திரிமார்களும் என்று நிர்ணயிக்கப்பட்டு, இதற்கிடையில் பேசுகிறவர்களின் கருத்துக்களை நிறுத்தி, பேசாதிருப்பவர் ஒரு முடிவான ஆக்ஞையை கொடுப்பதற்கு என்று அவரை தலைவராக தாங்கியிருக்கிறது இந்த சட்டசபை நிர்வாகம்.

"எண்ணுகிற எண்ணங்கள் அவ்வளவும் பேச்சின் வடிவமாக பிரதிபலிக்கின்றது. பேச்சின் வடிவத்தைக் கொண்டே பெரும்பாலும் மனிதனை நிர்ணயிக்க முடியும் என்பது பெரியோர்கள் வாக்கு. 'மரத்தை வாச்சிளயிட்டுப் பார், மனிதனை பேச்சிட்டுப் பார்,' என்பது நம்நாட்டுப்பழமொழி. இந்த நிலையில் பேசுகிற பேச்சானது, பொழுது போக்குக்காக இருப்பதும், தன்னைப்பெருமைப்படுத்துவதற்காக இருப்பதும், பிறரை அறிய உபயோகப்படுவதாக இருப்பதும், இத்தனைக்கும் இடையில் சந்தர்ப்பம் வரும்போது ஏதேனும் சொல்லவேண்டும் என்று சொல்வதும், இத்தனையும் கடந்து நீதியையும் நிர்வாகத்தையும் நிலையடிக்க ஆணியடிப்பதுபோல் பேசுவதும், ஆக பலரகமாக இருக்கின்றது பேச்சு. இந்த ரகங்களில், கடைசி ஸ்தானத்தை பெறுவதற்காகவே உங்கள் ஸ்தானம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தானத்திலிருந்துதான் தாங்கள் புதிய ஸ்தானத்திற்கு செல்லுகிறீர்கள்.

"இப்பொழுது தாங்கள் போகிற ஸ்தானம் இருக்கிறதே அதற்கிடையில், தங்களுக்கு ஒரு கவர்னர் ஸ்தானம் வருவதற்கு சந்தர்ப்பம் இருந்தது. அந்த ஸ்தானம் தங்களுக்கும் கிடைக்குமென்று எதிர் பார்த்தேன். ஆனால் என்ன காரணத்தைக் கொண்டோ, தங்களை இங்கு புகழுகிறவர்

களாலோ அல்லது மற்றவர்களாலோ, அல்லது அத்தனை பேரும் சேர்ந்தோ, கைநழுவ விடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்தது ஒரு துக்ககரமான சம்பவம். அந்த பதவிக்கு இப்பேர்பட்ட குணம் உடையவர் வந்தால், ஜனநாயகம் மிகுதியும் பெருமையுறும். ஜனநாயகம் எதற்காக அமைக்கப்பட்டதோ, அதில் தந்திரங்களை கையாளுகிற நபர்களுக்கு பாடமாகவும் இருந்திருக்கும். அந்த ஸ்தானம் கைநழுவ விடப்பட்ட போதிலும், இப்போது உங்களுக்கு கொடுத்திருக்கிற ஒன்று உங்களுடைய நிலையை உயர்த்துவதற்கு வந்ததல்ல. ஏதோ சந்தர்ப்பத்தின் பெயரால், மற்றொரு ஸ்தானத்திற்குப் போக வேண்டும் என்று வந்திருக்கிறதாகச் சொல்ல முடியுமே தவிர, உங்கள் வேலையின் நிலையை உயர்த்த வந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆயினும், உங்களுக்குக் கிடைத்திருக்கிற தற்போதைய கௌரவம், உங்களுக்கு மாத்திரம் சார்ந்தது அல்ல. முதலில் அது தமிழனுக்கு கிடைத்த மரியாதை ஆகும். இரண்டாவதாக சென்னைவாசிக்குக் கிடைத்த மரியாதையாகும். மூன்றாவதாக இந்த சட்டசபைக்குந் கிடைத்த மரியாதை. நான்காவதாக ஹரிஜன சமூகத்திற்குக் கிடைத்த மரியாதையாகும். இத்தனைக்கும் சார்பாக நான் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். நீங்கள் நல்ல சுகசரீரத்தோடு, நீண்டகாலம் வாழ்ந்து, உங்களுடைய பொறுப்பை மிகுதியும் நிறைவேற்றி, மீண்டும் இந்த சபைக்கு வருவதற்கு மற்றொரு சர்க்காரில் சந்தர்ப்பம் இருந்தாலும் நீங்கள் வரவேண்டுமென்று பிரார்த்தித்து, எனது உரையை நிறுத்திக்கொள்ளுகிறேன்.''

Sri K. Uppi :—'' Mr. Sivashanmugam Pillai, to-day I am not addressing you as Mr. Speaker, but as Mr. Sivashanmugam Pillai. . .''

Mr. SPEAKER :—'' I am still the Speaker and I have not relinquished the Speakership yet.''

* Sri K. UPPI :—'' Well, Sir, then I will abide by your ruling. Mr. Speaker, Sir, when I read the news that the Membership of the Union Public Service Commission had been offered to you were hesitating to take up that office, believe me, Sir, when I say that in my heart of hearts, I wished that you should not accept it and I felt so for personal reasons, for obvious reasons. You were so helpful to us—Members of the Minority Parties—that I wished that you continued as the Speaker of the House till the expiry of the term of office. Later on, I understood that you accepted the post on better advice, and I also subsequently thought that you should accept it because it would enable you to serve the whole of India also. I remember very well, Sir, when you were elected Speaker, you never sought after it. There were many people then who were running after it. But you, Sir, due to your humility, were fighting shy of occupying such high posts. But the Speakership came to you of its own accord. You believed in the theory that a higher power guides a man's destiny. 10-30 a.m. You never sought after the position which you occupied in 1946 and subsequently. We are all proud to-day that it has struck on a very valuable treasure-trove. Sir, your fairness, your sense of justice, your sense of duty are all marvelous. Your name has become a bye-word for all these virtues. I do not want to praise you in your face, but I am only stating facts. It is said that during the last Assembly you did not absent yourself from your post of duty even once. Sir, you became a Speaker as a party man; you were selected by a party. But the moment you got on the Chair, you rose above

party and that party could not claim you as a party man. No one can lay the charge against you that you ever acted as a party man. You have stood against the party in power, the party which raised you to the position you occupy and you have done that to protect the interests of Opposition Members.

"Sir, I remember when a member of this House was arrested in 1948 or so, with what zest, with what vigour and with what power you moved in the matter; you shook the foundation of the Government to protect the privilege of the Member. Sir, to-day what we find is that you are a matter of pride for the whole State and I wish that you are a pride for not only this State, but for the whole of India, in your new job and I am hopeful and pray that while you are in office, the minorities and the backward classes will have a protector and saviour in you.

"Sir, I wish you God-speed; I wish you all success. May God help you to carry your duties well. Thank you, Sir."

10-34 a.m. **Sri A. Ratnam**:—"கனம் சபா நாயகர் அவர்களே, சட்டசபை கட்சித்தலைவர் அவர்கள் பிரேரேபித்த தங்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் பேரில் ஆனந்தமாகபேச வேண்டிய நான் வேதனையோடு பேச வேண்டிய நிலையில் இருக்கிறேன் காரணம் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிற பழங்குடி சமுதாயத்தில் சீரும், சிறப்பும், அறிவும் ஆற்றலும், கல்வியும் மேன்மையும், ஒருங்கே பொருந்தி இந்த சட்டசபையில் உள்ள பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களால் போற்றப்பட்டு உன்னத நிலையில் விளங்குகிற நீங்கள், இந்த சட்டசபையில் என் போன்ற உறுப்பினர்களுக்கு வழி வகுத்து நல்ல முறையில் நடத்திவந்ததோடு மட்டுமல்லாமல், இனி இந்தராஜ்ய சட்டசபை மட்டுமல்ல, இதர ராஜ்ய சட்டசபைகளும் எப்படி நடத்தப்படவேண்டும் என்பதை அடிக்கடி உணர்த்தி பாடம்கற்பித்து வந்ததன் காரணமாக உயரிய நிலையில் சட்ட சபைகள் நாயகர் என்று போற்றப்படும் தங்களை பிரிவது மன வேதனையையும் வருத்தத்தையும் தருகிறது. தங்களுக்கு தங்களுடைய அரிய சேவைகளைப் போற்றி தெரிவிக்கும் முகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை ஆதரிக்கும் அதே சமயத்தில் ஜனநாயக ஆட்சியில் சமுதாயத்தின் அடித்தட்டில் பல்லாயிர ஆண்டுகளாக மோசமாக கருதப்பட்டு புறக்கணிக்கப்பட்ட பழங்குடி மக்களின் அவலநிலையை எண்ணிப்பார்க்கும்போது எங்கள் உள்ளங்கள் குமுறத்தான் செய்கின்றன. ஏதோ ஓரளவிற்கு அதிகாரத்திலும், ஆட்சியிலும், மற்ற துறைகளிலும் தங்களைப்போன்ற எங்கள் சமுதாயத்தலைவர்கள் முன்னேறி வருகிறார்கள், அந்த அளவிற்கு மஹாத்மா காந்தியடிகளுடைய கனவு பலிதமாகிறது என்றாலும்கூட, ஹரிஜனங்கள் என்று சொல்லப்படக்கூடிய சாதாரண தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறி விட்டார்கள் என்று அர்த்தம் கொள்ள முடியாது. உத்தியோகத்திலும் அமைச்சர் குழுக்களிலும் சட்ட சபைகளிலும் இன்னும் மற்ற துறைகளிலும் தங்களைப்போன்ற எங்கள் சமுதாயதலைவர்கள் வகித்து வரும் ஸ்தானங்கள் அந்த சமூகத்திற்கு பெரிய மரியாதையையும், கௌரவத்தையும் கொடுக்கிறது. அதே நேரத்தில் அந்த சமூகத்தின் சாதாரண மக்களுக்கு ஏதோ சிறிது சலுகை காட்டக்கூடிய அளவில் தான் ஜனநாயக அரசாங்கத்தின் கவனம் திரும்பியிருக்கிறதே தவிர வேறல்ல.

"தாங்கள் சட்டசபையில் சபாநாயகராக வீற்றிருந்து, பல சட்டசபை நுணுக்க புஸ்தகங்களையும், நூல்களையும் படித்து **House of Commons** போன்ற சபைகளின் நடவடிக்கைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டி, தீர்ப்புகள் கூறிவந்திருப்பதை பார்க்கும்போது இந்தநாட்டில் வேறுஎந்த சபாநாயகரும் செய்தறியாத காரியங்களில் நீங்கள் ஈடுபட்டி

10th August 1955] [Sri A. Ratnam]

ருந்திருக்கிறீர்கள் என்று தான் நான் பெருமையடைகிறேன். அதிலும் அறிவுடனும் ஆற்றலுடனும், மிகுந்த சாந்தத்துடனும் அங்கத்தினர்களாகிய எங்களை நீங்கள்நடத்திவந்திருப்பதை எண்ணிப்பார்க்கும்போது அந்த அளவிற்கு வேறு ஒருவர் இனிமேல் சபாநாயகராக அமைய முடியுமா என்கிற்ஐயம் எங்கள் மனதில் எழத்தான் செய்கிறது. மேலும் பழங்குடிமக்களின் பிரதிநிதிகளாக இந்த சட்ட சபையில் இருக்கிற 43 அங்கத்தினர்களுக்கு சபையில் பேசுவதற்கோ அல்லது தங்களை அணுகி சிறிய காரியங்களை' நடத்திக் கொள்வதற்கோ, அல்லது இந்த நாட்டில் உள்ள பழங்குடி சமுதாயமக்கள் சார்பாக சிபார்சுகளைப்பெற்று மேன்மை பெறுவதற்காக வாய்ப்பினை தந்துவந்த தங்களுடைய பண்பை நினைக்கும் தோறும் தங்களைப் பிரிவது எங்களுக்கு மிகவும் வருத்தத்தை தருகிறது. நீங்கள் இன்று செல்லப்போகும் பதவியின் ஊதியம் உயர்வானது என்றாலும்கூட டில்லிமாநாகரத்தின் வாழ்க்கை செலவினங்களை கணக்கிட்டு பார்க்கும்போது, இந்த புதியபதவி உங்களுடைய ஊதியத்தை அதிகமாக விழுங்கத்தான்போகிறது என்பது தெளிவாகின்றது உங்களுடைய சட்ட சபை அங்கத்தினர் பதவியையும் நீங்கள் காலிசெய்வதின் விளைவாக மறுதேர்தல் தங்கள் தொகுதியாகிய ஆயிரம்விளக்கு தொகுதியில் வரப்போகிறது. அந்ததொகுதியில் போட்டியிடப்போகும் அங்கத்தினருக்கு நிச்சயமாக அதிக செலவு ஆகத்தான் போகிறது. இந்த டில்லிமா நகர செலவுநிலையை கவனிக்கும்போது ஆட்சியாளர் தங்களுக்கு உயர்ந்த பதவியை அளித்து தங்கள் ஊதியத்தை அதிகரித்திருப்பதாக சொல்லுவதற்கு இடமேயில்லை என்று வருந்தவேண்டியிருக்கிறது. ஏதோ நாங்கள் மத்தியசர்வீஸ் கமிஷனில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் அளிக்க மத்தியசர்க்கார் முன் வரவில்லை, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடமளிக்கப்படவேண்டுமென்று, நாங்கள் பலஆண்டு காலமாக மகாநாடுகள் நடத்தி தீர்மானமும் போட்டிருக்கிறோம். அதன் விளைவாக ஏதோ தங்களை பரீட்சார்த்தமாக மத்திய சர்வீஸ் கமிஷனில் மெம்பராக போட்டிருக்கிறார்கள். எனவே, அந்த அளவிற்கு நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு நன்றிசெலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் சென்னையிலுள்ள பப்ளிக்சர்வீஸ் கமிஷனிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கத்தினராக இல்லை என்பதை பார்க்கும்போது ஆட்சியாளருக்கு ஒரு வேண்டுகோளும் நினைவும் விடுக்கின்றோம். சென்னை ராஜ்ய சர்விஸ் கமிஷினிலும்கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு பிரதிநிதித்வம் இருந்தால்தான் அந்த இனமக்களுடைய உத்தியோகஉரிமைகள் காப்பாற்றப்பட்ட முடியும். அவர்கள் விகிதாசாரப்படி உத்தியோகங்களை பெறமுடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

"தாங்கள் மத்திய சர்வீஸ் கமிஷன் அங்கத்தினராக போவதால், இனிமேல் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு எவ்வளவு சதவிகிதம் டதவிகள் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த விகிதாசாரத்தை மத்திய சர்க்கார் அளிக்காமல் ஏமாற்ற முடியாது. அந்த அளவிற்கு மேலாக பதவிகள் பெறுவோம் என்று நம்புகிறோம். அந்த அளவிற்கு தாங்கள் பாடுபடுவீர்கள் என்பது எங்களுக்கு உண்மையான உற்சாகத்தை யளிக்கிறது. அந்த உற்சாகத்தைத்தவிர, வேறுஉற்சாகத்தை அடையமுடியவில்லை. ஏனென்றால், இந்த சட்டசபையில் ஐந்தில் ஒருபங்கு உறுப்பினர்களாக தாழ்த்தப்பட்டமக்களின் பிரதி நிதிகள் இருந்தும் கூட, அமைச்சர் குழுவில் தாழ்த்தப்பட்ட இனத்தைசேர்ந்த இருவருக்கு மந்திரிகளாக ஆக பிரதிநிதித்வம் கொடுக்கப்படவில்லை. ஆந்திரமும், சென்னை ராஜ்யமும், ஒன்றாக இருந்தகாலத்தில் எழுப்பியகுரலுக்கு, ராஜாஜி கூறினார்கள், இதோ உங்கள் சபாநாயகர் என்று. மற்ற சட்ட சபைகளில் எல்லாம் சாதிபேதம், வர்க்கபேதம அற்ற நிலையில் தலைவர்கள் காட்சி அளிக்கும்போது "இங்கு இந்த சட்ட சபையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்சேர்ந்தவர் ஒருவர் தலைவராக இருப்பது போதாதா ? அமைச்சர்களுக்குக்கூட சட்டசபைத் தலைவருக்கு அளிக்கப்படும் ஊதியம் அளிக்கப்பட வில்லையே, அதுபோதாதா என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே, நீங்கள் பதவி உயர்வினால்

டில்லி மாநகரம் சென்றாலும், எங்களை பரிதபிக்ககூடிய மக்களாக வைக்காமல், இனியாவது ஆட்சியாளர்கள் கண்திறந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதை யேனும் நான் விளக்கத் தேவையில்லை என்றே கருதுகிறேன். என்போன்றவர்கள் அதிகவிளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தால் அது நல்லதாக இராது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

10-42 a.m. "அது மட்டுல்ல. தாங்கள் இங்கு சபைத் தலைவராக இருந்தால் எங்களுக்கு ஒரு பெரும் அந்தஸ்தைக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் எங்களுக்கு ஒரு பெருமையையும் கொடுத்தது. அது மட்டுமல்ல எங்களை மற்றவர்கள் பெருமைப்படுத்தக் கூடியஅளவில் நாங்கள் இருந்திருக்கிறோம். கேள்விநேரங்களிலும் நீங்கள் பாகுபாடின்றி சரிசமமாக எல்லோருக்கும் திருப்திஅளிக்கும் முறையில் நீங்கள் தீர்ப்புகூறி வந்திருக்கிறீர்கள். அமைச்சர் குழுவிலிருந்து எங்களுக்கு மக்கள் நன்மை அடையக்கூடிய முறையில் பதில்கள்வரும். அப்பொழுது உங்களுடைய பதவி அதில் பிரதிபலித்து வரும். அந்தஅளவில் நீங்கள் இந்த சட்டசபையைப் பெருமையாகநடத்தி இருக்கிறீர்கள். அமைச்சர் அவர்களுடைய வாயிலிருந்தும் நன்மையைச் செய்யக்கூடிய அளவில் வார்த்தைகள் வரும். அவ்வளவு திறமையாக நீங்கள் இந்த சட்டசபையை நடத்தி வந்திருக்கிறீர்கள். ஒரு ஆர்வத்துடனும், ஆற்றலுடனும், அறிவுடனும் நேர்மையுடனும், அழகாகவும் கண்யமாகவும் நீங்கள் இந்த சட்டசபையை நடத்திவந்திருக்கிறீர்கள். இப்பேர்ப்பட்ட சபாநாயகர் இனி வர முடியாது. உள்ளபடி நேற்று கனம் ராஜாஜி அவர்கள் சொன்னபடி இனி இப்படிப்பட்ட சபாநாயகர் இருப்பதுஎன்பது சந்தேகம்தான். இனிமேல் இப்படிப்பட்ட சபாநாயகர் வருவாரோ என்பது சந்தேசமாகத்தான் இருக்கிறது.

."இந்த சமுதாயத்தில் இப்படிப்பட்ட திறமைசாலிகள் இருக்கிறார்களா, கற்றவர்கள் இருக்கிறார்களா, நேர்மையுள்ளவர்கள் இருக்கிறார்களா, உயர்ந்த உள்ளம் படைத்தவர்கள் இருக்கிறார்களா என்றெல்லாம் கேட்கப்பட்டது. இப்படி பலகேள்விகள் கேட்கப்பட்டன. நீங்கள் இந்த சென்னைராஜ்யத்திற்கு முதற்படியாக இருந்து உச்சஸ்தானத்தில்இருந்து எல்லோருக்கும் நன்மை செய்யக்கூடிய அளவில் இருந்தீர்கள். நீங்கள் ஒரு கலங்கரை விளக்குபோல் காட்சியளித்துக் கொண்டிருந்தீர்கள். இவைகளை எண்ணும்போது எங்களுக்கு உற்சாகம் ஏற்படுகிறது. ஆனால் இப்பொழுது நீங்கள் வேறுஉத்தியோகத்திற்குச் செல்லும்போது உள்ளபடியே நாங்கள் ஒரு பெரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடுகிறோம் என்று வருந்தவேண்டியதாக இருக்கிறது. நாங்கள் மிகமிக ஆழ்ந்துகிறோம் வருத்தத்தில். இந்த ராஜ்யத்தில் மட்டும் அல்ல, இந்த தேசத்திலுள்ள பழங்குடிமக்கள் மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட எட்டுகோடி மக்களுக்கும் நீங்கள் இந்த சட்டசபையில் இருந்துகொண்டு சேவைசெய்திருப்பதைக் கண்டு பாராட்டுகிறார்கள். பெரும் நோக்கத்துடன் நீங்கள் நின்று பொதுமக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சேவைசெய்திருக்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கள் சேவைசெய்ய வந்ததைக்கண்டு நாங்கள் சந்தோஷப்பட்டோம். நம் ராஜ்யத்தில் இருக்கும் தாழ்த்தப்பட்டமக்களுடைய சார்பாக எங்களுடைய நன்றியைச் செலுத்துகிறோம். இந்த ராஜ்யத்திலுள்ள மக்களுக்கு மட்டுமல்லாமல் கோடிக்கணக்கான மக்களுக்கும் நீங்கள் முதன்மையாக இருந்து அவர்களுடைய சுபிட்சத்திற்கும் மேன்மைக்கும் ராஜ்யத்தினுடைய அமைப்புக்கும் ஆட்சிக்கும் நீங்கள் இருந்துவேலை செய்துவந்ததை நான் பாராட்டுகிறேன்.

"ஆந்திரராஜ்யம் பிரிவதற்கு முன்பாக சட்டசபை நடவடிக்கைகள் நடக்க்கும்போது மந்திரி சபை தோற்றுவிடுமோ அல்லது அமைச்சர் குழாமை மாற்றி யமைக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிடுமோ, ஒன்றிரண்டு வோட்டுகளில் மந்திரிசபை தோற்றுப் போய் விடுமோ என்றெல்லாம் இருந்த போது உங்களுடைய தீர்ப்பு ராஜ்யத்தை நிலைநிறுத்தியிருக்கிறது என்று சொல்லலாம். இப்பொழுது ராஜ்யம் நிலைத்து நிற்க

10th August 1955] [Sri A. Ratnam]

கிறது என்று சொன்னால் அதற்கு அன்று நீங்கள் தீர்ப்புக் கொடுத்ததுதான் காரணம் என்று சொல்லலாம். நீங்கள் சபா நாயகராக ஆனபோது ஆதி பெருங்குடி மக்கள் அனைவரும் சேர்ந்து உங்களுக்கு வாக்களித்து நிரந்தர மாக வாக்களித்திருக்கிறார்கள் என்றால் அது நாட்டின் சுபீட்சத்தை பிரதி பலிக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அந்த முறையில் இந்த ஆட்சியை நீங்கள் நிரந்தரமாக்கியிருக்கிறீர்கள் என்று சொல்லலாம். சட்ட சபைக்கு ஜெயித்து வந்தவர்கள் 100-க்கு 40 சத விகிதம் என்றால் அதற் குத் துணையாக 33 ஹரிஜனங்கள் எம்.எல்.ஏக்கள் ஆக வந்திருக்கிறார் கள். சிலர் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள். அவர்களும் மற்ற எம்.எல்.ஏக்களும் அதாவது ஹரிஜன எம்.எல். ஏக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்திருந்தால் இந்த காங்கிரஸ் ஆட்சி இன்றைக்கு நிலைத்திருக் காது. இப்பொழுது நிலைத்து நிற்பதற்குக் காரணம் ஹரிஜனங்கள் தான் என்பதை இந்த சமயத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். ஹரிஜன காங்கி ரஸ் எம்.எல்.ஏக்கள் இன்றைக்குப் பிரிந்து போனால் காங்கிரஸ் அரசாங்கம் இன்றைக்கு இருப்பதைக் காண முடியாது என்பதை நிரூபிக்கிறேன். இந்த அளவிற்கு நீங்கள் பெரும் அளவில் ராஜ்யத்திற்கும் ஆட்சிக்கும், சட்ட சபைக்கும் பொது மக்களுக்கும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்ற மடைவதற்கும் பாடுபட்டு வந்திருப்பதைக் கண்டு நாங் கள் சந்தோஷப்படுகிறோம். மேலும் மேலும் அதிகமாகச் பேசினால் வேறுவிதமாக திரும்பி விடும். அதனால் இத்துடன் முடித்துக் கொண்டு வந்தனோபசார தீர்மானத்தை ஆமோதித்து இத்துடன் சுருக்கமாக என்னுடைய உரையை முடிக்க ஆசைப்படுகிறேன்.''

* DR. P. VARADARAJULU NAIDU—"கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்பீகர் சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் நல்ல பாக்கியசாலி, இப்பொழுது அவருடைய திறமையைப்பற்றி பல நண்பர்கள் பேசிக்கொண் டிருக்கும்போது ஐம்பது வருஷங்களுக்கு முன் நாடு எப்படி இருந்தது என்பது ஞாபகத்திற்கு வருகிறது. ஐம்பது வருஷங்களுக்கு முன் இது போன்ற நிகழ்ச்சி நாட்டில் ஏற்படும் எனபது சாத்தியமா என்று நினைத் திருக்க முடியாது. இன்று ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை அவர்களுடைய சாமர்த்தியத்தைப்பற்றி யாரும் ஒன்றும் குற்றம் சொல்லவே முடியாது. எல் லோரும் பாராட்டத்தான் வேண்டும். அவருடைய சுனுதிசயங்கள் ரொம்ப வும் முக்கியமானது. உலகத்தில் எந்த மனிதனும் பரிபூர்ண சுபாவத் துடன் இருப்பது இல்லை. ஏதாகிலும் குற்றம் குறை இருக்கும். நான் ஒரு புத்தகம் படித்திருக்கிறேன். அதில் ஒருவர் என்ன சொல்லி யிருக்கிறார் என்றால் "Every man is a mad man" என்று சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாகிலும் ஒருகுறை இருக் கத்தான் செய்யும் என்று சொல்லியிருக்கிறார். விரலை எண்ணிக் கொண் டிருப்பான், அல்லது காதைச் சொரிந்து கொண்டிருப்பான், அல்லது கையை ஆட்டிக் கொண்டிருப்பான். இப்படி ஏதாவது ஒரு குற்றம் இருந்து கொண்டுதானிருக்கும். அதைத்தான் அந்த ஆசிரியர் ஏதாவது பைத்தி யம் பிடித்தவனாக மனிதன் இருப்பான் என்று எழுதியிருக்கிறார். இங்கு நமக்கு எல்லாம் தலைமை வகித்துக் கொண்டிருப்பவரை நான் அடிக்கடி கவனித்துக் கொண்டிருப்பேன், அவருக்கு ஏதாவது ஒரு குற்றம் இருக்கி றதா என்பதைக் கவனிப்பேன். அந்தப்புத்தகத்தில் எழுதிய மாதிரியான பைத்தியக்காரத்தனம் இருக்கிறதா என்பதை நான் அடிக்கடி கவனிப் பது உண்டு. அவர் தூங்குகிறாரா என்று கூட கவனிப்பது உண்டு. அப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனம் என்பது அவரிடம் கிடையவே கிடை யாது. ஆனால் அவரிடம் நான் ஒரு குற்றத்தை மட்டும் கண்டு பிடித் திருக்கிறேன். அது என்ன வென்றால் அவர் ரொம்பவும் அவசரமாகப் பேசுவார், அவசரமாகப் படிப்பார். இதைத் தவிர ஒரு நாளவது அவரி டம் எந்த விதமான குற்றத்தையும் நான் கண்டு பிடித்தது இல்லை. அந்தரங்கமாக அவருக்கு ஏதாகிலும் இருக்குமோ என்னமோ, அதைப் பற்றி எனக்குத் தெரியாது (சிரிப்பு). என்னை பொறுத்த வரையில் அவரி டம் எந்த விதமான பகிரங்கமான குற்றமும் இருப்பதாக என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. 10-48 a.m.

[Dr. P. Varadarajulu Naidu] [10th August 1955

"இரண்டாவதாக அவர் தீண்டாதவர்களுக்குச் செய்திருக்கும் சேவை எனக்கு நன்ருகத் தெரியும். எந்த ஏழைப் பையனும் படிப்புக்கோ அல்லது சாப்பாட்டிற்கோ இல்லை என்று அவரிடம் வந்தால் நிச்சயமாக அந்தப் பையனுக்கு பணம் கொடுத்து உதவுவார். யார் வந்தாலும் அவரிடமிருந்து நிச்சயமாக உதவி கிடைக்கும். தான் வாங்கும் சம்பளத் தில் பாதிப் பணத்தை இந்த விதத்தில் செலவுசெய்வதாகவும் நான் கேள் விப்பட்டிருக்கிறேன்.

10-50 a.m. "ஏழைப் பையன்கள் எல்லோரும் தினமும் அவரிடம் உதவி கேட்டுக் கொண்டு வந்து விடுகிருர்கள். இது விஷயமாக அவர் வாங்குகிற சம் பளத்திற்கு மேல் செலவு செய்கிருர் என்பதாகக் கேள்விப்படுகிறேன். ரப்பர் ஸ்டாம்பே பண்ணி வைத்துக்கொண்டு, தன்னிடம் வருபவர்களுக்கு எல்லாம் அவர் வேலைக்குச் சிபார்சுக் கடிதம் கொடுத்துக் கொண்டு வந்தார் என்பது நமக்குத் தெரியும். இப்பொழுது அவரே உத்தியோகம் கொடுக்கிற வேலைக்குப் போகிருர். அங்கே போகிறபடியால் இனிமேல் இவரே அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகப் பிள்ளைகள் உத்தி யோகத்திற்கு வர நிறையசந்தர்ப்பம் அளிக்க முடியும். பண விஷயத்தில் இவருக்கு அந்த உத்தியோகத்திற்குப் போவதினுல் லாபமில்லை. அந்த உத்தியோகத்திற்கு இவருக்கு மாதம் 3,000 ரூபாய் சம்பளம். அதில் 800 ரூபாய்க்கு மேல் வீட்டுக்கே போய்விடும். சேவிங்ஸ் மிச்சத்தில் இரு நூறு மூன்னூறு போய்விடும். கடைசியாக இவர் கையில் மிச்சப்படுவது இருநூறு முன்னூறு ரூபாய் கூட மிஞ்சாது. அதைக் கொண்டு தற்போது இவர் ஏழைகளுக்கு பண உதவி அளிப்பது போல இனிமேல் அளிக்க முடியாது என்றே நினைக்கிறேன்.

"ஸ்ரீமான் பிள்ளை அவர்களை நான் பல வருஷங்களாக அறிந்திருக்கி றேன் அவருக்குத் திருமணம் ஆகும்போது எனக்கு நன்ருகத் தெரியும். ரொம்ப சாதாரண வாழ்க்கையை உடையவர். மேலும் அவ ஒரு முருக பக்தர். எனக்கு முருக பக்தியில்லை. முதன் முதலில் இவரை சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தபோது மிகப் பெரிய தலைவரிடத்தில் போய், இவருக்கு அனுபவமென துவும் இல்லாமல் இருக்கும்போது இவரைர் ஸ்பீக்கராகத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்களே என்று கேட்டேன். அதாவது சர். பி. ராஜகோபாலாச்சாரி, ஸ்ரீ எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளை போன்ற மேதைகள் எல்லாம் வகித்த பதவிக்கு இவரைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டதற்கு, அப்பொழுது இருந்த முதல் மந்திரி யின் கண்ணைக் குத்துவதற்காகவே இவரைப் போட்டதாகச் சொன்னுர்கள். ஸ்ரீ காமராஜ் அவர்களிடத்தில் மிக நம்பிக்கையாக இருந்தார். ஸ்ரீ ஷண் முகம் பிள்ளையை ஸ்ரீ காமராஜர் ஆதரித்தார். நானும் இந்தியாவிலுள்ள இதர மாகாண சட்ட சபைகளின் சபாநாயகர்களை எல்லாம் பார்த்திருக் கிறேன். இவ்வளவு ஒழுங்காக கட்டுப்பாடாக நடந்து கொள்ளுகிறவர்களை நான் பார்த்ததே கிடையாது. அதிகாரிகளிடத்திலும் கூடப் பேசியிருக்கி றேன். படித்தவற்றையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொள் ளக்கூடிய திறமை இவருக்கு மிக அதிகமாக இருக்கிறது. சென்னை சட்டசபை மாஜி காரியதரிசி ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்கள் கூட இவரை மிகவும் பாராட்டுவார்கள். எதையும் மறக்கிற குணமே கிடையாது. சிலர் எப்பொழுது பேசினுலும் தங்கள் ஜாதி, உயர்ந்த ஜாதி என்கிற பேதத்தையெல்லாம் பேச்சில் கொண்டு வந்து புகுத்துவார்கள். அம் மாதிரியாக ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் பேசி நான் கேட்டதே யில்லை. தாழ்த்தப்பட்ட ஜாதியார்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்தால் மிக நல்ல முறையில் பணியாற்றுவார்கள் என்பதற்கு இவர் ஒரு எடுத்துக் காட்டு. ஹரிஜன சமூகத்தார் எதைத் தொட்டாலும் குளிக்கவேண்டுமென்ற பழக்கம் இருந்த நாட்டில், கோயில்களுக்கு மந்திரி, காங்கிரஸ் கமிட்டித் தலைவர், சட்டசபைத் தலைவர் இவர்கள் யாவரும் அந்த சமூகத்தி லிருந்தே இந்த நாட்டில் பதவிக்கு வரவேண்டிய சந்தர்ப்பம் தமிழ் நாட்டுக்கே கிடைத்திருக்கிறது. இப்படிப்பட்ட பாக்கியம் தமிழ் நாட்டைத் தவிர வேறு எந்த மாகாணத்திற்கும் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட அபரிமிதமான முன்னேற்றம் இந்த ராஜ்யத்தில் தான் ஏற்பட்டிருக்கிறது.

10th August 1955] [Dr. P. Varadarajulu Naidu]

இது நம் யாருக்கும் தெரிகிறது இல்லை. ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் இன்றைக்கு இந்தப் பதவியை விட்டு புதிதாகப் போகிற பதவி பெரிய பதவி என்று நான் நினைக்கவில்லை. ஒன்பது வருஷகாலமாக இந்தப் பதவியில் இருந்து நல்ல அனுபவம் பெற்றவர் நம்மை விட்டு இன்றைக்கு போகும்படியாக பெரிய உத்தியோகம் அவருக்குக் கொடுத்தது தவறு என்று நான் நினைக்கவில்லை. ஆனாலும் இது நமக்குப் பெரிய நஷ்டம்.

"எனக்கு இயற்கையிலேயே பயம் என்பது மனதில் கிடையாது. ஆனால் ஸ்ரீமான் பிள்ளை அவர்களிடத்தில் எனக்கு கொஞ்சம் பயம் சில சமயங்களில் உண்டாகும். அதாவது என்னிடத்தில் யாராவது பேசுவதற்கு வந்து கொண்டேயிருப்பார்கள். அவ்வாறு யாருடனாவது பேசிக் கொண்டிருக்கும்போது, எங்கே அவர் பார்த்துவிட்டு 'ஆர்டர், ஆர்டர்', என்று சொல்வார்களோ என்ற பயம்தான். அவரிடத்தில் யாருக்கும் கோபம் கிடையாது. யாரும் புண்படத்தக்க வகையில் ஜாடைமாடையாகக் கூடப் பேசினார் என்று நாம் சொல்ல முடியாது. அவர் நேரே டெல்லிக்குப் போகிறார். பார்லிமெண்டின் தலைவராக வருவதற்கு மிகவும் தகுதி உடையவர். அவர் பார்லிமெண்டு மெம்பராக வந்து, பார்லிமெண்டு தலைவராகவும் வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆனால் அங்கே ஹிந்தி தொந்தரவு தான் கொடுப்பார்கள். ஆகவே அவர் ஹிந்தியையும் கற்றுக் கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் தாங்கள் நீண்ட காலம் வாழவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன்."

* **Sri R. V. SWAMINATHAN**:—"கனம் சபாநாயகர் அவர்களே, தங்களைப் பாராட்டும் வகையில் பிரேரிக்கப்பட்டிருக்கும் பிரேரேணையை ஆதரித்து சில வார்த்தைகள் பேசவேண்டுமென்று நினைக்கும்போதே உண்மையில் ஒரு வகையில் மனம் சங்கடம் அடைகிறது. ஒரு வகையில் 10.55 a.m. மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது. தங்களை சட்ட சபையின் தலைவராக முதன் முதலில் தேர்ந்தெடுத்த பெருமை எனக்கும் உண்டு. தங்களை முதன் முதலாக சபாநாயகராக நாங்கள் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் தாங்கள் ஹரிஜன சமூகத்தின் தலைவர் என்ற காரணத்திற்காக அல்ல திறமை வாய்ந்தவர், நேர்மை மிக்கவர், கடமையோடு பொறுப்புணர்ச்சியோடு நிறைவேற்றத் தக்க சகல குணங்களும் தங்களிடம் நிரம்பி இருக்கிறது என்கின்ற காரணங்களை எல்லாம் கொண்டே, நீங்கள் எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை முதலிலேயே சொல்ல விரும்புகிறேன். தங்களோடு போட்டியிட்டவர் கூட ஒரு பிராமண சமூகத்தவர் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி அத்துடன் விட்டு விடுகிறேன்.

"முதன் முதலில் தாங்கள் எவ்வித முன் அனுபவமும் இல்லாமல் சபைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்களே, நீங்கள் எப்படி உங்கள் புதுப் பொறுப்பை நிறைவேற்றப் போகிறீர்கள் என்று நாங்கள் கூட நினைத்தோம். அந்தச் சமயத்தில் நல்ல திறமை வாய்ந்தவர்கள் அதிகமாக இருந்தார்கள். நல்ல அனுபவத்தோடு கூடிய ஆட்கள் எல்லாம் அங்கத்தினர்களாக இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் சபையில் சரளமாகவும், மிகத் தைரியமாகவும் பேசக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள். சட்ட சபை அங்கத்தினர்களாக அந்தச் சமயத்தில் வந்திருந்த மிகவும் வாலிபர்களாகிய நாங்கள் கூட சபையில் பேசுவதற்குப் பயந்து கொண்டிருந்தோம். எங்களுக்கு எல்லாம் தைரியம் கொடுத்து, சட்ட சபையில் எங்களையும் பேசுங்கள் என்பதாகத் தைரியம் கொடுத்தவர் ஸ்ரீமான் பிள்ளை அவர்கள்தான். அதற்காக நாங்கள் மிகவும் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"சபையில் யாராவது 'ஒழுங்குப் பிரச்னையை', எழுப்பினால் மற்றவர்களைப்போல் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் எப்போதும் சடாரென்று தீர்ப்புக் கொடுப்பதேயில்லை. தங்கள் மனதில் எது நியாயமென்று பட்டதோ அந்தத் தீர்ப்பையும் அவர்கள் வழங்குவதில்லை. இது மாதிரியானபிரச்னை இங்கிலாந்து தேசம் போன்ற இதர தேசங்களில் முப்பது நாற்பது வருஷங்

[Sri R. V. Swaminathan] [10th August 1955

களுக்குள் எழுந்திருக்கிறதா என்று படித்துப் பார்த்து, அங்கே அவர்கள் என்ன தீர்ப்பு அளித்திருக்கிறார்கள் என்பதையும் நன்றாகத் தெரிந்து கொண்டு அதன் பிறகு, இதுமாதிரியான பிரச்னை ஹவுஸ் ஆப் காமன்ஸில் இந்த வருஷம் எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு இந்தமாதிரியாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள், ஆகவே அதைப்போலவே நானும் இங்கே இப்படித் தீர்ப்புக் கொடுக்கிறேன் என்பதாக நீதியுடன், நேர்மையாகத் தீர்ப்பு வழங்குவார்கள் நமது பிள்ளையவர்கள். செல்லரித்துப் போன புஸ்தகங்களை எல்லாம் அவர் படித்துக் கொண்டேயிருப்பார்கள். எப்போது அவருடைய் அரைக்குப் போனாலும் ஏராளமான புத்தகங்களின் மத்தியில் தான் அவர்கள் எப்போதும் உட்கார்ந்து கொண்டு ஏதாவது படித்துக் கொண்டேயிருப்பார்கள் என்பதை நாம் பார்க்கலாம்.

" ஒரு சமயம் மிகவும் வேடிக்கையான நிகழ்ச்சி சபையில் எழுந்தது திடீரென்று ஒருவர் ஒருசமயம் சபையில் ஒரு ஒழுங்கு பிரச்னையை எழுப்பினார். அதை ஆதரித்து சிலர் மிக வன்மையாகப் பேசிக்கொண்டிருக்கும்போது சபையில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. எல்லோரும் எங்கே ஸ்பீக்கர், எங்கே ஸ்பீக்கர், ஸ்பீக்கர் தன்னுடைய ஆசனத்தில் இல்லாமல் இருக்கும்போது சபையில் எப்படிப் பேசிக்கொண்டே போவது என ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். திடீரென்று ஸ்பீக்கர் தன்னுடைய ஆசனத்திலிருந்து முகத்தை உயர்த்தினார். எல்லோரும் சிரித்தார்கள். அதாவது அந்தப் பிரச்னையை எழுப்பியவுடனேயே, தன்னுடைய சீட்டின் கீழ் வைத்துக்கொண்டிருக்கும் புத்தகங்களை எல்லாம் புரட்டி கீழே குனிந்த வண்ணம் அவர் அதுமாதிரியான பிரச்னை எப்போதாவது, எங்கேயாவது நிகழ்ந்திருக்கிறதா என்பதைத்தான் ஆராய்ந்து கொண்டிருந்தார் என்பது அப்போது தான் எங்களுக்குத் தெரியவந்தது.

" அப்படி அவர் எப்போது பார்த்தாலும் படித்துக் கொண்டேயிருப்பார்கள். படிப்பதோடு மட்டுமல்ல, அங்கங்கே அடையாளத்திற்குப் பேப்பரை
11 a.m. வைத்துக் கொண்டே போவார்கள். சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் அதை எடுத்து சந்தர்ப்பத்துக்கு ஏற்ற இடங்களை மேற்கோளாகக் காட்டி அந்தச் சந்தர்ப்பங்களை எல்லாம் சமாளித்திருக்கிறார்கள்.

" அவர்களுடைய திறமையையும், நேர்மையையும் கண்ட நாங்கள் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல அவருக்கு டெல்லியிலிருந்து அழைப்பு வருமென்றே எதிர்பார்த்தோம். டெல்லி பார்லிமெண்டின் தலைவராக அவர் போய்விடுவார் என்று எண்ணிக்கொண்டிருந்தோம். டெல்லிக்கு போகிறார்கள் என்று சொன்னார்கள். அப்போது நாங்கள். நினைத்த மாதிரி சரியாகப் போய் விட்டது ; இவர்களது திறமையைப் பார்த்து இவர்களைப் பார்லிமெண்டுக்கு ஸ்பீகராகப் போட்டு விடுவார்கள் ; மாவ்லங்கருக்கும் வயதாகி விட்டது ; அவர் ரிடையர் ஆகி விடுவார் ; இவர்களை ஸ்பீகராகப் போடுவார்கள் என்று நினைத்தோம், ஆனால் அப்படியில்லாமல் வேறு காரியத்துக்காக **Union Public Service Commission** ல் மெம்பராகப் போடுவதற்கு, அழைத்திருக்கின்றனர்.

" இரண்டாவது, நமது திரு. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் சட்ட சபையில் பணியாற்றும்போது நாம் இந்தியாவில் இருப்பதாகவே அவருக்கு நினைவு இருக்காது ; ஏதோ லண்டனில் **House of Commons**ல் இருப்தாகவே நினைத்துக்கொண்டு அவ்வளவு நல்ல முறையில் **rulings** கொடுப்பார். தமது கடமையை எடுத்துக் கொள்ளும் இந்த ஆர்வத்தைக் பார்த்து, இவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பி, இவர்கள் அங்குள்ள பார்லிமெண்டரி நடைமுறைகளை நேரில் தெரிந்து வந்தால், ராஜ்ய சபையானாலும் சரி, இந்தியா பார்லிமெண்டானாலும் சரி, இந்தியாவுக்கே அப்படிச் செய்வது உதவியாக இருக்குமென்று நினைத்து அதற்காக கிளர்ச்சி செய்தோம. ஆனால் பல காரணங்களால் அது கைகூடவில்லை. இப்போது பார்த்தால் அவர் இங்கிலாந்து போய் **House of Commons**லும் பார்ககாவிட்டாலும், உலகத்தில் எத்தனை எத்தனையோ பார்லிமெண்டுகளைப் போய்ப் பார்த்த மாதிரி, பழைய, புதிய பார்லிமெண்டரி

10th August 1955] [Sri R. V. Swaminathan]

விதிகள், நடைமுறைகள் எல்லாம் **correspondence** மூலம் அறிந்து, மிக நல்ல முறையில் நமது சட்ட சபையை நடத்தி வந்திருக்கிறார் என்பதைப் பார்க்கிறோம்.

"இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு நான் இங்கிலாந்துக்கு போனபோது இவர்களிடம் **House of Commons**-க்குள்ளே சென்று அங்கு நடவடிக்கைகளைப் பார்ப்பதற்காக ஒரு **introduction letter** கேட்டேன். இவர்கள் **introduction letter** கொடுத்தார்கள். அதில் **Clerk** என்று அட்ரஸ் செய்யப்பட்டிருந்தது. உடனே, 'என்னங்க **Clerk** என்று அட்ரஸ் பண்ணியிருக்கிறீர்களே' என்று கேட்டேன். அதற்கு இவர்கள் 'இங்குள்ள சாதாரண **Clerk** அல்ல. **Clerk** என்றால் அங்கேயுள்ள **House of Commons**-ன் **Secretary**-க்கு பெயர் இவர் ஒரு பெரிய உத்யோகஸ்தர்' என்று சொன்னார்கள். லெட்டரை எடுத்துக்கொண்டு சென்றேன். அங்கே **House of Commons Speaker**-ஐ பார்ப்பதாவது சுலபமாக முடியலாம். ஆனால் இந்த **Clerk**-ஐ நேரில் பார்ப்பதென்பது அரிதான காரியம். **Introduction letter**-ஐ எடுத்துக்கொண்டு முதலில் **Clerk** உடைய **P.A.** யிடம் சென்று **Clerk**-ஐ பார்க்க வேண்டுமென்று சொன்னேன். அதற்கு அவர் எதற்காக **Clerk**-ஐ பார்க்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் '**House of Commons**-ஐ பார்க்க வேண்டும்; **House of Commons** நட வடிக்கைகளை தொடர்ந்து ஒரு 10 நாட்கள் பார்க்க வேண்டும்; அதற்காக **Clerk**-ஐ பார்க்க வேண்டும்' என்றேன். 'நீங்கள் **House of Commons**-ஐ பார்க்கலாம்; அதற்கு **Commonwealth Association** மூலம் **arrange** பண்ணுகிறோம்' என்று அவர் சொன்னார். ஆனால் நான் விடாமல் '**Clerk**-ஐ நான் நேரில் பார்க்க வேண்டும். இந்தக் கடிதத்தை அவரிடம் கொடுத்து விடுங்கள். அதுபோதுமென்றேன்.' லெட்டரைக் கிளார்க்கிடம்கொடுத்து விட்டு, **P.A.** ஆச்சரியகரமாக ஓடி வந்தார்கள். 'இதற்குமுன் இதே மாதிரி எத்தனையோ பேர் **Introduction letter** வாங்கி வந்திருக்கிறார்கள்; அவர்கள் எல்லாம் **Clerk**-ஐ பார்க்க முடியவில்லை; ஆனால் இப்போது **Clerk** உங்களைப் பார்க்க விரும்புகிறார்' என்று அவர் சொன்னார். கிளார்க்கைப் போய் பார்த்தேன். உடனே அவர் 'சிவசண்முகம் பிள்ளை சௌக்கியமாய் இருக்கிறாரா' என்று கேட்டார். அவர் அப்படி விசாரித்ததும், நான் 'சிவசண்முகம் பிள்ளை அவர்கள் ஒரு வேளை இங்கிலாந்துக்கு வந்திருக்கிறாரோ; அவரை நேரில் பார்த்த மாதிரி விசாரிக்கிறாரே' என்று நினைத்து 'நீங்கள் சிவசண்முகம் பிள்ளையை நேரில் பார்த்திருக்கின்றீர்களா? அவர் லண்டனுக்கு வந்திருக்கிறாரா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் 'சிவசண்முகம் பிள்ளையை நேரில் பார்த்ததில்லை; கடித மூலம் தான் பரிச்சயம்' என்று சொன்னார்கள். அப்போது நான் 'நமது சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் இவர்களிடம் இவ்வளவு தூரம் பரிச்சயமாகி இருக்கிறார்களே; பார்லிமெண்ட் நடவடிக்கை முறைகளைத் தெரிந்துகொள்வதற்காக இவ்வளவு கஷ்டம் எடுத்துக் கொண்டிருக்கிறார்களே' என்று ஆச்சரியப்பட்டேன்.

"எங்களுக்கெல்லாம் நீங்கள் பதவியிலிருந்து நீங்குவதில் ஒரு கவலை. அந்தப் பதவிக்குத் தகுதியானவர்கள் கூட வரலாம். எப்போதுமே சந்தர்ப்பம் கொடுத்தால் திருப்திகரமாக, திறமையாக சபை நடவடிக்கையை நடத்துவதற்கு, இந்த நாட்டில், இந்த சபையில் தகுதியானவர்கள் இருக்கிறார்கள். தங்கள் ஸ்தானத்துக்கு வருபவர்கள் காரியங்களைத் திறமையாக நடத்துவதற்கு தங்களைப் பின்பற்றி நடந்தாலே போதும்; திறமையாக சபை நடவடிக்கையை நடத்தலாம். ஆனால் தாங்கள் சபையில் எங்காவது ஒரு சிறு சப்தம் கேட்டாலும், உடனே **Order, Order, Order, Order** என்று சொல்வீர்கள். அப்படிச் சொல்லும்போது எங்களை திடுக்கென்று தூக்கிப்போடும். அத்தகைய நடுக்கத்தை உண்டாக்கும் தலைவர் இவருக்குப் பிறகு வருவார் என்று நாங்கள் நம்பவில்லை. போன சட்ட சபையில் இவர் முதலில் சபைத்தலைவராக வந்தவுடன் நாங்கள்

எல்லாம் இவர் பெரிய கோபக்காரராக இருப்பார் போலிருக்கிறது என்று பேசிக்கொள்வோம். ஆனால் இவர் ரூமுக்குப் போனால் அப்போது இவர்கள் 'வாப்பா, என்ன வேண்டும்?..................சட்ட சபையில் இருக்கும்போது அப்படித்தானே இருக்கவேண்டியிருக்கிறது..........' என்று ரொம்ப அன்புடன் பேசுவார்கள். உடனே 'இவரைக் கோபக்காரர் என்று நினைத்தோமே; இவ்வளவு அன்போடு பழகக்கூடிய, இவ்வளவு உற்சாக மூட்டக்கூடிய ஒரு தலைவர் கிடைப்பது அரிது' என்று தோன்றும். சட்ட சபையில் ஒரு சிவஷண்முகம் பிள்ளையாகவும், ரூமிலும் வீட்டிலும் வேறொரு சிவஷண்முகம் பிள்ளையாகவும் காட்சியளிக்கக்கூடிய, அத்தகைய இளகிய மனதுடைய இவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தோம் என்று சந்தோஷப்படுவோம்.

"இப்போது இவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து, **Union Public Service Commission** மெம்பராகப் போகிறார்கள். இவரை விட்டுப் பிரிவதற்கு நமக்கெல்லாம் முடியாவிட்டாலும் இவர்கள் இப்போது எந்தக் காரியம் நிமித்தம் செல்கிறார் என்பதைப் பார்க்கும்போது நமக்கெல்லாம் ஒரு விதத்தில் திருப்தி, ஏனென்றால் எந்த விதமான சிபாரிசுக்கும் கட்டுப்படாதவரும், விருப்பு வெறுப்பற்றவரும், பாரபக்ஷமற்றவருமான ஒருவரைத்தான் அந்த ஸ்தானத்திற்குப் போடுவார்கள். ஆனால் இப்போது நாட்டில் அத்தகைய பாரபக்ஷமற்றவர்கள் இல்லையென்று சொல்கிறார்கள், அப்படியிருந்தால் அந்த நிலைமையை நீக்குவதற்கும், மற்றவர்களைத் திருத்துவதற்கும், நமது ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை முயற்சித்து வெற்றி காண்பார் என்ற நம்பிக்கையும் தைரியமும் எங்களுக்கு இருக்கிறது. அந்த முறையில் மட்டுமல்ல, தேசம் பூராவுக்கும் உத்யோகம் கொடுப்பவர்களாக, அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ற உத்யோகம் கொடுப்பவர்களாக, அத்தகைய முக்கியமான காரியத்திற்காக நமது தலைவர் செல்வதால் ஒரு திருப்தி. இல்லாவிட்டால் நாங்கள் அவரை பிரிந்திருக்க முடியாது. அத்தகைய முறையில் நாங்கள் இவர்களை வாழ்த்துகிறோம்.

"எங்களை விட்டுப் பிரிந்தாலும் தாங்கள் எங்களை ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். எங்களை உற்சாகப்படுத்திய உங்களை நாங்கள் மறக்க முடியாது. அந்த முறையில் நாங்கள் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"தாங்கள் தமிழ் நாட்டில் முக்கியமான தலைவராக விளங்குகிறீர்கள். ஹரிஜனங்களின் தலைவர் என்று சொல்லப்படுகிறீர்கள். தங்களை 'ஹரிஜனங்களின் மாணிக்கம்', '**Gem of the Harijans**' என்று சொல்லலாம். அப்பேர்ப்பட்ட உங்களை நீடூழி வாழவேண்டுமென்று வாழ்த்தி எனது வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

11-05 a.m. * SRI T. ANANTA PAI :—" Mr. Speaker, Sir, on behalf of the Members coming from South Kanara I have great pleasure in associating myself with the sentiments that have been expressed on the eve of your departure from us. I had occasion to hear from the visitors' gallery the encomiums that were showered on you on the last day of meeting of the previous Assembly. I did not think then that within four years and even before the term of this Assembly would be over, we would be called upon to add to those tributes. To-day we are proud of you, not so much because you have been perhaps the best among the Speakers that any Legislature in India had ever had, but because you have been one of the best among us. You have been so simple, so gentle, so humble, so conscientious and hard-working that you have created a tradition for yourself and perhaps you are one of the best-loved and lovable personalities in the whole House. That you are going away from us leaves us with a sense of reget. But the office that you are now

10th August 1955]

[Sri T. Ananta Pai]

called upon to hold, whatever the order of precedence may be, is not of any the less consequence so far as the country's destinies are concerned. Your sense of impartiality and justice would have been the main cause for your being called upon to take up a more onerous responsibility. In a democracy, to man the executive with the right type of men is no less important than a good legislature. Sir, you carry with you our best wishes. You have lived a life of devotion and dharma. God will always be with you. May you live long and live a life of useful service in the cause of motherland."

* SRI M. S. MOGRAL :—" Sir, it is with mixed feelings of joy and sorrow that I rise to express my sentiments on this occasion. During the long period you have been presiding over the deliberations of this House, you have conducted the meetings with dignity and skill. Your mastery over the complicated details of every bit of parliamentary procedure is superb and that you had all information about parliamentary procedure at the tip of your fingers is indeed unforgettable. The scrupulous care with which you have systematically upheld the glorious tradition of parliamentary procedure and the dignity of this House will be written in letters of gold. Your quick memory, which helped you to pick up the names of all the Members and to remember them individually, is an admirable trait of your amiable character. I sincerely feel that this House will be definitely poor without your able guidance. In a way I take consolation in the fact that you are leaving us because destiny is taking you to a wider sphere where, I am sure, you will make a glorious contribution to the welfare of our country. I wish you long life, happiness and prosperity. May God bless you with a long record of beneficial public service." 11-10 a.m.

* SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, to speak in highly exaggerated terms on occasions like this has become so conventional that though I may speak the truth and nothing but the truth on this occasion, it will be taken with a grain of salt. But we are conscious that whatever we might say or attribute to you can never border on exaggeration. It has been said that poets are born and not made. I feel that the dictum could be applied to the Speakers as well. By this, I do not mean that a Speaker should be a genius. What I mean is that he must have certain natural innate qualities which could be developed but cannot be acquired. One who takes pains to plunge into the ocean of parliamentary procedure can, of course, become an adept in it though he has not got the aptitude for it. But, certainly, he will fail in its actual application in day-to-day practice unless he is blessed with natural virtues in that respect. That you have in abundance. You have a balanced and judicial mind. That is the most important characteristic required of a Speaker and it has been amply supplemented by your profound knowledge of parliamentary procedure. It is this that has helped you to be ceremonious without being rigid, firm without being arbitrary and just without being partial.

[10th August 1955

[Sri M. Narayana Kurup]

If I may compare you to anybody, it is with you yourself. We generally say ' *Sagara sagaropama* '. Ocean is like the ocean. This is the highest complaint which I wish to pay you at this time. Democracy has its virtues as well as its defects. In a well-ordered Democracy ruled by disciplined parties, we know that decision is more often taken not on the floor of the House, but in party cacaus. Therefore, a great duty is cast upon the Speaker of the House not only to preserve the prestige and dignity of the House, but, as has been eloquently mentioned by the Hon. the Leader of the House, to hold the scales even and protect the interests of minorities, not by giving undue advantage but justly. Sir, minorities require protection as much in this House as outside it and you have shown how minorities could be protected without being unjust or even appearing to be unjust. To persons like me, who are new to parliamentary life, yours has been the guiding hand of a loving mother to the tumbling child. We can't say how much your presence will be lost to us. However, we shall try to learn from what you have bequeathed to us so far.

" Then, Sir, it has been mentioned that you are not an individual but a symbol of your community and how that community is shaking off its shackles and attaining its highest place in our modern society. Sir, we are proud of it. But, at the same time, it is no time for the Government or for those who have the uplift of the downtrodden in their hearts to rest on oars. We cannot be content with one Dr. Ambedkar or with one Sivashanmugam Pillai. They must become not the exception of the community but the rule of the community. What I mean is that the majority of them must become persons like your honour itself. I have been pondering why there is a paucity of great men in this world and my conclusion is that the God Almighty might be a Socialist who does not want not only concentration of wealth but concentration of virtues in a few to the detriment of others. I do not wish to say whether your new office is of a higher order or not. However, certainly, you would feel while here in this House even the Ministers bow to your ruling. During your period of service as a Member of the Union Public Service Commission you might have the novel experience or the first experience of how your decisions may or may not be liked by men in authority. But no experiences are good and it is with a feeling of sorrow that we bid adieu on this occasion. We all wish that our blessings will be with you in your high office and you will also not forget what has been happening and happened in this House. Thank you, Sir."

* SRI K. VENKATASWAMI NAIDU :—" Mr. Speaker, Sir, it is with great feelings of joy and sorrow that we take leave of you on this occasion. For the last 25 years we have been working together. Our constituency will greatly raise your presence in the City of Madras and in this august Chamber. You have been really a friend of the poor. Many people may say that they are friends of the poor. But the way in which your doors were open to all

10th August 1955] [Sri K. Venkataswami Naidu]

people at all times and how you helped them in their various requirements and how you have been a friend guide and philosopher and guru also are admirable and it is impossible for many public men to be so. Especially your patience, phenomenal patience, was a matter of proverbial nature in this country.

" Mr. Speaker, Sir, I have seen you in the last Assembly. But when you came to this Assembly, which was bubbling with new spirit and was full of various elements in the beginning, you taught us what parliamentary procedure is and how we should behave in this House. Your impartiality and great firmness have made history in this country and your Speakership will always remain in this country as a model for many people to follow.

" Sir, after so many years of hard work, you are going to a place where, I hope, you will have some rest and time for study and also for writing some books. I hope that this will not be the end of your career. We hope that this is only a stepping-stone to many more honours in store for you.

" One thing which we all appreciate in you is your great love of God and Muruga bhakti. That has been your charm and that has helped you in many things in your life and that will guide you in future also. With these words, I once again felicitate you on your elevation and wish you Godspeed."

* SRIMATHI (DR.) T. S. SOUNDARAM RAMACHANDRAN :— 11-20 a.m.
" கனம் சபாநாயகர் அவர்களே, முன் ஒரு மெம்பர் சொன்னதுபோல் நீங்கள் இங்கேயுள்ள மெம்பர்களுடைய தராதரங்களை நன்கு அறிந்து கொண்டிருக்கிறீர்கள். அநேகருக்கு சிபாரிசும், அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு வழியும் தேடிக்கொடுத்திருக்கிறீர்கள். எனக்கு இருக்கும் கொஞ்சம் அனுபவத்திலிருந்து நன்றாகத் தெரியும். இந்திய சர்வீஸ் கமிஷனில் உங்களுக்கு ஒரு மெம்பர் ஸ்தானம் கொடுத்திருப்பதன் மூலம், தகுந்த வாலிபர்களையும், வாலிபப் பெண்களையும் அவர்களுக்குத் தகுந்த வேலைகளுக்கு தேர்ந்தெடுத்து இந்திய நாட்டை நன்கு ஆளும் திறமையுடைய கூட்டத்தைக் கொண்டுவருவதற்கு உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வருங்கால 'சர்வீஸ்' இன்னும் ரொம்ப நன்றாக இருக்கும்படியும் திறமைவாய்ந்த நாட்டுப் பணியைப் பெரிதாக் கருதக்கூடியவர்கள் நிறைந்திருக்கக்கூடிய ஒரு 'சர்வீஸை', இப்போது இருப்பதைவிட இன்னும் பல மடங்கு உயர்த்த உங்கள் 'செலக்ஷன்' அமையும் என்பதில் எங்களுக்குச் சந்தேகமே இல்லை. அதனாலே, தெய்வம் இப்போது உங்களுக்கு இந்தப் பதவியைக் கொடுத்திருப்பதும், அதை எடுத்துக்கொண்டு நடத்தலாம் என்ற நம்பிக்கையை உண்டாக்கியிருப்பதும் ஒரு நன்மைக்கே.

" இந்த அசெம்பிளியில் சிவஷண்முகம் பிள்ளை இல்லாமல் வேறு ஒருவரை வைத்துக்கொண்டு சபையை எப்படி நடத்த முடியும். எப்படி நடத்தப்படுகிறதென்று அனுபவம் வந்த பிறகு தான் சொல்ல முடியும். உங்களுக்கு இங்கே ஒரு நிரந்தரமான ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற எண்ணம் தான் எங்களுக்கு இருந்தது. இங்கே தனக்கு நிகர் தான் தான் என்ற விதத்தில் இந்த சபை நடவடிக்கையை எப்படி நடத்திக் கொடுத்தீர்களோ, அப்படி இந்திய சர்வீஸ் கமிஷனிலும் இருந்துகொண்டு ஒரு நல்ல சர்வீஸை நாட்டில் கொண்டுவர வேண்டுமென்பதற்காக, பல பேருடைய வாழ்த்துக்களுடன் என்னுடைய வாழ்த்தையும் சேர்த்துக் கொடுத்து, என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்."

[10th August 1955

RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD :—" Mr. Speaker, it has been the fortune of this Assembly to have the privilege of having a person of your calibre and ability to preside over the deliberations of this House in the last nine years or so. Some of us who know you so intimately for the last 30 years and who have seen the progress of your political career in the City of Madras enjoy great pleasure whenever they saw your elevation, be it to the Mayoralty or to this high office as Speaker. On an occasion like this when almost all Members of this House would like to speak, it is not necessary to speak at length. It is enough if we speak a little to show our token of high regard and respect with which you have been held all these years. The high regard that you have demanded from us so to say, is not merely out of affection for you. It is mainly due to the impartial way in which you have conducted the affairs of this House. It is easy to know the Members of this House and the groups to which they belong. But, it is difficult to conduct the affairs of this House in an impartial manner on crucial occasions which were not few and far between. You had plenty of such occasions not in this Assembly in the last two years of course, but during the five years of your Speakership you had very many difficult times to face. That you had courage to be impartial in all those serious occasions is a matter of pride not only for you, Sir, but for this House with which every Member of this House shares.

" Sir, on this occasion, it is a fitting tribute which the Hon. Leader of the House has paid to you on behalf of the Members of this House and in that tribute every Member of this House joins. The resolution before the House is only a token of our regard and our best wishes to you, Mr. Speaker, for your continued successful service to the country. You are one who can always be serviceable, whether you are in office or outside. You are a person devoted to the country's cause and we wish you long life and a successful and useful career. Thank you, Sir."

* SRI S. DAIVASIGAMONEY :—" Mr. Speaker, it is with mixed feelings of pain and pleasure that I rise to speak on this occasion. I am very happy that you, a true and affectionate friend, has been appointed as a Member of the Union Public Service Commission. But, I am pained that not only I, but also all other friends of yours will be missing you. We will not have the opportunity of seeing you almost every day. I can lay claim to the fact that I am one of those persons who have known you for a longer period than many other Members of this House. To me, you have always been a very affectionate friend and our relationship was always good. With regard to your relationship with other persons, you have always been unassuming, amiable, amicable and also very charitable. In your public relationship, you have been very philanthropic, pious and you have done everything to help the poor and the downtrodden.

10th August 1955]

[Sri S. Daivasigamoney]

"Sir, for some time past, you know we have been agitating—'we' means the Harijans, Scheduled Castes and Backward communities—that a Member of one of these communities should be appointed to this covetous post of Member of the Union Public Service Commission. Now, the Union Government have thought it fit to appoint one belonging to the Harijan community to this covetous post. We are happy that you have been appointed to this post, not because it is a lucrative job for you, but because it gives an opportunity for you to serve the members of the Backward communities and Scheduled Castes and Harijans. Hitherto, I can say without fear of contradiction, that the case of the Harijans and the Backward Classes has gone by default in the Norh. With your presence there now. I am sure you will always be alert and will not leave the case of the downtrodden to go by default. I wish you success in your new venture and wish you god-speed."

SRI V. C. PALANISWAMY GOUNDER:—"கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினமானது இந்தச் சட்ட சபையிலே ஒரு முக்கியமான தினமென்று நாம் எல்லோரும் நினைக்கவேண்டிய தினமாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சட்ட சபையானது நம்முடைய இந்திய யூனியனிலேயே ஒரு மலையிடை விளக்காகத் தோன்றுகிறது என்று சொன்னால் மிகையாகாது. இந்த விளக்குக்கு நடுநாயகமாக உள்ள நீங்கள் தான் இந்த சென்னை சட்ட சபையிலுள்ள ஒரு கௌரவத்தையும், இச் சபையின் தலைவரின் பாரபக்ஷமான நடு நிலைமையையும் உறுதியாக ஏற் 11-28 a.m.
படுத்திக் கொடுக்கும்படியான முறையில் இந்தியாவிலுள்ள மற்றெல்லாச் சட்ட சபைகளையும் மீறிவிட்டீர்கள். இது நான் சொல்வது மட்டுமல்ல; பல அங்கத்தினர்கள் இப்படிச் சொல்வதைச் கேட்டு நான் சந்தோஷப்படுகிறேன். உங்கள் பாரபக்ஷமற்ற நடு நிலைமை உறுதிப்பாடு எல்லாம் போற்றத் தக்கது என்பதை நான் சொல்லவேண்டியதில்லை; பல பேர்கள் சொல்லியாகிவிட்டது. இந்தச் சபையிலே நான் உங்களை நெடு நாளாகக் கண்டு களித்திருக்கிறேன். நான் சென்னைவாசியாக இல்லாத போதிலும், இங்கு உங்களோடு நகரத்திலிருந்து தோளோடு தோள் உராய்சி, அன்னியோன்னியமாக இருந்த பல நண்பர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் உங்களைப்பற்றிப் பேசியதையும் கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். நீங்கள் இந்த சட்ட சபையிலே பல ஆண்டுகளாக இருக்கிறீர்கள். 1947-ல் உங்களை சபாநாயகராக முதல் முதல் தேர்ந்தெடுக்கும்படியான பணியில் நான் அடைந்திருக்கும் ஒரு பங்கை நினைக்கும்போது சந்தோஷப்படுகிறேன். அந்தப் பிரரேபணையை ஆதரித்ததாக எனக்கு ஞாபகம் வருகிறது. அந்த பெருமை கிடைத்ததே என்று இப்போது சந்தோஷப்படுகிறேன்.

"தவிர தலைவராக இருப்பதற்கு உங்களிடம் இருக்கக்கூடிய திறமையைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. பல பேர்கள் சொல்லியாகிவிட்டது. ஆனால் இரண்டொரு விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். உங்கள் உன்னதமான குணங்களில் மிக உயர்ந்த குணம் ஆஸ்திக குணம். 'சிவஷண்முகம் என்று சொன்னாலே, அது ஒரு முகம் அல்ல, ஷண்முகம் என்ற ஆறுமுகம்' என்று சொல்லக்கூடிய ஒரு முகத்திலே உங்களைக் காண்கிறோம். எங்கு சென்றாலும் முருகனைப்பற்றி நினைப்பூட்டுகிறீர்கள். தவிர சொல்வதுண்டு; ஒருவனைப்பற்றி புகழ்வதென்றால் ஆயிரம் நாக்குகள் கொண்ட ஆதிசேடனாலும் சொல்ல முடியாது. பல கண்கள் கொண்டவராலும் சொல்ல முடியாது என்று சொல்வார்கள். அப்படியிருக்கையில் நான் ஒன்றும் வெறுமனே புகழவில்லை. உண்மையிலேயே உங்களுக்கு சிவஷண்முகம் என்ற பெயர் ரொம்பப் பொருத்தம் எனலாம். இந்தச் சட்ட சபையை அர்த்த சந்திரன் என்று சொல்லி உங்களை பன்னிரண்டு கண்கள் உடையவர் என்று தான் சொல்லவேண்டும். என்னென்

றால் சபையில் எந்த இடத்திலும் யாருடைய முகத்தையும் தெரிந்து கொள்கிறீர்கள். யாருடைய முகமலர்ச்சியையும் (யார் பேசுவதற்கு எழுந்திருப்பதையும்) தெரிந்து கொள்ளும் உங்கள் குணம் சிலாகிக்கத்தக்கது.

11-30 a.m. "எனக்கு முன்பு பேசியவர்கள் உங்களுடைய உதார குணத்தைப்பற்றி பேசினார்கள். நான் அதை நேரில் கண்டிருக்கிறேன். அதையும் நான் இங்கு ஒருவாறு சொல்லத்தான் வேண்டும். ஹரிஜனங்களுக்கு எவ்வளவு உதவி செய்து வருகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களுடைய வருவாயிலே பாதிக்கு மேற்பட்ட தொகையை நீங்கள் ஹரிஜனங்களுக்காக வழங்குகிறீர்கள், என்று முன்னால் பேசிய அங்கத்தினர் ஒருவர் சொன்னார். அது மிகவும் உண்மை என்று நான் ஆதரிக்கிறேன். உங்களுடைய மனதானது அந்தச் சமூகத்தாரிடத்திலே எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறது என்பதை நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. ஹரிஜனங்கள் பால் உங்களுக்கு மிகவும் அன்பு உண்டு என்று நான் சொல்லும்போது நீங்கள் இந்தச் சபையிலே அந்தச் சமூகத்திற்காக விசேஷ சலுகை அளித்தும் மற்ற சமூகத்தாருக்குப் பாரபட்சம் காட்டுகிறீர்களோ என்றால் இல்லை. ஸ்ரீமான் சிவசண்முகம் பிள்ளை சபாநாயகராக இருக்கும்போது நிலைமை வேறு, அவர் தன்னுடைய அறையில் நடந்துகொள்ளும் விதம் வேறு. சபையில் பாரபட்சமற்ற முறையில் எல்லோரிடத்திலும் ஒரே விதமாக நடந்துகொள்வார். ஆனால், தன்னுடைய அறையில் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக அவர் எவ்வளவு பேர்களுக்கு உதவி செய்திருக்கிறார் என்பதை ஒரு அங்கத்தினர் பேசும்போது சுட்டிக் காட்டினார். அந்த நிலையிலே உங்களுடைய குணங்களானது சகல விதத்திலும் சிலாகிக்கத் தகுந்தவை.

"இவ்வளவு அருங்குணங்களைத் தாங்கள் பெற்றிருந்தும் மிகவும் சாதாரண வாழ்க்கையையே நடத்தி வருகிறீர்கள். உங்களுடைய பழைய இல்லத்திலேயே நீங்கள் இன்றும் வசித்து வருகிறீர்கள். சில பேருக்கு உத்யோகம் உயர்ந்தால் மாட மாளிகைகள் கட்டிக்கொண்டு வசிப்பது வழக்கம். ஆனால், உங்களுக்கு அப்படிப்பட்ட நோக்கம் எதுவும் இல்லாமலிருந்திருக்கிறது. உத்தியோகம் உயர உயர தாங்கள் அந்தப் பணங்களை ஹரிஜனங்களுக்கு வழங்குவதற்கு செலவு செய்கிறீர் என்பதை நான் அறிய சந்தோஷப்படுகிறேன். உங்களுடைய ஆதிபூர்வமான இருப்பிடத்திலேயே தாங்கள் வசித்து வந்து சாதாரண எளிய வாழ்க்கையையே நடத்தி வருகிறீர்களென்றால் அது மிகவும் மெச்சத்தகுந்த விஷயம்.

"அதுமட்டுமல்ல. நீங்கள் பொதுக் காரியங்களுக்காக சென்னை நகரத்திலும் இந்தத் தேசத்தின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்கிறீர்கள். மந்திரிகள் வெளியூர்களுக்குச் செல்லும்போது பொது விஷயமாகச் செல்லுகிறார்கள். ஆனால், நீங்கள் செல்வது அறநெறி யாத்ரிகர் என்ற முறையில் செல்லுகிறீர். நீங்கள் எந்த ஊருக்குச் சுற்றுப் பிரயாணம் செய்தாலும் அங்கு ஆலயங்களுக்குச் செல்லாமல் இருப்பதில்லை. ஆலயங்களுக்குச் சென்றாலும் குறிப்பாக முருகன் சந்நதி உண்டா என்று கேட்டு முருகன் சந்நதிக்குப் போவதற்குத் தவறுவதேயில்லை. நீங்கள் எங்களுடைய கிராமத்திற்கு சமீபத்தில் வந்திருந்தது ஞாபகம் இருக்கும். அப்பொழுது நீங்கள் கேட்ட முதல் கேள்வி 'இங்கு முருகன் சந்நதி உண்டா?' என்பதுதான். என் கிராமத்திற்கு அருகிலேயே இல்லாதுபோனாலும் வெள்ளிங்கிரி பூண்டிக்கு நீங்கள் சென்றிருக்கிறீர். அந்த ஸ்தலத்தை தட்சிண கைலாயம் என்று சொன்னால் மிகையாகாது. குன்றுகள் தோறும் முருகன் ஆடுகிறான் என்று சொல்வது வழக்கம். அந்த மாதிரி நீங்கள் முருகனுடைய பக்தனாக இருக்கிறீர்கள். முருகன் ஏழைகளுக்கு இரங்குபவன். அதேபோல நீங்களும் ஏழைக்கு இரங்குபவராக இருக்கிறீர்கள். நீங்கள் ஏழை மக்களுடைய வாழ்க்கையிலே ஈடுபடக் கூடியவர். உங்களுடைய வாழ்க்கையையே ஏழ்மையாக நடத்தி மக்களுக்கு வழிகாட்டி வருகிறீர்கள். அந்த முறையிலே நீங்கள் ஒரு தினமாவது என்னுடைய அதிதியாக இருந்ததைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். அப்பொழுது உங்களுடைய உயர்ந்த நோக்கத்தையும்,

10th August 1955] [Sri V. C. Palaniswamy Gounder]

உங்களுடைய அதி தீவிரமான ஏழைபால் அன்பும் கண்டு நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். தாங்கள் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அங்கத்தினராக நியமிக்கப்பட்ட செய்தியைக் கேட்டதும் தங்களிடம் டெலிபோன் மூலமாகப் பேசினேன். அப்பொழுது நான் உங்களை மிகவும் சந்தோஷத்தோடு வாழ்த்துக் கூறும்போதே "உங்களை விட்டுப் பிரிவது எப்படி" என்று நான் கேட்டேன். தாங்கள் உணர்ச்சி வசப்பட்டு ஒன்றும் சொல்ல முடியாமலிருந்தீர்கள். இப்படிப்பட்ட தலைவரை நாம் இனிமேல் பிரிந்திருக்கப்போகிறோமே என்று ஒரு பக்கத்தில் கவலை இருந்தபோதிலுங்கூட தங்களுடைய நேர்மையான ஒரு சேவை மத்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குப் கிடைக்கப் போவது மிக மிக அவசியம். இப்படிப்பட்ட ஒரு தலைவரை அந்தப் பதவிக்கு தேர்ந்தெடுத்திருப்பதினால் தேர்ந்தெடுத்திருப்பவர்களுக்கே கௌரவம், அந்தச் சபைக்கும் கௌரவம் என்று நான் சொல்வேன். ஸ்ரீமான் சிவசண்முகம் பிள்ளை அவர்கள் மேலும் மேலும் நல்ல உயர்ந்த பதவியைப்பெற்று பொது மக்களுக்காக சேவை செய்ய ஆரோக்கிய திடகாத்திரமும் பெற்று நீடூழி வாழ்ந்து மக்களுக்கும் தேசத்திற்கும் நல்ல வழிகாட்டியாக இருப்பார்கள் என்று ஆண்டவனைப் பிராத்திக்கின்றேன்."

* SRI P. T. RAJAN :—"Mr. Speaker, Sir, it is my privilege and pleasure to support the resolution moved by the Hon. the Leader of the House. I must express regret for not having been present when he moved the resolution. However, I am thankful to have the opportunity of supporting it. I am quite sure I will have the opportunity of going through his speech in the course of this evening.

"It is with some hesitation I speak because on an occasion like this it is difficult to say what is appropriate and omit what is not appropriate. You are leaving us, Sir, to a wider field of activity to occupy a post more responsible and onerous than the post that you occupy now. I am glad to feel that by this appointment of yours, the principle for which myself and my party had stood, namely, equal opportunities for all, has been accepted by the powers that be in the Centre. To that extent I feel happy. However, I am not happy at the thought of your leaving us now. It is rather difficult to sweep the horses in mid stream. I wish the appointment had come to you earlier or it had come to you at the end of your term of office.

"Sir, I have been watching the activities of this House both from within and without for the last 35 years. The post of a Speaker is not an easy one, though no less a person than Sri P. Rajagopalachari the first Speaker, had created traditions which have been carried on by his successors. Your vast experience gained during the last nine years will be lost to us. A cleverer or an abler person might occupy the Chair. But he cannot have the experience which you have gained during the last nine years. I know, it was given to me, Sir, to install you in the Chair when the new Assembly met in the new Chamber and I had full faith that you would preside over this House and conduct yourself in a way which would meet with the approval of every Member of this House. I re-call to myself the period, especially the three days when I occupied that Chair when I doubted whether the new House would rise to the occasion and carry on the traditions of the old House. Now I am happy that the Members of this House

[Sri P. T. Rajan] [10th August 1955

have upheld the traditions in a way which be worthy of those men who had been responsible for creating those traditions. My wishes to you are not the less sincere or the less genuine, though I may sound this discordant note on an occasion like this.

11-44 a.m. "Though we will miss your genial personality, though we will miss your Speakership, I am quite sure you will carry with you the best wishes of this House and I for my part wish you God speed."

Sri A. S. SAHAJANANDA —" கனம் தலைவர் அவர்களே, இந்தச் சபைக்குத் தலைவராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியில் இருந்து வந்ததற்கு உங்கள் தகப்பனார் மிகவும் புண்ணியம் செய்திருக்கவேண்டும்.

மகன்-தந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்

தந்தையார் என்ன புண்ணியம் செய்திருக்கிறாரோ அதேபோல மகனும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்

தகப்பனார் ஒருவர் சாதாரணமாக மகனுக்கு பணத்தையும் அதிகாரங்களையும் தேடிவைத்துப்போவது வழக்கம். அதைத் தவிர, தன்னுடைய மகன் தலைவராக இருக்கும்படியும் செய்யவேண்டும் என்று திருக்குறள் ஆசிரியர் சொல்லியிருக்கிறார்.

" சபையில் தலைவராக இருப்பதற்கு எட்டு யோக்கியதைகள் இருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் கூறியிருக்கிறார்.

" 'எண்வகை முதலிய அவையத்தானும்......' என்பது செய்யும் எட்டு வகை யோக்கியதைகள் என்னவென்றால், பிறப்பு, தூய்மை, வாய்மை, கல்வி, ஒழுக்கம், நடுவு நிலைமை, அழுக்காறின்மை, அவாவின்மை ஆகிய எட்டு குணங்களைப்பற்றிச் சொல்கிறார்.

" ஆசிரியர் பனம்பாரனார்கூட இந்த எட்டு வகைக் குணங்களையும் தொகுத்து ஒரு செய்யுளில்

'வலம்புரி முத்தில் குலம்புரி பிறப்பும்........ என' விளக்கியிருக்கிறார். அப்படிப்பட்ட எண்வகைக் குணங்களையும் தாங்கள் பெற்றிருக்கும்படியாக உங்கள் தந்தையார் உங்களை உண்டாக்கியிருக்கிறார். அந்த எட்டு வகைக் குணங்களோடும் நீங்கள் இந்தச் சபைத் தலைவராக வந்திருக்கிறீர்.

" சட்டசபை உறுப்பினராவதற்கு உரிய இலக்கணத்தைத் திருவள்ளுவர் கூறும்போது

சுவையொழிய றோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு

என்று கூறியிருக்கிறார். சட்டசபை அங்கத்தினராக உள்ளவர்கள் தன் மாத்திர பேதங்கள் நாட்டின் காரியங்களாகிய தத்துவம் பகுத்தறியும் தத்துவம்தான். சட்ட சபைக்கு வருவதற்கு சில தகுதிகள் இருக்கவேண்டும். அவனுடைய கட்டுப்பாடே இந்த உலகம். திருவள்ளுவர், காந்தியார் போன்றவர்கள் அம்மாதிரி யோக்கியதை யுள்ளவர்களாக இருந்தார்கள். அதேமுறையில்தான் தாங்களும் சட்டசபைக்கு அங்கத்தினராக வரும்போதே உடைத்தாயிருந்திருக்கிறீர்கள். அந்தக் குணங்களின் உயர்வினால் தான் நீங்கள் சட்ட சபைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள். சகலவித அரும் பெரும் குணங்களைக் கொண்டிருப்பதினால்தான் நீங்கள் இந்தச் சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெகு திறமையாக பணியாற்றி வந்திருக்கிறீர்கள்.

10th August 1955] [Sri A. S. Sahajananda]

" தலைவர் அவர்களே, உங்களை நான் ரொம்பவும் வேடிக்கையாக ஒரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன். விரோத குணம் உடையவர்களாக உங்களை நான் கருதுகிறேன். ஒன்றுக்கொன்று விரோத குணங்கள் ஒன்ருகத் திரண்டு நீங்கள் வந்திருக்கின்றீர்கள். நீங்கள் ஒன்றுக்கொன்று விரோத குணங்களைக் கொண்டு விளங்குகிறீர்கள் என்று நான் சொல்லும் போது, நீங்கள் ரொம்பப் பெரிய அறிவாளியாக இருக்கிறீர். ஆனல், அதே சமயத்தில் மௌனமாகவும் இருக்கிறீர். அறிவுக்கும் மௌனத்திற்கும் நேர் விரோதம். நீங்கள் ரொம்பப் பலமுடையவராக இருக்கிறீர். ஆனல், அதே சமயத்தில் பொறுமையாகவும் இருக்கிறீர். பொறுமைக்கும் பலத்திற்கும் நேர்விரோதம். நீங்கள் பெரும் கொடையாளியாக இருக்கிறீர். ஆனல், அதை வெளியே சொல்வது கிடையாது. நானக இருந்தால் ' இந்த ஊரில் இத்தனை குளங்களை வெட்டினேன், கோயில்களைக் கட்டினேன்,' என்று ஒருவேளை சொன்னலும் சொல்லுவேன். ஆனல், நீங்கள் அப்படிக் கிடையாது. பெரும் கொடையாளியாக இருந்தும், அதைப்பற்றி ஒன்றுமே வெளியே காட்டிக்கொள்ளுவது கிடையாது. ஆகவே, நீங்கள் ஒன்றுக்கொன்று விரோத குணங்களை உடையவராக, விரோத குணங்களெல்லாம் திரண்டு வந்திருக்கிறீர். விரோத குணங்களைக் கொண்டது உங்கள் உருவம்.

" பழைய பாடல் ஒன்று உண்டு. திலீப சக்கரவர்த்தியின் அருங்குணங்களைப் பற்றிக் கூறும்படியான பாடல் அது. அதாவது

அறிவில் மனமும் வலிவில் குறையும் இலங்க
அருள்கொடையின் நெறி பகர்தல் இன்மை
ஒரு நிஜப் படாத நிலையாய பிறிவில்
விரோத குணம் என்னபெறுமே

திலீப சக்கரவர்த்தியுடைத்தாயிருந்த அருங்குணங்களையெல்லாம் தாங்கள் பெற்றிருக்கின்றீர்கள். அந்தக் குணங்களெல்லாம் உங்கள் பால் திரண்டுள்ளன.

"இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த நீங்கள் இந்தச் சபையை மிகவும் திறமையாகவும் அழகாகவும் எல்லோருடைய உள்ளங்களும் பெருமிதமடையக் கூடிய முறையிலும் நீங்கள் நடத்தி வந்திருக்கிறீர்கள். அதைப்பற்றி நாங்கள் பெருமைப் படுகிறோம். ஹரிஜனங்களுக்கு உண்மையிலேயே மிகவும் பெருமை உண்டாயிருக்கிறது. காங்கிரசுக்கும் பெருமை, தமிழ் நாட்டுக்கும் ஒரு தனிப்பெருமை. ராஜாஜி அவர்கள் முதல் மந்திரியாக இருந்த காலத்தில் நாங்கள் அடிக்கடி கேட்பதுண்டு. ஹரிஜன மந்திரி இன்னொருவர் வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தபோது ராஜாஜி அவர்கள் சொல்வதுண்டு, ' அதோ சபாநாயகராக உட்கார்ந்திருக்கிருரே, எதற்கு வேறு மந்திரி வேண்டுமென்று கேட்கிறீர் ?' என்று அவர் சொல்வார். இனி எந்த ஹரிஜன மந்திரியைக் கொடுக்கப் போகிருர்களோ தெரியவில்லை.

" இளமைப் பருவத்திலேயே நீங்கள் ஹரிஜனங்களுக்காகப் பாடுபட்டவர்கள். தாங்கள் எம்.ஏ. வகுப்பில் பிரசிடென்சி காலேஜில் படித்துக்கொண்டிருக்கும்போது என்போன்ற சந்நியாசியைக்கூட அழைத்துக் கொண்டுபோய் பிரசங்கம் செய்யச் சொன்னீர்கள். அந்த சமயத்தில் நான் பகவத்கீதையிலிருந்து ஒரு ஸ்லோகத்தைச் சொல்ல ஆரம்பித்தவுடனே அங்குள்ள பிராம்மணர்களெல்லாம் உங்களை வெறுத்தார்கள். ஒரு ஹரிஜனனைக் கொண்டு வந்துவிட்டீர்களே என்று அப்பொழுது உங்களைத் திட்டினர்கள். அதையும் நான் பார்த்திருக்கிறேன். இள வயதிலிருந்தே நீங்கள் ஒன்றிரண்டு நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

" நீங்கள் எங்களை விட்டு உயர் பதவிக்குப் போவது எப்படியிருக்கிறதென்றல், உணவு தேடிக்கொடுக்கும் தாய்ப் பட்சி குஞ்சுகளை விட்டு விட்டுப்போய்விட்டால் குஞ்சுகள் என்ன தவி தவிக்குமோ அந்த நிலையில் நாங்கள் உங்களை விட்டுப் பிரிவது இருக்கிறது. ஹரிஜனங்கள் அந்த நிலையில்தான் தவித்துக்கொண்டிருக்கிறோம்.

[Sri A. S. Sahajananda] [10th August 1955

சென்னை நகரத்திலுள்ள ஹரிஜனங்கள் மட்டுமல்ல, சென்னை ராஜ்யத்தில் உள்ளவர்களெல்லோருமே உங்களைப் பிரிந்து தவிக்கப் போகிறோம். 'ஊண் இடும் ஒரு தாய் தீத்த பார்க்குப் பார்ப்பன உளம் குலைந்தான்.' நாளையதினம் யாரிடத்தில் வந்து யார் குறை சொல்லிக்கொள்வார்கள் ? யார் எங்கு போய் சிபாரிசு கேட்பார்கள் ? 'அங்கு இன்னும் யார் இருக்கிறார், கூப்பிடு' என்று கனவிலே கூட நீங்கள் சொல்லிக்கொண்டிருப்பீர்களே! அந்த முறையில் அல்லவோ நீங்கள் உங்களை நாடி வந்தவர்களுக்கு உதவி வந்தீர்கள். அப்படிப்பட்ட தயாள குணம் உங்களுக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட மகானை இனி நாங்கள் அடையமாட்டோம். ஆனால், ஒரு விஷயம். நீங்கள் போகின்ற இடத்திலே பலருக்குப் பயன் படுவதற்காகப் போகிறீர்கள். கடவுள் அப்படித் தெரிந்துதான் உங்களை அனுப்புகிறார். அங்கே கூட சில நன்மை நடக்குமென்று நம்புகிறேன்.

"மகாத்மா காந்தியின் வாக்கு பொய்க்காது. கடவுளின் வார்த்தையைவிட அடியார்களின் வார்த்தைக்கு மிகுந்த சக்தி உண்டு. மகாத்மா காந்தி என்ன சொல்லிக்கொண்டிருப்பார் என்றால், இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஒரு பெண் வரவேண்டுமென்று கூறுவார். நான் சொல்கிறேன். ஒரு ஆண் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரவேண்டுமென்று. மகாத்மா காந்தியின் வாக்கு பொய்க்காமல் நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்து எங்களையெல்லாம் சிறப்பிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த வகையில் ஆண்டவன் அருள் புரியவேண்டுமென்று நான் பிரார்த்தித்துக்கொள்ளுகின்றேன்."

11–50 a.m. SRI M. PALANIYANDI :—"அவைத் தலைவர் அவர்களே, இன்று நமது சபையிலே கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசும் காலத்தில் உண்மையாக எங்களைப்போன்றவர்களெல்லாம் புதிதாக 1952-ம் வருஷத்தில் இந்தச் சபைக்கு வந்த காலத்தில் தாங்கள் எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்ததோடு அல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு எங்களையெல்லாம் வைத்துக்கொண்டு சமாளித்து ஒரு நல்ல பாரம்பரியத்தை சிருஷ்டி செய்துவிட்டுச் செல்லுகிறீர்.

"மேலை நாடுகளில் சட்டசபை சபாநாயகராக வருபவர் 30, 40 வருஷங்கள் சேர்ந்தாற்போல் பதவி வகிப்பதாகக் கேள்விப்படுகிறோம், புத்தகங்களில் படித்தும் இருக்கிறோம். இந்த நான்கு ஆண்டுகளுக்குள்ளாகவே நீங்கள் மத்திய சர்க்காரில் பதவி வகிக்கப்போகிறீர்கள். சட்டசபை சபாநாயகர் பதவியைவிட அது பெரிய பதவியாக இல்லாவிட்டாலும், அந்தப் பதவியின் மூலமும் நீங்கள் நாட்டுக்கு நல்லதொரு சேவையைச் செய்யப் போகிறீர்கள்.

"நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியிலிருந்து வந்திருந்தாலுங்கூட ஜனநாயகத்தை எப்படிக் காப்பாற்றியிருக்கிறீர்கள் என்பதை நாங்கள் பார்த்து வருகிறோம். சபாநாயகர் என்பவர் எந்த ஒரு கட்சியிலிருந்தும் வராதவராக இருந்து தனிப்பட்ட முறையில் சபாநாயகராக வரவேண்டுமென்று நியதி இருந்தாலுங்கூட, தாங்கள் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவராக இருந்து, சபாநாயகராக இருந்தாலுங்கூட, எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் சலுகை காட்டாமல் நடு நிலைமை தவறாமல், ஜனநாயகப் பண்போடு, இவ்வளவு ஆண்டுகளாக சபாநாயகர் பதவியை திறம்பட வகித்துவருகிறீர்கள் என்பது மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய விஷயம்.

"இந்தியாவில் எல்லா ராஜ்யங்களிலும் சட்டசபைகள் நடந்துவருகின்றன. அங்கும் சபாநாயகர்கள் இருந்துவருகிறார்கள். சட்டசபை சபாநாயகர் பள்ளிக்கூட மானிட்டர்களைப் போலவும், அங்கத்தினர்கள் மாணாக்கர்கள்போலவும் இருக்க தாங்கள் இங்கு பெரும்பதவி படைத்துவிட்ட காரணத்தினால் அங்கத்தினர்களுடன் தோழமைபூண்டு, எங்களையெல்லாம் சட்டசபை அலுவல்களில் ஊக்குவித்திருக்கிறீர்கள். சட்டசபை நடவடிக்கைகளில் எல்லா அங்கத்தினர்களும் பங்கெடுத்துக்கொள்ளக்கூடியவகையில் உற்சாகம் அளித்தும் நல்ல முறையில் வழிகாட்டியும் வந்திருக்கிறீர்கள்.

10th August 1955] [Sri M. Palaniyandi]

"நீங்கள் 'ரூலிங்' கொடுப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம். தங்களுக்குக் கோபம் வருவதையும் நாங்கள் பார்த்திருக்கிறோம். தாங்கள் பேசும்போது அங்கத்தினர் யாராவது குறுக்கே எழுந்து ஏதாவது சொல்ல வேண்டுமென்று நிற்கும்போது, நீங்கள் உடனே 'உட்காருங்கள்' என்று கண்டிப்பாகப் பேசுவீர்கள். நாங்கள் அப்பொழுதெல்லாம் உண்மையிலேயே நடுங்கிப் போய்விடுவோம். தாங்கள் உண்மையிலேயே கோபம்கொண்டிருக்கிறீர்களோ என்றும் அஞ்சுவோம். ஆனால், அடுத்த விநாடியே தங்களுடைய கருத்த மீசைக்குக் கீழே வெளுத்த சிரிப்பு வரும். எங்களுக்கு அப்பொழுதுதான் உயிர் வரும். சபாநாயகர் அவர்கள் மகிழ்ச்சியாகவும் ஆனந்தமாகத்தான் இருக்கிறார் என்ற எண்ணத்தில் சந்தோஷப்படுவோம். இந்த அனுபவத்தை சென்ற நான்கு ஆண்டுகளாகப் பார்த்துக்கொண்டு வருகிறோம். பல சமயங்களில் தாங்கள் கோபப்படுவது போல் இருக்கும். நாங்களும் பயந்துவிடுவோம். ஆனால், எங்களை முதலில் நீங்கள் உட்கார வைத்தாலும் பிறகு சாவதானமாக, சட்டத்தைச் சொல்லி விளங்கவைத்து, எந்தெந்த முறையில் காரியங்களைச் செய்யவேண்டுமென்று எங்களுக்கு புத்திமதி புகட்டுகிறீர்கள். அதன்படி நாங்கள் நடந்துவந்திருக்கிறோம். தாங்கள் ஜனநாயகப் பண்பிலே காரியங்களை இங்கு நடத்தி வந்ததின் மூலம் சட்டசபையில்கூட ஜனநாயக ரீதியிலே எப்படிக் காரியங்களைச் செய்ய முடியும் என்ற கருத்தைக் காண்பித்திருக்கிறீர்கள். அதுவும் பொருத்தமான விஷயம். பல கட்சியினரும் உங்களை ஒரு நல்ல முக்கிய புருஷராக கருதிவந்திருக்கிறார்கள்.

"சோஷலிசத் தன்மை வாய்ந்த சமுதாயத்தை சிருஷ்டி செய்ய வேண்டும் என்று ஆவடியில் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. சபாநாயகர் விஷயத்தில் அவர் சட்டசபை நடவடிக்கைகளை நடத்திக் கொண்டு வரும் முறையில் சோஷலிசத் தன்மை வாய்ந்த சமுதாய அமைப்புத் தன்மையில் இருக்கிறது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். கேள்வி நேரங்களின்போது தாங்கள் நடந்து கொள்ளும் விதம் மிகவும் பாராட்டத்தக்கது. பெரும்பான்மையான மக்களைப் பாதிக்கும் பிரச்னை வரும்போது, ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்னை வரும்போது, தாங்கள் அப்படிப்பட்ட கேள்விகளுக்கு அதிக நேரம் தருவது வழக்கம். சாதாரண கேள்விகளாக இருந்தால் சிறிது நேரம் கொடுத்துவிட்டு அடுத்த கேள்விகளுக்குப் போய்விடுவது வழக்கம். அந்த முறையில் தாங்கள் மனிதத் தன்மையுடன் நடந்துவந்திருக்கிறீர்கள். பெரும்பான்மையான மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்னையாகவும் ஏழை மக்களை பாதிக்கக்கூடிய பிரச்னையாகவும் இருந்தால் அதிக நேரம் அவகாசம் கொடுத்து, அதைப் பற்றி விவாதிக்கவைத்து, நியாயம் கிடைக்கச் செய்திருக்கிறீர்கள். மந்திரிகள் வாக்குறுதியளித்த பின்புதான் அம்மாதிரி கேள்விகளில் தாங்கள் அடுத்த கேள்விகளுக்குப் போயிருக்கிறீர்கள்.

"பல பேர்கள் சட்டசபையிலே பேசும்போது அவர்களை ஊக்குவித்து இன்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று வழிகாட்டிவந்திருக்கிறீர்கள். சட்டசபை நடக்கும்போதும், சட்டசபை அலுவல்கள் நடந்த பிறகு, உங்களுடைய அறையிலேயே அங்கத்தினர்களுக்குச் சட்டசபை நடைமுறை சம்பந்தமாக யோசனை சொல்லிவந்திருக்கிறீர்கள். நீங்கள் இங்கிருந்து மத்திய சர்க்காருக்குச் சென்றாலுங்கூட, தமிழ்நாட்டை நீங்கள் என்றும் மறந்துவிடமுடியாது. தமிழ்நாட்டு மக்களும் உங்களை என்றும் மறந்துவிடமாட்டார்கள். ஏனென்றால் தாங்கள் ஒரு பாரம்பரியத்தையே சிருஷ்டி செய்துவிட்டுப் போகிறீர்கள். சட்டசபை நடைமுறை விஷயத்தில், வரக்கூடிய சபாநாயகரும் தாங்கள் சென்ற பாதையிலே தாங்கள் சிருஷ்டி செய்துவிட்டுப் போகிற பாரம்பரியத்திலே நடந்துகொள்வார்களானால், புன் சிரிப்போடும், தோழமையோடும் நடந்துகொள்வார்களானால் புதிய சபாநாயகருக்கு யாதொரு சிரமும் இருக்காது. எல்லாக் கட்சியினரித்திலும் எப்படி ஒரே மாதிரியாக சபாநாயகர் நடந்துகொண்டுவந்தார்களோ அதே முறையில் வரும் சபாநாயகரும் நடந்துகொண்டால் இதுவரை சிருஷ்டிக்கப் பட்ட பாரம்பரியத்தைக் கடைப்பிடித்தவராவார்.

" சட்டசபை நடக்கும்போது கேள்வி நேரத்தில் அங்கத்தினர்கள் தங்கள் இடத்தில் எழுந்து நின்றால் அவரைக் கேள்வி கேட்க அனுமதிப்பது உண்டு. ஏதாவது ஒரு மசோதா விவாதத்தில் இருக்கிறதென்றால், அப்பொழுது அந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளுபவர்களின் பெயர்களை கட்சி வாரியாக எழுதிக்கொடுத்து சபாநாயகரிடம் கொடுத்துவிடுவது வழக்கம். சபாநாயகரை நம்பி பெயரை எழுதிக்கொடுத்துவிடுவார்கள். அவர் அதன் பிரகாரம் கூப்பிட்டு எல்லோருக்கும் பேச சந்தர்ப்பம் அளிப்பார். இந்த முறை இல்லாவிட்டால் பேச விரும்பும் அங்கத்தினர்களில் 50 பேர்களுக்குக் குறையாமல் ஒவ்வொரு தடவையும் எழுந்து நிற்கவேண்டியிருந்திருக்கும். சபாநாயகரின் கண்ணில் விழவேண்டும் என்று பிரயத்தனப்படுவார்கள். அப்படியில்லாமல் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து சபாநாயகரின் பேரில் நம்பிக்கையின் காரணமாக நாங்களும் பெயர்களைக் கொடுக்கின்றோம். நீங்களும் எல்லோருக்கும் பேச சமசந்தர்ப்பம் அளிக்கின்றீர்கள். நாங்களெல்லாரும் புதிதாக வந்த அங்கத்தினர்களாக இருந்தாலும் எல்லோரும் தேவைப்படும்போது பேச அவகாசம் அளித்திருக்கிறீர்கள். மற்ற ஹரிஜன அங்கத்தினர்கள் பேசுவதற்கும் சந்தர்ப்பம் அளிக்க நீங்கள் தவறுவதேயில்லை. இம்மாதிரி நீங்கள் எல்லோரையும் ஒருமுகமாக பாவித்தற்கும், தகுந்த வழிகாட்டியாக இருந்தமைக்கும், பேச சமசந்தர்ப்பம் அளித்தமைக்கும் நாங்கள் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

" ஜனநாயக முறையில் தேர்தல் நடந்து, சட்டசபை 1946-ம் வருஷம் கூட்டப்பட்டது. அப்பொழுது நான் அங்கத்தினராக வந்ததற்குப் பிறகு உங்களைத் திருச்சியில் வரவேற்கக்கூடிய பெருமை எனக்குக் கிடைத்தது. அப்பொழுது நான் காங்கிரஸ் ஊழியனாக இருந்தேன். புதுக்குடி என்ற கிராமத்தில் நீங்கள் வந்திருக்கிறீர்கள். அங்கு நடந்த மகாநாட்டுக்குப் பிறகு அய்யம்பாளையத்திலுள்ள கோயிலுக்குப் போவதற்குத் திட்டமிட்டிருந்தோம். அய்யம்பாளையம் சென்று கோயிலில் நுழையும்போது அங்கு தடை செய்யப்பட்டது. பட்டினி கிடந்தாவது கோவிலில் நுழைந்தே தீருவேன் என்று 1947-ல் புகுந்திருக்கிறீர்கள். சபாநாயகர் ஆக நீங்கள் அப்பொழுது பதவி வகித்தும், உங்களையே அப்பொழுது கோயிலில் நுழையக்கூடாதென்று தடுத்தார்கள். இரண்டு நாள் சென்றது. இருந்தாலும் நுழைந்தே தீருவேன் என்று உண்ணாவிரதம் இருந்தீர்கள். அதன் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஊழியம் செய்யும் காங்கிரஸ் ஊழியனாக 1946–47லிருந்து தாங்கள் எனக்கு ஆதர்ச புருஷனாக இருந்து வந்திருக்கிறீர்கள். ஹரிஜனத் தொண்டு உண்மையாகச் செய்யவேண்டுமென்பதற்காகத் தாங்கள் அரும்பாடு பட்டீர்கள். அதன் காரணமாக கஷ்டம் ஏற்பட்டது. மிராசுதார்கள் எதிர்த்தார்கள். சுதந்திரம் பெற்ற பிறகும் ஜாதி வெறி அதிகமாக இருந்த காலத்தில் தாங்கள் சபாநாயகராக இருந்தும் ஹரிஜனங்களுக்காச மிகவும் அரும்பாடு பட்டிருக்கிறீர்கள். அதற்காக உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு இன்னும் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளைத் தாங்கள் செய்வதற்கு முன்வருவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஹரிஜனங்களில் பெரும்பாலோர் உத்தியோகத்தில் அமரும்படித் தாங்கள் செய்வீர்கள் என்று நம்பிக்கொண்டு, தாங்கள் டில்லிக்குச் சென்று அங்கு நீண்ட ஆயுளோடு நல்ல திடகாத்திரத்துடன் இருந்து நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்ததொரு தொண்டு செய்வீர்கள் என்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்."

MR. SPEAKER :—" There are still a large number of hon. Members who want to speak."

SRI S. THINAKARASAMY THEVAR :—" சபாநாயகர் அவர்களே, சபாநாயகர் என்ற பதவிக்கு தாங்கள், ஒரு தனி அழகைத் தேடிக்கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு இந்த தேசத்திலே, இந்த சபாநாயகர் என்ற பெயருக்கும், அந்தஸ்துக்கும், தனி அழகு,

10th August 1955] [Sri S. Thinakaraswami Thevar]

பெருமை, தங்களைக்கொண்டு தான் வந்திருக்கிறது. தங்களுடைய மகோன்னத சேவை, பெருமை இந்த தேசத்திற்கே முதல் வழி காட்டியாகவும், இந்த மாகாணத்திற்கு முதல் ஸ்தானமும் வாங்கித்தந்திருக்கிறது. ஆகவே தங்களுடைய சேவை இந்தச் சட்ட சபை என்றென்றும் மறக்கமுடியாத ஒரு மகோன்னத சேவையாகும்.''

Sri M. R. RAMACHANDRAN :—'' Sir, I want to know whether we on this side can get two minutes each.''

Mr. SPEAKER :—'' I shall try to give an opportunity to hon. Members who want to speak.''

'' அடுத்தாற்போல், தங்களை, நான்கவனித்தவரையில், சட்டசபையில், சிலசமயங்களில் சாதுர்யமாக நடந்திருக்கிறீர்கள், சந்தர்பத்திற்கு தகுந்தாற்போல் கோபம் காட்டுவது, உடனே சாந்தமாகப் பேசுவது, சமாதானமாகப் பேசுவது இத்தகைய அழகான குணங்களை கையாண்டு, சபையின் நடவடிக்கைகளை திறம்பட நடத்தி இருக்கிறீர்கள். ஆகவே இந்த சபைபோல் இதுவரை, இந்த தேசத்திலே இவ்வளவு திறமையுடன், யாரும் நடத்தி இருக்கமாட்டார்கள் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆகவே, தாங்கள் இந்த சபையைவிட்டு போனபிறகு, தங்களுடைய காலத்தில் இங்கு நடந்த செம்மையான நடவடிக்கைகளை பார்த்த நண்பர்கள், தங்களுடைய திறமையையே கையாண்டு, நல்ல முறையில் இந்த சபையை நடத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

'' அடுத்தாற்போல் தங்களுடைய குணத்தைப்பற்றி சில வார்த்தை கூற விரும்புகிறேன். இப்படி சபாநாயகர் ஆன நிலைமையிலும், எளிய வாழ்கை, எல்லாரிடமும் அனுதாபம்கொண்ட தன்மை, அலட்சியம், அகம்பாவம் இல்லாத தன்மையைத்தான் தங்களிடத்திலே நான் பார்க்கிறேன். இம்மாதிரி உயர்ந்த குணங்களை வேறுயாரிடமும் பார்க்கமுடியாது. அவரிடம் படாடோபமான வாழ்கையே கிடையாது. சாதாரண வாழ்கை தான், ஏழைகளிடத்தில் எப்போதும் அநுதாபம் கொண்டவர். இம்மாதிரியான குணங்கள் உங்களைப்போன்ற உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்கு கட்டாயம் இருக்கவேண்டும்.

'' அடுத்தாற்போல், இங்கு பலர், தாங்கள் ஏற்றுக்கொள்ளப்போகும் பதவி இப்போது இருப்பதைவிட தாழ்ந்ததா, உயர்ந்ததா என்று பேசினார்கள். நான் சொல்லுகிறேன், கனம் சிவஷண்முகம் பிள்ளை அவர்கள், ஸ்தானத்தைப்பற்றி, பதவியைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை. இந்த தேசமக்களுக்கு, ஹரிஜனங்களுக்கு பிற்போக்கான சமுதாயத்திற்கு, எந்தெந்தவகையில் சேவை செய்யமுடியும் என்பதைப்பற்றித்தான் முக்கியமாக கவனிக்கவேண்டும். இன்றைக்கு சபாநாயகராக இருந்துகொண்டு, தாங்கள் நல்ல சேவை செய்திருக்கிறீர்கள். அதேபோல் தாங்கள் யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் மெம்பராகவும், இச்சமூகங்களுக்கும் நாட்டு மக்களுக்கும் விசேஷமான, அதிகமான சேவை செய்யமுடியும். இந்த மாகாணத்தை பொறுத்தவரையில் ஹரிஜனங்களுக்கும் பிற்போக்கு சமூகத்திற்கும், விசேஷ சேவை செய்யமுடியும். இந்த சட்டசபையைவிட்டு, தாங்கள் போவது எங்களுக்குக்கு துக்கமாக இருந்தாலும், தாங்கள் இனிமேல், புதிய பதவிக்குப்போய், அங்கு சேவை செய்யப்போவதைப் பார்த்து சந்தோஷப்படுகிறோம். இத்துடன் நிற்காமல், சந்தர்ப்பம் கிடைத்த காலத்தில், தாங்கள் பார்லிமெண்ட் சபைக்கும் சென்று அதன்பின்னர், அந்த சபையின் தலைவராகவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். உங்களுக்கு நல்ல நீண்ட ஆயுளும், நல்ல உடல் சக்தியும் ஆண்டவன் கொடுத்து, நீங்கள் இந்த தேசத்திற்கு விசேஷ சேவை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.''

*Sri K. T. RAJU :—'' கனம் சபாநாயகர் அவர்களே, நீங்கள் 12 noon.
இச்சபைத்தலைவராக இருக்கும்போது, நாங்கள் அங்கத்தினராக இருக்க வாய்ப்பு கிடைத்ததற்காக, பெருமைப்படுகிறோம். எங்களில் அநேகர், என்,

எல்லோருமே, புதிதாக இச்சபைக்கு அங்கத்தினராக வந்தவர்கள். அநேக சமயத்தில், நாங்கள் **point of order** என்று சொன்ன வுடன், அதனுடைய உண்மை தெரியாது, தாங்கள் கோபப்பட்டுவிட்டீர்கள் என்று நினைத்து, இது என்னநியாயம், பேசவிடமாட்டார்போல் இருக்கிறது என்று நினைத்தது உண்டு. இருந்தாலும், அங்கத்தினர்கள் மேல் அனுதாபம் காட்டி பேசவிட்டு, அதன் பின்தான், அது எப்படி **point of order** ஆகாது என்று விளக்குவீர்கள். அனேக புஸ்தகங்களைப்படித்து, சட்டசபையினு டைய அங்கத்தினர்களின் தாரதம்மியத்தை தெரிந்து, எங்களை ஊக்கு வித்து,எங்களைப்போன்றவர்களை நல்ல பார்லிமெண்டேரியனாக, தயார்செய்து இருப்பதற்காக நாங்கள் உண்மையிலே மிகப் பெருமைபடுகிறோம்.

" அடுத்தபடியாக, இதுவரை எல்லோரும், தாங்கள் கொடுக்கும் **ruling**-களைப்பற்றி பேசினார்கள். உங்களுடைய கண்களின் பார்வையி லிருந்தே அல்லது முகத்தோற்றத்திலிருந்தே, நீங்கள் எந்த விதமான ரூலிங் கொடுக்கப்போகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அந்த அளவுக்கு உங்களுடைய முகத்திலுள்ள கண்கள் அமைந்திருக்கின்றன. இதை எந்த புஸ்தகம் படித்தாலும் கற்றுக்கொள்ள முடியாது. நண்பர் பாலகிருஷ்ணன் அவர்கள் நேற்று பேசும்போது, விஷயத்தைவிட்டுவிட்டு, பூசனிக்காய் போவது இந்த சர்க்காருக்குத் தெரியவில்லை என்று ஆரம் பித்தார். இருந்தாலும் நீங்கள் அதையும் கண்ணியத்துடன் அனுமதித் தீர்கள். நாங்கள் ஏதாவது பேசிக்கொண்டிருக்கும்போது, ஏதாவது தவறு தல் நடந்தால், தங்களுடைய **room**க்கு வந்து பேசவேண்டுமென்று சொல்லு வீர்கள். ஆனால் நாங்களே, பேசினது தவறு என்று உணர்ந்து உங்களு டைய **room**க்கு வரமாட்டோம். இதுமாதிரி பல விஷயங்களில் எங் களுக்கு மறைமுகமாக, பலசமயங்களில் எடுத்துச்சொல்லியிருக்கிறீர்கள் மந்திரிகளுக்கு, கேள்விநேரத்தில், சில சந்தேகங்கள்வரும், அந்த சமயங் களில் எல்லாம், சொல்லாமல் சொல்லி திருத்துவீர்கள். அதே மாதிரி நாங்கள் தவறு செய்தாலும் திருத்துவீர்கள், உதவியும் செய்வீர்கள்.

" உண்மையாகவே, இந்த சபையின் நடவடிக்கைகளை பார்க்கும்போது நம் நாட்டுக்கே, முக்கியமாக தமிழ்நாட்டுக்கே பெருமை கொடுக்கத்தக்க, வகையில் இச்சபையை நடத்திவந்திருக்கிறீர்கள். பல பெரியவர்கள், இங்கு பேசி உங்களுக்கு ஆசீர்வாதம் செய்திருக்கிறார்கள். எங்களை, நீங்கள்தான் ஆசீர்வதிக்கவேண்டும். உங்கள் ஆசீர்வாதம் இருந்தால்தான், நாங்கள் இங்கு மேற்கொண்டு தொடர்ந்து பணியாற்ற உதவியாக இருக்கும். நீங்கள் டில்லிக்கு போனபிறகு நாங்கள் எதிர்ப்பார்ப்பதெல்லாம், நாங்கள் சிபார்சு செய்யும் ஆட்களுக்கு வேலைகொடுக்கவேண்டுமென்பது அல்ல, அப்படி நாங்களும் கேட்கமாட்டோம், நீங்களும் செய்யமாட்டீர்கள். நாங்கள் எதிர் பார்ப்பதெல்லாம் தமிழ் நாட்டின் கௌரவம் உயர்த்தப்படவேண்டுமென்பது தான். தமிழ் நாட்டை கௌரவப்படுத்துவதற்காகத்தான், மத்திய சர்க்கார் உங்களுக்கு இந்த பதவியை கொடுத்திருக்கிறது. அக் கௌரவத்தை நீங்கள் மேன்மேலும் உயர்த்துவீர்கள் என்றே நம்புகிறோம். கடைசியாகச் சொல்லு கிறேன். நீங்கள் நல்ல குணங்களுடன் இச்சபையை நடத்தி இருக்கிறீர்கள் ; நீங்கள் இனிமேல் இங்கு இல்லாவிட்டாலும், நீங்கள் இதை நடத்திய பரம்பரை இருப்பதால், இச்சபையை மேலும் பெருமைப்படும் வகையில் நடத்துவோம் என்று தங்களுக்கு நாங்கள் உறுதிகூறி, இந்த அளவோடு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

12-5 p.m. * Sri V. S. Sivaprakasam :—" Mr. Speaker, Sir, in moving this Resolution the Hon. the Leader of the House, on behalf of all hon. Members of this House, splendidly appreciated the meritorious service you have done as Speaker of this House. I join with him fully and, as one belonging to the Scheduled Caste, I am really very proud of you.

" Sir, the Hon. the Leader of the House, Dr. Varadarajalu Naidu and other hon. Members have rightly stated that you have

10th August 1955] [Sri V. S. Sivaprakasam]

already demonstrated to all thinking men in the country that if equal opportunities are given to the Harijans, the so-called Untouchables, they will be second to none.

" Sir, apart from other good qualities that have been mentioned here about you, though a beginner here in politics, I have noticed in you a profound ' bhakthi ' and a special philosophy that are unique in themselves. Your philosophy and policy have not only got the appreciation from all the political parties and individuals but also their respect for your impartiality and justness. Sir, I have heard about the great philosophers of the world. Because of their love for their own philosophy, they hated others. For example, Berkeley the philosopher, because of his love for idealism, hated Materialism. So also yet another philosopher, David Hume because of his love for Materialism, hated Idealism. Mind destroying matter, matter destroying mind. So also reason against feeling. There are Parties here which are similar to these philosopers—for example, the Communist Party, the Socialist Party and the Dravidian Parliamentary Party. But somehow or other your philosophy and policy have been very realistic and successful because they have got the appreciation and commendation of various political Parties. I can only conclude by saying that not only Harijans and Backward Classes the entire people here pray for your long and prosperous life. With these words, I support the Resolution."

* **Sri A. GOVINDASWAMY NAYAGAR** :—கனம் சபாநாயகர் அவர்களே இன்றைய தினம் நீங்கள் எங்களிடமிருந்து பிரிக்கப்படுகின்றீர்கள். இதை நினைக்கும்போது குறிப்பாக எதிர் கட்சியில் இருக்கிற எங்களுக்கு மிகவும் கஷ்டத்தையும், வருத்தத்தையும் அளிக்கிறது. கண்ணீரோடுதான் உங்களை வழியனுப்புகிறோம். தமிழ்நாடு அறிவுக்கும், திறமைக்கும், நேர்மைக்கும் முதல் ஸ்தானம் பெற்றது என்பதை தங்கள் மூலம் உணர்த்தி வருகிறது. அறிவுக்கும், திறமைக்கும் உயர்சாதிக்காரர்கள் என்று சொல்லப்படுகிற ஆரியர்கள்தான் உறைவிடம் என்ற நிலைமை மாறி, இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலும், நல்ல திறமைசாலிகளும், அறிவுள்ளவர்களும், அனுபவம் உள்ளவர்களும், அன்பு உள்ளம் படைத்தவர்களும் இருக்கிறார்கள் என்பதை, தங்கள் மூலம் இந்த சபையானது இன்றைக்கு நிரூபித்துகாட்டி இருக்கிறது. இதை நினைக்கும்போது நாங்கள் பெருமைப் படுகின்றோம். ஒரு சிலருக்கு திறமையிருக்கலாம், அறிவிருக்கலாம். ஆனால் அவர்கள் மக்களுடைய பாராட்டுதலையும், நன்னம்பிக்கையையும் பெற்றிருக்கமுடியாது. அதற்கு காரணம் அவர்கள் திருக்குறளை படித்து திருவள்ளுவர் வழி நிற்காததுதான். திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள குணம் தங்களிடம் அமைந்திருப்பதை காண்கிறேன். 12–8 p.m.

' காட்சிக் கெளியன் கடுஞ்சொல்வனல்லனேல்
மீக்கூறு மன்னனிலம்.'

"என்பது திருவள்ளுவரது குறள். அந்த குறளுக்கு தாங்கள் இலக்கணமாக ஆளவந்தவர்கள். எந்தக்கட்சிக்காரருக்கும் எந்த நேரத்திலும் நீங்கள் பேட்டி கொடுக்க தயாராக இருந்திருக்கிறீர்கள். சில சமயங்களில் நீங்கள் எங்களை கடிந்துகொள்ளுவது மாதிரியிருக்கும். ஆனால், நண்பர் கே. டி. ராஜு குறிப்பிட்டதுபோல் உங்கள் அன்புகலந்த கடும் சொல் எங்களை பரவசப் படுத்துவது மாதிரி அமைந்து வந்திருக்கிறது என்பதை சொல்லாமலிருக்க முடியவில்லை.

[Sri A. Govindaswamy Nayagar] [10th August 1955

" தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பல தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள். அப்படித் தோன்றிய தலைவர்களில் ஒரு சிலர் சமுதாயத்தால் தாங்கள் உயர்வடைந்திருக்கிறார்கள். மற்றும் வேறு சில தலைவர்கள் தங்கள் சமுதாயத்தை உயர்வுபடுத்தியிருக்கிறார்கள். தாங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வகுப்புகளில், இரண்டாவது வகுப்பை சேர்ந்தவர்கள் என்பது எல்லா அங்கத்தினர்களும் பேசியதிலிருந்து நான் அறிகிறேன். சிலருக்கு பதவி கிடைத்தால், அந்த பதவிக்கு தகுந்தபடி நடிக்க ஆரம்பிப்பார்கள். ஆடம்பரமான வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களுடைய நன்மதிப்பை இழப்பார்கள். ஆனால் தங்களுக்கு பெரிய பதவி கிடைத்திருந்தபோதிலும் கூட, தாங்கள் முன்னோர்கள் வாழ்ந்த வீட்டிலேயே வாழவேண்டும், பாட்டனார்கள் உட்கார்ந்த நாற்காலியிலேயே உட்காரவேண்டும் என்று கூறுவதை நினைக்கும்போது, நான் மிகவும் மகிழ்வடைகிறேன். உங்களுடைய இந்த அருங்குணம், மிகமிக வரவேற்க தகுந்ததாகவும், பாராட்டத்தகுந்ததாகவும் அமைந்திருக்கிறது. நான் தங்களை, தங்களது அறையில் சந்தித்த நேரத்தில் ' எனக்கு இந்த புதிய பதவி பிடிக்கவில்லை, காரணம் என்னவென்றால் எனக்கு என்னுடைய பாட்டனார் வாழ்ந்த வீட்டையும் அவர்கள் வைத்துச்சென்ற நாற்காலியையும் விட்டுப்போவது என்பது வருத்தத்தை தருகிறது என்றீர்கள்.' தாங்கள் வகித்துவரும் 'speaker' ஸ்தானத்தின் நாற்காலியை விட்டுப் போகவேண்டியிருக்கிறதே எனபதற்காக வருத்தப்படவில்லை. தாங்கள், தங்களுடைய பெற்றோர்களுக்கும், முன்னோர்களுக்கும் காட்டிய மரியாதையை பார்க்கும்போது, அது எங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. சட்ட சபை சட்ட நுணுக்கங்களை அதிகம் உணர்ந்திருந்தும்கூட, சிறிதும் செருக்கில்லாமல், அன்பு வழி நின்று, எதிர் கட்சிக்காரர்களுடைய நன்மதிப்பை பெற்ற தலைவர் யாராவது இருக்கிறார்கள் என்றால், அது தாங்கள்தான் என்பதை இந்த சபை நன்கு உணரும். குறிப்பாக எதிர் கட்சியில் இருக்கிற எங்களுக்கு, தாங்கள் எங்களை விட்டுப் பிரிவது, பெரிய நஷ்டம் என்றே கருதுகிறேன். ஆனால் ஆளும் கட்சியில் இருப்பவர்கள், தாங்கள் போனால், நமக்கு அந்த பதவி கிடைக்காதா என்று நினைக்கலாம். எங்களுக்கு இத்தகைய தலைவரை இழக்கின்றோமே, வேறு தலைவர் இந்த இடத்தை பூர்த்தி செய்ய முடியுமா என்ற கலக்கம் இருந்துதான் வருகிறது.

" வட நாட்டுக்காரர்கள் தமிழ் நாட்டவரை மதிப்பதில்லை. உத்தியோக விஷயங்களிலும் நியாயம் வழங்குவதில்லை. அத்தகைய வட நாட்டவருக்கு தகுந்த புத்திமதி சொல்லி, தங்களுடைய சீரிய பண்புகளால் அவர்களை பரவசப்படுத்தி, தமிழ் நாட்டை பொருத்தவரையிலும் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும் தாழ்ந்த சமூக மக்களுக்கும் தகுந்த நியாயம் கிடைக்கும்படி வாதாடுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

" இயற்கையாகவே, தாங்கள் ஒரு வெற்றி வீரராக விளங்கி வருகிறீர்கள். வெளிப்படையாக அதை விளக்கவேண்டுமென்றால், எல்லோருக்கும் சதாரணமாக 'ஜே' பின்னால் வரும், அதாவது உதாரணமாக 'காமராஜருக்கு ஜே.' என்று ஜெயம் பின்னால் வரும். ஆனால் உங்களுக்கு இயற்கையாகவே தங்கள் பெயருக்கு முன்னால் 'ஜே' ஜே. சிவஷண்முகம் பிள்ளை என்று முன்னால் வருகிறது. ஆகையால் இயற்கையிலேயே வெற்றி வீரராக அமைந்திருக்கும் தாங்கள், எந்த இடத்திற்கு சென்றாலும், எந்த துறையில் இறங்கினாலும் வெற்றி பெறுவீர்கள் என்றிருப்பதால் தமிழ் நாட்டின் பெருமையை வட நாட்டிலும் நிலை நாட்டி, வடநாட்டு சர்க்காரின், மத்திய சர்க்காரின் ஜனாதிபதியாக வரமுடியாவிட்டாலும், திராவிட நாட்டின் தளபதியாக வரப்போகிறீர்கள் என்று கூறிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

DR. U. KRISHNA RAO :—" Mr. Speaker, Sir, let me offer my felicitations and add them to the many encomiums that have been poured on you this morning. I am in a peculiarly advantageous position in that I have worked with you and under you in many

10th August 1955] [Dr. U. Krishna Rao]

spheres of public life. I will recall the long association I have had with you in the Madras Corporation. When you were the Mayor of Madras I have had the privilege of serving as Deputy Mayor under you. I can, therefore, speak with authority about your fearless work as Mayor. I have also had the privilege of being in the House when you were the Speaker. I was in office and I am now out of office and therefore I can view with dispassionate attention your rulings. Whether one is in office or out of office I can say that so far as your dealings in this House are concerned they have been characterised by, in my opinion, five features. Your integrity has been unquestioned. Your character has been unassailed. Your fearlessness has been a typical characteristic of you. Whether the recipient who received your ruling was in the Treasury Benches or whether he was in the Opposition or whether he was an ordinary Member of the House, who the recipient was did not matter to you. If you thought that what you said was right, the recipient did not matter and you did what was correct. Your independent spirit was also very much in evidence and Member after Member has paid a tribute regarding that. You were not afraid of any party, any person or any individual and what you thought right you did. Beyond all these and perhaps surpassing qualities has been your humility. If people who have seen you in this House see you outside this House they will wonder if the Sivashanmugam Pillai they speak of to-day is the same Hon. the Speaker in this House, for humility is a characteristic of your personal life. Sir, many who have seen you sitting in this House here would be surprised at the very simple nature of your life outside. Reference was made by Dr. K. B. Menon and others to the very small and humble abode in which you stay. You have been in that abode for more than fifteen years. Ever since I knew you, you were in that house. Position, honour and elevation did not upset your equillibrium and you occupy the same house even now which in my opinion is a thing to be copied by many. I am not sure how many have spoken about your intensely religious feelings. I have been trying to contact you for the last one week but it has been a difficult chase. Whenever I come round, I see you either in a religious procession with God or either addressing a religious group or associating yourself with some religious talk. People who know you, Sir, will perhaps realise the value of the fear of God and love of God that has characterised all your work.

" Your are leaving us. The loss is ours. It will be a difficult thing for us to replace you. It will be difficult to get a successor of your type. But whoever comes after you, my only hope is that he will follow in your footsteps, wise rulings and advice.

" My only prayer, therefore, is that in your new sphere you will do well and may God give you long life, good health and happiness to serve our country to the best of your ability."

SRI P. JEEVANANDAM:—"கனம் அவைத் தலைவர் அவர்களே, அரசாங்கக் கட்சித் தலைவர்கொண்டுவந்திருக்கிற நன்றி அறிதல் பிரேரணையை ஆதரிக்க நிற்கிறேன். எனக்கு உங்களை 1927-28-ம் ஆண்டுகளிலிருந்தே 11-14 a.m.

[Sri P. Jeevanandam] [10th August 1955

தெரியும். பல சந்தர்ப்பங்களில் நாம் சந்தித்து இருக்கிறோம். ஆனால் கொள்கையைப் பொறுத்த வரையில் எதிரும், புதிருமாக நாம் சந்தித்து இருக்கிறோம். இந்தச் சபையில் கடந்த $3\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு மேலாக நான் அங்கத்தினர் என்ற தோரணையில் உங்களை நன்கு உணர்ந்து சந்திக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

"முதன்முதலாக உங்களிடத்தில் இருக்கும் அசாதாரணத் தன்மை என்ன என்பதை எப்படி நான் பார்க்கிறேனோ அப்படியே எடுத்துக் கூற விரும்புகிறேன். அலட்சியமும், அகம்பாவமும் மலிந்து நிற்கிற காட்சியை நாட்டில் மட்டுமல்ல, நம்முடைய சூழ்நிலையிலேயே இன்றைக்குப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட அலட்சியம், அகம்பாவம் என்ற இரு குணங்களும் உங்களிடம் கொஞ்சம்கூடக் கிடையாது. குறிப்பிட்ட ஸ்தானத்தில் இருக்கிறீர்கள் என்ற தன்மை தங்களிடத்தில் கிடையாது. சபாநாயகர் பதவி என்றால் அதனை முழு மூச்சுடன் அனுபவிப்பதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள். எந்தப் பதவியில் இருந்தாலும் அந்தப் பதவியினினுடைய மதிப்பை உயர்த்துவதற்குப் அறிவு பூர்வமாக முயல்கின்றது இருக்கின்றதே அது மிக நல்ல குணம். அந்த அரும்பெரும் குணம் தங்களிடத்தில் மிக நிறைய இருக்கிறது. அது மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறதென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறவிரும்புகிறேன்.

"அடுத்தது சபாநாயகர் தன்மையை எடுத்துக்கொள்வோம். அதற்கு வேண்டிய குணங்கள் யாவும் தங்களிடம் பூர்ணமாக நிரம்பியிருப்பதாக பலர் சொன்னார்கள். நீங்கள் திருக்குறளை வானளாவப் பாராட்டுகிறவர் என்பது எனக்கு நன்றாக தெரியும். வள்ளுவர் அரசியல் தலைவர், அரசாங்கக் கட்சித் தலைவர் எப்படி நடக்கவேண்டும், எந்தமாதிரியான முறையைக் கையாளவேண்டும் என்று மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்.

'நெடிதாக்கம் நீங்காமை வேண்டுபவர்' என்பதாக அரசியல் தலைவராக இருப்பவர்கள், அரசாங்கத் தலைவராக இருப்பவர்கள் நெடுங் காலம் பதவியில் நீங்காமல் செல்வத்துடனும், புகழுடனும் இருக்க வேண்டுமாயின் 'கடிது ஓச்சி மெல்ல எறிக', என்பதாக அதட்டம் முறையை மிகக் கடுமையாகக் கையாண்டாலும் கூட காரியத்தில் மெல்லிய தண்டனையைச் செய்யக் கடவர் என்று கூறியிருக்கிறார். நீர்குண்டைப் போல மிக அதிக பயத்தை உண்டுபண்ணக்கூடிய அளவில் அதட்டம் இருந்தாலும் காரியத்தில் மெல்ல அளவி கடவாமற் செய்யக்கடவர் நெடிதாக்கம் நீங்காமை வேண்டுபவர் என்று வள்ளுவர் கூறுகிறார். அப்படியே சாட்சாத்காரமாக அந்த குணம் நமது அவைத் தலைவரிடத்திலே நிரம்பியிருக்கிறது என்பதை நாம் நன்றாகப் பார்க்க முடிகிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். இதைவிட பெருமை படுத்தப்படமுடியாத பெருமை இன்னொன்றும் அவரிடத்தில் நான் பார்க்கிறேன்.

'எனக்குப் பல சந்தர்ப்பங்களில் அவைத் தலைவர் அவர்களிடத்தில் அளவுக்கு மிஞ்சிய கோபம் வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு இங்கே பேசியவர்கள் எல்லோரும் சபையிலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் திருப்தி ஏற்படக்கூடிய வகையில் அவர் மிகத் திறமையாக நடந்து வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை யென்று நான் சொல்லவில்லை. எவ்வளவு திறமையாக நடந்து கொண்டாலும் சில சில சமயங்களில் சிலருக்கு அதிருப்தி ஏற்படக்கூடிய வகையில் தான் சந்தர்ப்பங்கள் ஏற்படும். எனக்குப் பேச சந்தர்ப்பம் தரவில்லை என்றால் எனக்கு அவரிடம் கோபம் வரத்தான் செய்யும். எங்களுக்கு எல்லாம் பேச பதினைந்து நிமிஷங்கள் கொடுத்துவிட்டு இன்னொருவருக்கு ஐந்து நிமிஷம் தான் பேச சந்தர்ப்பம் கொடுத்தார் என்றால் அவருக்குக் கோபம் உண்டாகும். ஆனால் அவரிடம் கோபப்படுவார்களுக்கு அந்தக் கோபத்தை வெளியே காட்டுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்காத முறையில் அவர் மிகத் திறமையாக நடந்து வந்திருக்கிறார் என்பதைத்தான்

10th August 1955] [Sri P. Jeevanandam]

நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதாவது மாறுபட்ட கருத்துக்களி ஞல் ஏற்படுகிற கோபத்தை அங்கத்தினர்கள் சபையில் காட்டி, அவர் களுக்கும் இவருக்கும் ஒரு மோதல் ஏற்படாத வகையில் மிகவும் பக்குவமாக நடந்துகொள்வது மிகவும் அரிய குணம். அந்த அரும்பெரும் குணம் இவரிடத்தில் மிக நிறைய இருக்கிறது என்பதைப் பார்க்கிறேன். சபா நாயகருக்கு ஒரு கொள்கை உண்டு. அவருக்கு சில முடிவுகள் உண்டு. அதனை சபை அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்பதிஞல் சில சமயங்களில் மோதல் வரும். பலதரப்பட்ட கருத்து ஓட்டங்கள் நிரம்பிய இந்தச் சபையில் அந்த மோதல் அடிக்கடி வருவது இயற்கையே. இருந் தாலும் அந்த மோதல் சபையில் பிரதிபலிக்காதவண்ணம் சபா நாயகர் அவர்கள் மிகத் திறமையோடு அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் நடந்து கொண்டிருக்கிறுர்கள் என்றுல் அதுவே மிகவும் பெருமைப்படத்தக்க குணமாக நான் கருதுகிறேன்.

"சுருக்கத்தில் இந்தச் சபையைப் பொறுத்த வரையில் சொன்ஞல் சதா விழிப்பு உணர்ச்சியோடு இருக்கும் தன்மை, பதவியைப் பொறுத்த வரையில் பொறுப்பு உணர்ச்சியோடு நடந்துகொள்ளும் தன்மை இரண்டுமே அவரிடத்தில் பூர்ணமாக இருக்கிறது என்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத் தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"கடைசியாக நான் சிலபேர்களைப்போல் அவர் நம்மைவிட்டுப் பிரி வதற்குத் துக்கம் தெரிவிக்கவில்லை. அது உலக இயல்பான துக்கம். முதலில் அவர் ஹரிஜனத் தலைவராக இருந்தார். அதைவிட்டு கார்ப்ப ரேஷன் மேயராக வந்தபோது அங்கே வேலைத் துண்டு விழும்போது ஹரிஜன ஊழியர்கள் எல்லாம் தங்கள் தலைவரை விட்டுப் பிரிவதற்குத் தயங்குவார்கள். துக்கமும் படுவார்கள். மேயர் பதவியிலிருந்து சட்டசபை தலைவராக இவர் வந்தபோது கார்ப்பரேஷனில் இருப்பவர்கள் இவருடைய பிரிவை விடமாட்டாமல் தயங்குவார்கள். ஆனால் சட்டசபை யில் இவரை மகிழ்வோடு வரவேற்று இருப்பார்கள். இப்பொழுது சட்டசபைத் தலைவர் பதவியைவிட்டு டெல்லி பதவிக்குச் செல்லும்போது நாம் இவரது பிரிவை ஏற்கமாட்டாமல் தயங்குகிறோம். அவர் அகில இந்திய ரீதியில், இந்திய யூனியன் ரீதியில் பதவிக்குப் போவது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாகவே இருந்தாலும் நம்மைவிட்டுப் பிரிவதில் தயக்கம்தான். அவர் எங்கே போனாலும் அவருக்கு மூளை அடித்திருப்பது தமிழ்நாட்டில்தான். இங்கே இருந்துகொண்டுதான் அவர் எங்கு சென் றாலும் இந்த நாட்டின் பெருமையை உயர்த்துவார் என்பதில் ஐய மில்லை.

"இரண்டு மரங்கள் இருக்கின்றன. ஒன்று கரு கரு என்று வளர்ந்து மிகப் பெரிய மரமாகத் தழைத்து வளர்ந்து ஓங்கியிருக்கிறது. இன் ஞென்று உள்ளுக்குள்ளேயே வைரம் பாய்ந்தோடியிருக்கிறது. கரு கரு என்று தழைத்து வளர்ந்து ஓங்கியிருக்கிற மரத்தைக் காட்டிலும் உள்ளுக்குள்ளேயே வைரம் பாய்ந்து ஓடியிருக்கும் மரம் எவ்வளவோ உயர்ந்தது என்பது நமக்குத் தெரியும். ஏனென்றுல் முதல் மரத்தி னுள்ளே போறை விழுந்திருந்தாலும் விழுந்திருக்கும். ஆகவே வைரம் பாய்ந்த மரத்தைப்போல அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் ஆகிய இந்த மூன்றும் உங்களிடத்தில் இருக்கிறது. படிப்பு அறிவை எடுத்துக்கொண் டால் அது புட்டிப்பால் மாதிரி. ஆராய்ச்சி, சிந்தனை ஆகியவை பசும்பால் மாதிரி. அனுபவம் தாய்ப்பால் மாதிரி. அது உங்களிடத்தில் நிரம்பி யிருக்கிறது. உங்களைப்போன்ற நல்ல படிப்பு அறிவும், அந்தத் துறையில் நிரம்பிய ஆராய்ச்சியும், அதோடு மிக அதிகப்படியான அனுபவமும் பெற் றவர்கள் கிடைப்பது அரிது என்பதை உணர்கிறோம். ஆகவே எங்களை விட்டு நீங்கள் பிரியும்போது உண்மையிலேயே நஷ்டம் ஏற்படுகிறது என் பதை உணர்கிறோம். இந்த நஷ்ட உணர்ச்சியைத்தான் துக்கம், வருத் தம் என்று வைத்துக்கொண்டால் அதில் நானும் பங்கு கொள்ளு கிறேன். என்றைக்கும், நெடுங்காலம் உங்களை மறக்கமுடியாது. அப் படிப்பட்ட மறக்க முடியாத பரம்பரையை நிர்ணயித்துவிட்டீர்கள். வளரக் கூடிய சமுதாயம், வளரக்கூடிய நாடு, வளரக்கூடிய நாட்டின் அந்த

மக்கள் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போவதுதான் உலக இயல்பு. எல்லா நல்ல குணங்களும் பூர்ணமாக நிரம்பிய தாங்கள் ஒவ்வொரு படியாக உயர்ந்துகொண்டே போய் இன்றைக்கு அகில இந்திய யூனியன் அடிப்படையில் உயர்ந்திருப்பது தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொரு தமிழ் மகனும் பெருமைப்படவேண்டிய விஷயமாகும். தங்களுக்குப் பிறகு இந்தச் சபைக்கு வரப்போகிற புது சபாநாயகர் உள்ளிட்டு, அங்கத்தினர்கள் உள்ளிட்டு, எதிர்க் கட்சிக்காரர்கள், அரசாங்கக் கட்சிக்காரர்கள் உள்ளிட்டு எல்லோரும் ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்திருக்கக்கூடிய சேவையை, அதில் உங்களுக்கென்றே ஏற்படுத்திக்கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய ஸ்தானத்தை ஞாபகம் வைத்துக்கொண்டேயிருப்பார்கள். அதனை அவர்களால் மறக்கவே முடியாது. என்றென்றைக்கும் தாங்கள் காட்டியிருக்கும் பாதை எங்களுக்கு முன்மாதிரியாகவே இருக்கும் என்பதைக்கூறி தங்களுக்கு மனப்பூர்வமான எங்களது பாராட்டுதலைத் தெரிவிப்பதோடு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

12-26 p.m. * **Sri S. P. KRISHNASWAMY AYYANGAR**:—" கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு சுழலில் சிக்கிக்கொண்டவன் சுழலோடு இழுத்துச் செல்லப்படுவது போலவே நானும் தங்களைப் புகழும் குழாத்துடன் இழுத்துச் செல்லப்படுபவனுகி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தங்களுடைய குணதிசயங்களை எல்லாம் பாராட்டிப் பலர் புகழ்ந்து பேசிவிட்டார்கள். தாங்கள் இதைவிட உயர்ந்த பதவிக்குப் போவதைப்பற்றி வருத்தம் தெரிவிக்க வேண்டிய அவசியமேயில்லை. மிகுந்த சந்தோஷத்தோடு தங்களை வழியனுப்பி ஆசி கூறவேண்டியவர்களாக நாங்கள் இருக்கிறோம். தங்களுக்குக் கிடைத்திருக்கும் உயர்ந்த பொறுப்பை தாங்கள் இங்கே எவ்வாறு திறமையாக, நேர்மையாக தங்கள் கடமைகளை நிறைவேற்றி வந்திருக்கிறீர்களோ அதைப்போலவே அங்கும் நேர்மையுடன், திறமையுடன் நிறைவேற்றி, எல்லாவிதமான மேன்மையும்,புகழும்பெற்று, திட ஆரோக்யத்துடன் வாழவேண்டுமென்பதாக கடவுளை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டிக் கொள்ளுகிறேன். தாங்கள் இப்பொழுது போகும் பதவி தாங்கள் தற்போது வகித்துக்கொண்டிருக்கும் பதவியைவிட உயர்ந்தது அல்ல என்று சிலர் சொன்னுர்கள். என்னுடைய அபிப்பிராயத்தில் அது சரியல்ல. நம்முடைய நாட்டில் பிறந்த சிறந்த ரத்தினங்களை எல்லாம் பொறுக்கி எடுத்துப் பதிப்பிக்கவல்ல சிற்பியாகத் தங்களைக் கருதி, தகுதி உடையவர்களை தகுந்த ஸ்தானத்தில் அமர்த்த வேண்டிய ஒரு உயர்ந்த பொறுப்புமிக்க பதவிக்கு தங்களை அழைத்திருப்பது மிகவும் பெருமைப்படவேண்டிய விஷயமாகும். தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உயர்ந்த பதவியை தாங்கள் கடமையுணர்ச்சியோடு இந்த தேச மக்கள் எல்லாம் பெருமை அடையத்தக்க வகையில் நிறைவேற்றவேண்டும், தங்களுக்கு மேலும் மேலும் புகழ் ஏற்பட்டு நாட்டின் மேன்மையை தேசத்தின் மேன்மையை தாங்கள் உயர்த்த அருள்புரியுமாறு இறைவனைக் வேண்டிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* **Sri N. RATHINA GOUNDER** :—" தலைவர் அவர்களே, இன்று தாங்கள் எங்களுடைய பாராட்டுதலுக்குரியவர்களாக இருக்கிறீர்கள். நாங்கள் மாணவர்கள் போலவும், தாங்கள் ஒரு ஆசிரியர் போலவும் இருந்து எங்களுக்கு நல்லறிவு புகட்டி, நாங்கள் எல்லோரும் சட்டசபையில் பேச வேண்டுமென்று உற்சாகமூட்டினீர்கள். 'இதற்கு முன்பிருந்த சட்டசபையிலே பேசுபவர்கள் சிலர், ஆனுல் இந்த சட்டசபையிலோ பேசுபவர்கள் பலர்' இதற்குக் காரணம் தங்களுடைய அருமையான போதனையும், தாங்கள் கொடுத்த உற்சாகமுமே என்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இன்பம் பயக்கும் இன்முகமும், அன்பு தரும் அருஞ்சொல்லும், ஒருங்கே அமைந்த உங்களைப் பிரிவதற்கு உண்மையிலேயே மிக மிக வருந்துகின்றோம். ஆனுல் அதற்காக நாங்கள் கண்ணீர் விடவில்லை. நண்பர் திருவாளர் கோவிந்தசாமி அவர்கள் சொன்னதுபோல், அதற்காகக் கண்ணீர் விட்டால் நாங்சள் போதிய திறமையும் அறிவும் பெற்றிருக்கவில்லையென்று கருதப்படும். மேலும்

கோழைகள் என்றும் கருதப்படுவோம். ஆகவே கண்ணீர் விடவில்லை. ஆனால் உங்களிடம் எங்களுக்குள்ள உண்மையான அன்பைப்பற்றியும், நன்மதிப்பைப்பற்றியும் எவ்வாறு தெரிவித்துக்கொள்வது என்று தோன்றவில்லை.

"தாங்கள் தங்கள் குலத்திற்கே ஒரு விளக்காய் விளங்குகிறீர்கள். தாங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எத்தனையோ நன்மைகள் செய்திருக்கிறீர்கள். எத்தனையோ ஹரிஜனங்களுக்கு தாங்கள் உதவி செய்து அவர்களை காப்பாற்றியிருக்கிறீர்கள் ; முன்னுக்குக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இவையெல்லாம் குறித்து நாங்கள் மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

"தங்களால் இந்தச் சட்டசபைக்கு உயர்வா, அல்லது இந்தச் சட்டசபையால் தங்களுக்கு உயர்வா, என்ற கேள்விக்கு பதிலளிக்கவேண்டுமானால் ஒப்புயர்வற்ற சபாநாயகராகத் தாங்கள் இருப்பதால் சென்னைச் சட்டசபைக்குத் தங்களால் உயர்வு என்று சொல்லலாம். இந்தியாவிலேயே மிகச் சிறந்த முறையில் நடக்கக்கூடிய சட்டசபை சென்னைச் சட்டசபை என்று பலர் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

"தாங்கள் ஒருவர் மனமும் புண்படாமல் நடந்து வந்திருக்கிறீர்கள். பலர் அதுபற்றி பேசியிருக்கிறார்கள். ஆகையினால் நான் பேசவேண்டியதில்லை.

"தாங்கள் மத்திய சட்டசபையினும் தலைவராக வரவேண்டுமென்று மிகவும் விரும்புகின்றோம். எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரும் அந்நாளை, என்று எய்துவோம் என்று எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றோம்.

"தாங்கள் இப்போது வடநாடு செல்கிறீர்கள். வட நாட்டிலிருந்து தென்னாடு திரும்புங்கால் வட நாட்டில் திராவிட நாட்டின் பெருமையை நிலைநிறுத்திவிட்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தாங்களும் தங்கள் குடும்பத்தவரும் நீடூழி வாழவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்."

* **Sri R. S. ARUMUGAM**:—"கனம் சபாநாயகர் அவர்களே, தங்களைப் பாராட்டும் இந்த வைபவத்தில் நான் கலந்துகொள்வதில் மிகவும் பெருமையடைகிறேன். இந்த நாளை சந்தோஷமான நாள் என்று சிலர் சொல்கிறார்கள். சந்தோஷமில்லாத நாள் என்று கருதுகிறவர்களும் உண்டு. இருந்தாலும் தாங்கள் இனி வகிக்கப்போகும் பதவியை எண்ணும்போது வாஸ்தவத்தில், சந்தோஷமடைகிறோம். அதே நேரத்தில் எங்களது சட்டசபைக் கூட்டத்துக்கு தலைவராக நீதியுடனும் நேர்மையுடனும் இருந்து தமிழ் நாட்டுக்கே பெருமை வாங்கித்தந்த தாங்கள் இந்த இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்குச் செல்லும்போது ஒரு பக்கத்தில் வருத்தம் ஏற்படுகிறது. தங்களது புகழைப்பற்றி நாங்கள் சட்ட சபைக்கு வருவதற்கு முன்பே பத்திரிகைகள் மூலம் தெரிந்துகொண்டிருந்தோம். இந்தச் சபைக்கு வந்தபிறகு தாங்களே இந்தச் சபையை எவ்வளவு திறமையாகவும் நேர்மையாகவும் நடத்துகிறீர்கள் என்று பார்க்கும்போதும் அதை எண்ணும்போதும் உள்ளபடியே நாங்கள் யாரும் பெருமைப்படாமல் இருக்கமுடியாது. இந்தச் சட்டசபையிலே பல கட்சியினரும் பற்பல அபிப்பிராயம் கொண்டவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனைபேரும் தங்களைப் பாராட்டக்கூடிய விதத்தில் இந்தச் சபையைத் தாங்கள் நடத்திய பெருமை தங்களைச் சார்ந்தது. அப்படிப்பட்ட தங்களைப் பாராட்டும்போது நாங்களும் பெருமைப்படுகிறோம், என்பதோடு, தாங்கள் தலைவராக இருந்த காலத்திலே நாங்களும் மெம்பராக இருந்தோம் என்ற பெருமையும் எங்களுக்கு உண்டு என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. 12-32 p.m.

"தாழ்த்தப்பட்டவர் என்ற காரணத்திற்காக தாங்கள் சபை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள் என்று யாராவது சொன்னால் நான் நம்புவதற்கில்லை. தாங்கள்தான் தகுதியுள்ளவர்கள் என்று நன்கு தெரிந்தபிறகுதான் தாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள். அதனால் தாழ்த்தப்பட்டவர்களிலும் மிக்க தகுதியுடையவர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மையை நிலைநாட்டிய பெருமை தங்களைச்சார்ந்தது என்பதை நான் சொல்லிகொள்ளாமல் இருக்கமுடியவில்லை.

"சென்னையில் சிவஷண்முகம் பிள்ளை என்றால் அநேகருக்குத் தெரியாது. ஆனால் சபாநாயகர் என்றால் யாருக்குமே தெரியாமல் இருக்க முடியாது. அதேபோல் அடுத்த சபாநாயகர் வந்தால்கூட அவர் வெளியிடங்களுக்குச் சென்றால், அங்குள்ளவர்களிடம் அப்போது சபாநாயகர் வந்திருக்கிறார் என்று யாராவது சொன்னால் தங்களை நினைத்துக்கொண்டு வந்திருக்கிறார்களா என்று கேட்பார்களே தவிர, புதிதாக வருகிறவரைப்பற்றி தெரிந்துகொள்ள வெகுநாள் ஆகும்.

"ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டு முடித்துக்கொள்ளுகிறேன். தாங்கள் பெரிய பதவிக்கு அதாவது இந்திய பப்ளிக் செர்விஸ் கமிஷன் மெம்பராகச் செல்கிறீர்கள். தாங்கள் அங்கேயும் நல்ல முறையில் திறமையாக நிர்வாகத்தை நடத்துவீர்கள் என்ற எண்ணம் எங்களுக்கு உண்டு. அந்தப் பெருமை எல்லாம் தாழ்தப்பட்டவர்களுக்கு மட்டும் அல்ல. தமிழ் நாட்டுக்கும் உண்டு. அறிவும், திறமையும், நீதியும், நேர்மையும் எல்லாம் உள்ள ஒரு தமிழர் இந்தியா முழுமைக்கும் பெரிய உத்யோகஸ்தர்களை தேர்ந்தெடுக்கும் நிர்வாகத்தை நடத்தப்போகிறார் என்ற பெருமை எங்கள் எல்லோருக்கும் உண்டு என்பதை இந்த இடத்தில் தெரிவித்துக்கொண்டு தாங்கள் வாழவேண்டும், தங்கள் நாமம் வாழவேண்டும் என்று வாழ்த்தி என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* **Sri K. R. SAMBANDAM**:—"கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது இந்த நன்றி கூறும் தீர்மானத்தைப்பற்றி பேசும்போது சிறுவனாக இருப்பதால் நானும் என் போன்றவர்களும் தங்களுக்கு ஆசி கூறமுடியாது. இருந்தாலுங்கூட நீங்கள் செய்துவந்த காரியங்களைப் பார்த்து, அதைப்போல் நாங்களும் செய்யவேண்டும்; தாங்கள் எப்படி மக்களின் திலகமாக விளங்கினீர்களோ அதைப்போல் நாங்களும் இருக்க வேண்டும் என்ற குறிப்பை எடுத்துக்கொள்கிறோம். நீங்கள் மேலும் மேலும் பெரிய பெரிய காரியங்களைச் செய்து மனிதர்களுள் மாணிக்கமாக விளங்கவேண்டும் என்பது எங்கள் அவா.

"இந்தச்சட்டசபையில் முந்திய சட்டசபைகளில் இருந்தது போல் இல்லாமல் பலவித அங்கத்தினர்கள் வந்தார்கள். மெம்பர்களின் குணம், மனப்போக்கு இவைகள் வெவ்வேறு விதம். அதேபோல் வெவ்வேறு கட்சிகளும் இருந்தன. அந்த நிலைமையில் குறிப்பாக ஒன்றைச் சொல்கிறேன். ஏற்கனவே ஆந்திர சட்டசபையும் இங்கிருந்தபோது, ஸ்ரீ வாவிலாலா கோபாலகிருஷ்ணய்யா என்ற ஒரு மெம்பர் இருந்தார். அந்த ஒரு மெம்பருக்கே எத்தனை சபாநாயகர் இருந்தாலும் போதாது, எதற்கெடுத்தாலும் **point of order, point of information** என்பார். அவரை எடுத்துக்காட்டாகச் சொன்னேனே தவிர அவரைப்போன்ற பல மெம்பர்கள் இருந்தார்கள். உங்களிடம் பேசுவதற்கே, ஒரு விஷயத்தை கிரஹித்துக் கொள்வதற்கே சண்டைபோடுவதுண்டு. அப்படியிருந்தாலும் அந்தத் தொல்லைகளையெல்லாம் பொருட்படுத்தாது நல்ல முறையில், சபையை நடத்தினீர்கள். கன்னட பாஷையிலேயும், தெலுங்கு பாஷையிலேயும், மலையாள பாஷையிலேயும் அங்கத்தினர்கள் பேசுவார்கள். அடிக்கடி **point of order** கிளப்புவார்கள். தெலுங்கு பாஷையில் **point of order** கிளப்புவார்கள். அப்போது உங்களுக்கு தர்மசங்கடமாக இருக்கும். சில சமயங்களில் அதை ஸ்ரீ தென்னேட்டி விஸ்வநாதம் விளக்கிச் சொல்வ

துண்டு, அவ்வளவு தொல்லைகள் இருந்தாலுங்கூட தாங்கள் நடுநாயகமாக பாரபட்சமற்று இருந்து, விஷயங்களை எடுத்துச்சொல்லி, சபை நடவடிக்கையை மிகத்திறமையாக நடத்திவந்தீர்கள். சட்டசபைக்கே எடுத்துக்காட்டாக இச்சபை இருக்கும்படி, இந்த சட்டசபையை நடத்தினீர்கள். இந்தியாவிலே ஒரு சட்டசபையிலே ஒரு சபாநாயகர் இருந்தார் என்றால், அது சென்னைச் சட்டசபையிலிருந்த சபாநாயகரைப்போல் இருக்கவேண்டும் என்று சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் எழுதப்படவேண்டிய நிலைமையை ஏற்படுத்தினீர்கள். அதைத் தொடர்ந்து உங்கள் சரித்திரத்தில் இன்னும் அரிய பெரிய காரியங்கள் நடக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.''

* SRI P. SELVA RAJ :—'' Mr. Speaker, Sir, in supporting the resolution of thanks for the glorious service that you have rendered to this House and to the humanity at large, I feel that there cannot be two voices and that is evident from the speeches hitherto made by the hon. Members of this House. I for my part join with them and I wish you all success. Your service to the House and your devotion to duty were a hall-mark; your knowledge of men and matters and your knowledge about the procedure were marvellous and all these contributed to your success.

'' Sir, separation is always painful and when the Hon. the Speaker who has been associated closely with us goes to Delhi, we feel very sad. But however, we take pride in seeing that you are going to Delhi to take up a high office, and that makes much amends for the loss of your service to the House.

'' Sir, we wish you God-speed and success in your future career. Thank you.''

* SRI T. SHANMUGAM :—'' கனம் சபாநாயகர் அவர்களே, திரு 12–39 p.m.
வாளர் சுப்பிரமணியம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எல்லோரும், நீங்கள் இந்த வேலையைவிட்டுப் போவது குறித்து மிகமிக வருத்தப்படுவதாக பேசினார்கள். நான் அதைக்குறித்து வருத்தப்படவில்லை, நான் உண்மையாகவே மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் ஒரே இடத்தில் எப்போதும் ஒருவரே இருக்கவேண்டுமென்று நினைப்பது கூடாது, சரியாகாது, எங்கள் சுயநலத்தின் காரணமாகத்தான் அப்படி சொல்லவேண்டும். உங்கள் நலனை கருதினால், நீங்கள் கட்டாயம் இந்த புது பதவிக்கு சந்தோஷமாக போகவேண்டுமென்று சொல்லுவதுதான் நியாயமாகும். நீங்கள் டில்லிக்கு போய் பப்ளிக் சர்விஸ் கமிஷன் மெம்பர் ஸ்தானத்தை ஒப்புக்கொண்டபிறகு, சீக்கிரத்திலேயே லோக்சபையில், மந்திரியாகவரவேண்டும், அதன் பிறகு அதனுடைய **speaker** ஆக வரவேண்டும், இப்படியாக மென்மேலும் பதவிகளில் விருத்தி அடைந்துகொண்டே போகவேண்டுமென்பதுதான் என்து விருப்பம். நீங்கள் ஒரே இடத்தில் இருக்கவேண்டுமென்று நான் கருதவில்லை. என்னைப்பொருத்தவரையில் நீங்கள், அந்தப் பதவியை ஒப்புக்கொண்டது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. நீங்கள் இந்த இடத்திலே உட்கார்ந்து, உங்கள் நேர்மையான நடவடிக்கைகளால் மற்றவர்களுக்கு இது ஒரு பெரிய **training ground** ஆக செய்துபோவது மிகவும் பாராட்டத்தக்கது, மற்றவர்களும் அந்த இடத்தில் அமர்ந்து நடவடிக்கைகள் செய்வார்கள். நல்ல **trainiug** ம் ஆகிவிடுவார்கள். 1946-ல் தாங்கள் சபாநாயகராக வந்தவுடன் இவ்வளவு கெட்டிக்காரராக இருந்திருக்கமாட்டீர்கள். அந்த இடத்திற்கு வந்தபிறகு, அதைப்படிக்கவேண்டும், லண்டினில் பார்லிமெண்டில் நடக்கும் விஷயங்களை படிக்கவேண்டும்

[Sri T. Shanmugam] [10th August 1955

என்று ஆசைப்பட்டு படித்து, இச்சபையிலே பல தீர்ப்புகள் கூறி, **traditions** ஏற்படுத்திவிட்டீர்கள். அதையெல்லாம் பார்த்து, தற்போது இனி மேல் உங்களிடத்திற்கு வருபவர்களும், நன்ருக உங்களைப்போல் சபையை நடத்தக்கற்றுகொள்ளுவார்கள். ஆகவே நீங்கள் டில்லிக்குப்போய், வட நாட்டார், தனக்கு உத்யோகத்தை கொடுத்தார்கள் என்று மகிழ்ச்சி அடைந்து சும்மாயிராமல், இந்த பகுதியிலுள்ள திராவிடர்களுக்கும், முக்கியமாக ஆதித்திராவிடர்களுக்கும் உங்களால் ஆன உதவியைச் செய்யவேண்டும், திராவிடநாடு திராவிடருக்கு ஆகவேண்டிய காரியங்களையும் செய்யவேண்டும். நீங்கள் அங்கு நீடுழி வாழ்ந்து, மென்மேலும் புகழ்பெற்று நம் நாட்டுக்கும் எல்லா நன்மையும் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன்.''

* Sri V. K. RAMASWAMY MUDALIAR :—'' Mr. Speaker, Sir, I do not propose to make a long speech. I associate myself with the sentiments expressed by my previous speakers. I agree with every word said of you. You are one of the ideal Speakers and by your ability and impartiality you have maintained the high traditions of this House. The most important thing in you which has struck me most is your strictly following the principle of 'plain living and high thinking'. No doubt, we all feel very much your separation, but still I am one of those who feel that you will surely shine, coming out with flying colours in the new task that has been entrusted to you. Therefore, I wish you, Mr. Speaker, a very long, happy and prosperous career. With these few words, I resume my seat.''

12-44 p.m. Sri K. P. GOPALAN :—'' മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഈ അവസരത്തിൽ രണ്ടു വാക്കെങ്കിലും സംസാരിക്കണമെന്നുള്ള അതിയായ ആഗ്രഹംകൊണ്ടാണ് ഞാൻ എഴുന്നേററു നില്ക്കുന്നതു്. ഈ അസെംബ്ലിയുടെ ബഹുമാനപ്പെട്ട സ്പീക്കറെപ്പററി എനിക്കു എപ്പോഴും അഭിമാനം തോന്നാറുണ്ടു്. അതിനു മതിയായ കാരണവുമുണ്ടു്. ഇന്ത്യയിലാകെ എടുത്തുനോക്കിയാൽ മദിരാശി അസെംബ്ലിക്കു ഉന്നതമായ ഒരു നിലവാരമുണ്ടെന്നുള്ളതു് ഈ സംസ്ഥാനത്തു മാത്രമല്ല മററുവിടെയും പരക്കെ സമ്മതിക്കപ്പെട്ടിട്ടുള്ള ഒരു കാര്യമാണു്. നമ്മുടെ ബഹുമാനപ്പെട്ട സ്പീക്കർ, ഈ അസെംബ്ലിയുടെ മാത്രമല്ല, ഈ സംസ്ഥാനത്തിൻെറ മാത്രമല്ല, നമ്മുടെ മഹാരാജ്യത്തിൻെറതന്നെ അഭിമാനം ഉയർത്തിയിട്ടുണ്ടെന്നുള്ളതു ഏവരും സമ്മതിക്കുന്ന കാര്യമാണു്. തി.ഷ്യയായിട്ടും നമുക്കു വളരെ അഭിമാനകരമായിട്ടുള്ള ഒരു സംഗതിയാണതു്.

'' സർ, ഈ അവസരത്തിൽ എനിക്കു ഒരു കാര്യം പ്രത്യേകം എടുത്തു പറയാനുണ്ടു്. നമ്മുടെ രാജ്യത്തിന്നു സ്വാതന്ത്ര്യം ലഭിച്ചു ഒരു ജനാധിപത്യഭരണം ഏർപ്പെട്ടിട്ടു് അധികം കാലമായിട്ടില്ല. ജനാധിപത്യത്തിൻെറ വിജയം ജനങ്ങൾക്കു നിയമസഭകളിലുള്ള വിശ്വാസത്തെ ആശ്രയിച്ചിരിക്കുന്നു. അതുകൊണ്ടു നിയമസഭകളുടെ പ്രവർത്തനത്തിൽ ജനങ്ങൾക്കു വിശ്വാസവും അഭിമാനവും വളർത്തുകയെന്നുള്ളതു് വളരെ അത്യാവശ്യമായ ഒരു സംഗതിയാണു്. നമ്മുടെ ബഹുമാനപ്പെട്ട സ്പീക്കർ അക്കാര്യത്തിൽ തികച്ചും വിജയിച്ചിട്ടുണ്ടെന്നുള്ളതു് നമുക്കേവർക്കും അഭിമാനകരമാണു്.

'' സർ, ഈ സഭയിലെ അംഗങ്ങളിൽ ഭൂരിഭാഗവും പാർലിമെൻററി നടപടിക്രമങ്ങളെക്കുറിച്ചു വലിയ അറിവൊന്നുമില്ലാത്തവരാണു്. നമ്മുടെ നാട്ടിൽ പാർലിമെൻററി നടപടിക്രമങ്ങൾ പഠിപ്പിക്കുന്നതിന്നുള്ള ഒരു ഇൻസ്റ്റിറ്റ്യൂട്ട് ഓഫ് പാർലിമെൻററി പ്രൊസീഡിംഗ്സ് സ്ഥാപിക്കുവാനും അതിനു ഒരു ഡിപ്ലോമ കോഴ്സ് ഏർപ്പെടുത്തുവാനും ഗവമ്മേണ്ടു് ഉടനെ നടപടിയെടുക്കണമെന്നു എനിക്കു അഭിപ്രായമുണ്ടു്. ഈ കാര്യം ഗവമ്മേണ്ടിൻെറ സവിശേഷമായ ശ്രദ്ധയ്ക്കു വിഷയീഭവിക്കുമെന്നു ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു.

'' സർ, നിയമസഭാനടപടികൾ എത്ര നിഷ്പക്ഷവും നീതിപൂർവ്വകവുമായിട്ടാണു് അങ്ങു് നടത്തിപ്പോന്നിട്ടുള്ളതെന്നോർക്കുമ്പോൾ ഞാൻ അഭിമാനംകൊള്ളുന്നു. നമ്മുടെ

10th August 1955] [Sri K. P. Gopalan]

ബഹുമാനപ്പെട്ട സ്പീക്കർ കണ്ണൂർ സന്ദർശിച്ച അവസരത്തിൽ വിദ്യാർത്ഥികളുടെ ഒരു പാർലിമെൻറിൽ പ്രസംഗിക്കുകയുണ്ടായി. അപ്പോൾ അദ്ദേഹം വിദ്യാർത്ഥികളോടു പറഞ്ഞ ഒരു കാര്യം ഈ സഭയുടെ ശ്രദ്ധയിൽകൊണ്ടുവരാൻ ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു. 'നിങ്ങൾ ഒരു സ്പീക്കറേയും പ്രധാനമന്ത്രിയേയും മററു മന്ത്രിമാരേയും തിരഞ്ഞെടുത്തിട്ടുണ്ട്. എന്നാൽ അതുമാത്രം പോര. ഒരു പ്രതിപക്ഷനേതാവിനെക്കൂടി നിങ്ങൾ തിരഞ്ഞെടുക്കണം' എന്നാണു അദ്ദേഹം വിദ്യാർത്ഥികളെ ഉപദേശിച്ചതു്. എതിർപക്ഷത്തോടു മാത്രമല്ല, ഈ അസെംബ്ലിയിലുള്ള ഓരോ അംഗത്തോടും അങ്ങ് പ്രദർശിപ്പിച്ചിട്ടുള്ള ഔദാര്യത്തെ ആദരിക്കാതിരിക്കാൻ സാദ്ധ്യമല്ല. നിയമസഭയിൽ ആദ്യമായി പ്രവേശിക്കുന്ന എന്നെപ്പോലുള്ള പലർക്കും ഒരു ചോദ്യം എങ്ങനെ ചോദിക്കണം, ഒരു പോയിൻറു് ആഫ് ആഡർ എങ്ങനെ ഉന്നയിക്കണം, എന്തിനെപ്പററിയെല്ലാം പ്രസംഗിക്കാം, ഏതു വിധത്തിൽ പ്രസംഗിക്കാം എന്നും മററുമുള്ള കാര്യങ്ങളെക്കുറിച്ചു വലിയ അറിവൊന്നുമുണ്ടായിരുന്നില്ല. സർ, അങ്ങ് ഒരു കുടുംബസ്നേഹത്തോടും സൌജന്യബുദ്ധിയോടും ഞങ്ങളോടു പെരുമാറിയതിൻെറ ഫലമായിട്ടാണു എന്നെപ്പോലുള്ള പലർക്കും ഈ സഭയുടെ നടപടികളിൽ പങ്കെടുക്കാനും സഭാനടപടിക്രമങ്ങളെക്കുറിച്ചു ചിലതെങ്കിലും മനസ്സിലാക്കാനും സംഗതിയായിട്ടുള്ളതു്.

“സർ, മഹാത്മാ ഗാന്ധി ഒരിക്കൽ പറഞ്ഞിട്ടുണ്ട്: 'ഒരു ഹരിജനസ്ത്രീയ്ക്കു് ഇന്ത്യയുടെ പ്രസിഡെണ്ടായിത്തീരാവുന്ന സാഹചര്യം നമ്മുടെ രാജ്യത്തുണ്ടായിക്കാണണം' എന്ന്. അനുകൂലസാഹചര്യങ്ങളും സന്ദർഭങ്ങളും ഉണ്ടെങ്കിൽ ഈ രാജ്യത്തു ഒരു ശിവഷണ്മുഖംപിള്ളയല്ല, എത്രയോ ശിവഷണ്മുഖംപിള്ളമാർ പൊങ്ങിവരുമെന്നുള്ളതിനു സംശയമില്ല. അങ്ങയെ പിന്തുടർന്നു ഈ അസെംബ്ലിയുടെ സ്പീക്കറാകാൻപോകുന്ന ആൾ അങ്ങു സൃഷ്ടിച്ചിട്ടുള്ള പാരമ്പര്യത്തെ പിന്തുടരുമെന്നും അതിനെ ഉയർത്തിപ്പിടിക്കാൻ ശ്രമിക്കുമെന്നും ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു. യൂനിയൻ പബ്ലിക് സർവീസ് കമ്മീഷനിലെ അംഗമെന്ന നിലയ്ക്കു മാത്രമല്ല, നമ്മുടെ രാജ്യത്തിൻെറ മഹത്തായ ഭാവി രൂപീകരിക്കുന്ന മഹാശില്പികളുടെ കൂട്ടത്തിൽ ഉന്നതനായ ഒരു വ്യക്തിയെന്ന നിലയിൽ അങ്ങു് ശോഭിക്കുമെന്നുള്ളതിനു് എനിക്കു സംശയമില്ല. അങ്ങയ്ക്കു സകല ഭാവുകങ്ങളും ആശംസിച്ചുകൊണ്ടു ഞാൻ അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു.”

* SRI W. J. FERNANDEZ :—“ Mr. Speaker, Sir, it is with mingled feeling of joy and regret that I rise to support the motion before the House and join in the chorus of praise and expressions of regret voiced by the hon. Members of this House—joy at your well deserved elevation to a higher sphere of activity and regret at the irreparable loss caused by your departure from our midst. We are all happy, Sir, in the thought that your distinguished services to this State as the illustrious Speaker of this Assembly and a distinguished public worker of wide repute. This has at last received recognition by the Union Government by your elevation as a Member of the Union Public Service Commission. I have no doubt that you will add lustre to your new sphere of work as you have done in this House and that you will bring to bear those rare qualities of head and heart, sound judgment and impartiality, in discharging the duties of your new office.

“ Sir, it has been my privilege to be associated with you from the time you were elected the first Speaker of this Assembly in or about May 1946. What impressed me most was the deep erudition and rare ability you brought into play in dealing with the business of the House and your knowledge of parliamentary practice and procedure, the sound judgment you exercised in dealing with intricate questions that cropped up from time to time and that called for a solution at your hands. The absolute impartiality with which

[Sri W. J. Fernandez] [10th August 1955

you dealt with all sections of the House, your extreme patience, forbearance and other qualities impressed me most. Of course, 12–50 p.m. there were times when we began talking with our neighbours thereby causing a din which prevented you, Mr. Speaker, from following the speech of the member on his feet with the result that you sprang up to your feet and with a loud voice called out ' Order, order ' and in a minute there was dead silence in the House. These words will ring in our ears long after your departure from our midst. Though you will be out of sight, you will not be out of our mind. Let me assure that you carry with you our best wishes for a bright career in your new office and for still higher honours.''

Sri E. L. RAGHAVA MUDALIAR :—'' Sir, I have got the greatest pleasure in associating myself with all the sentiments expressed by my colleagues to-day. It must have been the unique experience of the Leader of the House that a motion is supported by one and all in this House, and I think he must be very much wishing that the discussion on all motions should be like the discussion in this motion. You are going there as an ambassador, an ambassador of all the traditions for which Tamilnad is famous. We wish you a happy sojourn in Delhi and God-speed.''

Sri S. VADIVELU :—'' மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சமூதாயத்தில் புறக்கணிப்க்கப்பட்ட ஒரு சமூகத்திலே பிறந்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கே ஒரு தனிப்பெரும் சிறப்பைக் கொடுக்கும் முறையில், சென்ற சுமார் 10 ஆண்டுகளாக இச்சபைக்கு தலைவராக இருந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த சபையிலுள்ள அங்கத்தினர்களுக்கு மட்டுமல்ல, நம்மாகாணத்திலுள்ள சகல பகுதி மக்களுக்கும் தலைவராக இருந்திருக்கிறீர்கள். அந்த முறையில் தான் நீங்கள், இந்திய யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் ஒரு மெம்பராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் அந்த பதவியிலும், இதே மாதிரியாக நல்ல முறையில் ஜனநாயக முறையை கடைப்பிடித்து நடப்பீர்கள் என்று என் போன்றவர்களுக்கு பூரண நம்பிக்கையுண்டு.

'' அடுத்தப்படியாக உங்களுடைய திறமையால், இம்மாகாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்போக்கு சமுதாயத்தினர், இவர்களுக்கு இந்த அரசாங்கத்தில் நிர்வாகிகளாக இருக்க சந்தர்ப்பமும், வாய்பும் கொடுத்தால், திறமையுடன் நிர்வாகத்தை நடத்திக்காட்டுவார்கள் என்பதை சந்தேகமற எடுத்துக்காட்டிவிட்டீர்கள்.

'' அடுத்த படியாக, உங்களை இந்த சபையில் போற்றுதவர்கள் யாருமே இல்லை. இதைப்பார்க்கும்போது, வருகிற இச்சபைத்தலைவரும், உங்களைப் போல் நல்ல முறையில் சபையை நடத்தும் திறமை வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். அப்பேர்பட்டவரை நியமிக்கும் பொறுப்பு, தற்போது, நமது முதல் மந்திரியைச்சார்ந்தது. வருகிற சபைத்தலைவர், தங்களைப் போலவே, எங்களைப்போன்ற இளைஞர்களை ஊக்குவிக்கும் அளவுக்கு சபையை நடத்தவேண்டுமென்றே ஆசைப்படுகிறேன். இந்த திறமையின்காரணமாகத்தான் இப்போது உங்களை உயர் பதவிக்கு இந்திய சர்க்கார் உயர்த்தியிருக்கிறது. இத்திறைமையினாலேயே, நீங்கள் ஜனாதிபதியாக வரவும் வாய்ப்பு இருக்கிறது, ஆவீர்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. நீங்கள் ஹரிஜனங்களுக்கும், மற்ற பகுதியினருக்கும் செய்திருக்கும் சேவையானது, சகல மக்களையும் உங்கள்பால், ஆக்ரஷிக்க செய்துவிட்டன, சகல பகுதிமக்களும் தங்கள்பால் நல்லெண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தாங்கள் இந்த தேசத்தின் ஜனாதிபதியாக கூடிய சீக்கிரம் வரவேண்டு

10th August 1955] [Sri S. Vadivelu]

மென்று, தெரிவித்துக்கொண்டு, உங்கள் உடல் நலத்தை நல்ல முறையில் பாதுகாத்து நாட்டுக்கு நல்ல சேவை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

*SRI P. B. K. RAJA CHIDAMBARAM :—" கனம் தலைவர் அவர்களே, தென்னுடைய சிவனது பெயரையும், தமிழகத்தின் தனிப்பெரும் கடவுளாகிய முருகப்பெருமானது பெயரையும் ஒருங்கே தாங்கி நிற்கும் நீங்கள், சென்ற 8 ஆண்டுகளுக்குமேல், இந்தச் சபையின் தலை வராக இருந்து கடமையினின்றும் சிறிதும் தவருது பணியாற்றி, இங்குள்ள அங்கத்தினர்களுக்குகெல்லாம் கடமை எவ்வாறு செய்யவேண்டும் என் பதை அறிவுறுத்தும் நிலையில் ஒரு எடுத்துக்காட்டாக, வழிகாட்டியாக இருந்து வந்தீர்கள். இப்போது எங்களை விட்டு டில்லிக்கு செல்லப்போகின் றீர்கள். நேற்று புதியதாக தாங்கள் வகிக்கப்போகும் பதவியைப்பற்றி குறிப்பிடும்போது, order of precedence படி அந்தப்பதவி, தாங்கள் வகிக் கும் தற்போதைய பதவியைவிட சற்று மட்டமானது என்பதாகச் சொன் ஞர்கள். ஆகவே, நீங்கள் பெரும் தியாகத்தை செய்துதான் வடநாட்டுக்கு செல்கிறீர்கள் என்பது என்போன்றவர்களுக்கு நன்கு விளங்குகிறது. மேலும், தினந்தோறும் உங்களுடைய அன்றாட அலுவல்களில் தொண் டுத்துணையாக நின்று வழிகாட்டும் முருகப்பெருமானின் ஆலயம் டில்லி யில் இல்லை. நேற்று சொன்னீர்கள் முருகக்கடவுளின் திருவுளசீட்டில் தங்களை அந்த புதிய பதவிக்கு போகச்சொல்லி உத்தரவு வந்ததாக கூறினீர்கள். முருகக் கடவுள் உங்களை சோதிக்கத்தான் இந்த மாதிரி உத்தரவு செய்திருக்கிறுர். 'இங்கு தினமும் என் உருவத்தை கண்டு வழிபடுகிறுய், கோவில் இல்லாத ஊருக்கு சென்றும் என் உருவத்தை காணமுடியாத நிலையில் என்னை மறக்காமல் இருக்கிறுயா என்று பார்க் கத்தான் அனுப்பியிருக்கிறேன்' என்பதற்காகத்தான் அனுப்புகிறுர் என்று நான் நினைக்கிறேன். முருகக் கடவுளை எவ்வாறு மறக்காமல் தொழுது வருகிறீர்களோ, அதுபோல, இந்த சபையின் அங்கத்தினர்களாக இருந்து உங்களது அன்புக்கும், ஆதரவிற்கும் பாத்திரமாகியிருக்கும் எங்களையும் மறக்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதே சமயத் தில், இந்த சபையின் அங்கத்தினர்களும் தங்களை மறக்கமாட்டார்கள் என்பதை இது வரையில் எனக்குமுன்பு பேசிய நண்பர்கள் தங்களுக்கு சூட்டிய புகழ் மாலையிலிருந்து உறுதியாக நம்புகிறேன். 12-54 p.m.

" சற்று முன்பு பேசியவர்கள் சொன்னுர்கள் தாங்கள் தமிழ்நாட்டின் தூதுவராக செல்கிறீர்கள் என்று, தமிழ் நாட்டின் நடுநிலைமை தவருத பண்பை, தாங்கள் புதிதாக வகிக்கப்போகும் பதவியிலும் நிலைநாட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. தனக்குப் பிறந்த மகனுக இருந்தபோதிலும் அவன் செய்த குற்றத்திற்கு தண்டனை ஈந்த மனு நிதிச்சோழன்போன்ற நீதி தவருத அரசர்கள் ஆண்ட தமிழ் நாட்டி லிருந்து வடநாட்டுக்குச் செல்லுகிறீர்கள். அங்கும் தாங்கள் கடமையி லிருந்து தவருமல், தமிழ் நாட்டின் புகழை உயர்த்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

" ஆனுல் அதே சமயத்தில் என்போன்ற அங்கத்தினர்கள் சார்பாக ஒரு சிறு விண்ணப்பத்தை உங்கள் மூலமாக கனம் முதல் அமைச்சருக்கு சொல்லவேண்டியிருக்கிறது. நீங்கள் இங்கிருந்து செல்லுகிறீர்கள். ஆனுல் இந்த சபையில் உங்களுடைய திருவுருவப்படம் ஒன்று வைக்கப் பட்டால், அடிக்கடி நீங்கள் எவ்வாறு சபையை நடத்தி வந்தீர்கள் என்பதை, எங்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கு பின்னுல் வரப்போகிற அங்கத்தினர்களுக்கும், அந்த உங்களுடைய திருவுருவம் நினைவுறுத்தி உதவிசெய்யும் என்று நான் கருதுகிறேன்.

" அதுமட்டுமல்ல, இன்னுமொரு சிறு விண்ணப்பத்தை தங்களிடம் தெரிவிக்கவிரும்புகிறேன். நீங்கள் கடந்த 8 ஆண்டுகளாக இந்த சபா நாயகர் பதவியை வகித்து வந்திருக்கிறீர்கள். இந்த காலத்தில் உங்க ளுக்கு ஏற்பட்ட அனுபவத்தை எளிய நடையில் புத்தகமாக எழுதி, கனம் முதலமைச்சரைக் கொண்டு வெளியிடச்செய்தால் என்போன்ற

அங்கத்தினர்களுக்குப் பிரயோஜனகரமாக இருக்கும். உங்களுடைய புதிய பதவியில் உங்களுக்கு நிறைய அவகாசம் கிடைக்கும். இந்த சட்டசபைத் தலைவர் பதவியில் ஏற்படுவதுபோல், அடிக்கடி விஸிட்டர்கள் வந்து நேரத்தை வீணுக்கமாட்டார்கள். ஆகவே, நீங்கள் டில்லியில் உங்களுடைய அவகாச நேரத்தை வீணுக்காமல் நான் கோரியபடி ஒரு புத்தகம் எழுதி, சென்னை அரசாங்கத்தைக் கொண்டு வெளியிடச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இறுதியாக, தமிழ் நாட்டின் நற்புகழை அங்கு நிலைநாட்டுவீர்கள், அதற்கு முருகப் பெருமானின் ஆசி இருக்கும் என்று கூறி, என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.''

12-59 p.m. Sri C. KANDASAMY :—'' அன்புமிக்க சபாநாயகர் அவர்களே, இதுவரையில் சபையின் சகல தரப்பிலிருந்தும், உங்களுடைய அரும் குணங்களைப்பற்றிப் அங்கத்தினர்கள் மிகவும் அதிகமாகப் பேசிவிட்டார்கள். இன்னும் அதை அதிகப்படுத்த நான் விரும்பவில்லை. இருப்பினும்கூட, இந்த சென்ற நான்கு ஆண்டுகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் போது, அதுவும் எங்களைப்போன்ற புதியவர்கள், இளைஞர்கள் சபைக்கு வந்தபிறகு, இந்த நான்கு ஆண்டுகளில் நடந்திருக்கிற அரசியல் நிகழ்ச்சிகளை வைத்துப் பார்க்கும்போது, கட்சி அரசியலை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயக அரசாங்கத்தில் நீங்கள் எவ்வளவு திறம்பட இந்த சபைத்தலைவர் பதவியை வகித்திருக்கிறீர்கள் என்பதில் நாங்கள் ஆச்சரியமும், உண்மையாகவே உதாரணமும் கொள்ளவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆளும் கட்சியில் ஏற்பட்ட நெருக்கடி, மந்திரி சபை மாறுதல் மற்றும் பல பெரிய பிரச்னைகள், தேசத்தில் கொந்தளிப்பு எதிர் கட்சிகள் மத்தியில் சலனங்கள், இவைகளுக்கிடையில் நீங்கள் சபையை திறம்பட, ஸ்திரமாக, விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகாமல், நேர்மை உணர்ச்சியுடன் நடத்தி வந்திருக்கிறீர்கள் என்பதை நிச்சயம் வரும் கால சரித்திரம் கூறும் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல, இங்கு வந்திருக்கக்கூடிய பலதரப்பட்ட அங்கத்தினர்களில், இந்தச்சபையை, பார்லிமெண்டரி ஜனநாயக அரசியல் ஸ்கூலாகக் கருதி, சமுதாயத்தின் அடிக்கட்டிலிருந்து வந்திருக்கும் அங்கத்தினர்களைக்கண்டால் உங்களுடைய முகம் எவ்வளவு பூரிக்கும் என்பதையெல்லாம் என்னைப்போன்றவர்கள் மறக்கவே முடியாது. அரசியல் சதுரங்கத்தில், நீங்கள் நாளைய தினம் டில்லிக்குப்போகலாம், நாங்கள் இங்கேயே இருக்கலாம் அல்லது இன்னும் சிறிது காலத்தில் இல்லாமலும் போகலாம். பல நிகழ்ச்சிகள் நடைபெறப்போகிறது என்றாலும், இந்த கடந்த நான்கு வருஷத்திய நினைவு நிச்சயம் பசுமையாக எங்களுடைய மனதில் பதிந்து நிற்கும் என்று நினைக்கிறேன். அதைப் போலவே, எங்களைப் போன்ற சிறுவர்கள், புதியவர்கள் ஆகியவர்களோடு உங்களுக்கு ஏற்பட்ட பறிச்சயம் பசுமையாக பதிந்திருக்கும் என்றும் நான் நிச்சயமாக நம்புகிறேன். எங்கள் அத்தனை பேர்களுடைய அன்பும் உங்கள் பின்னால் என்றென்றும் இருக்குமென்று தெரிவித்துக்கொண்டு, உங்களுடைய ஆசியும் எங்கள் எல்லோருக்கும் இருக்குமென்று எதிர் பார்த்துக்கொண்டு உங்களிடம் விடை பெற்றுக் கொள்ளுகிறேன்.''

* Sri A. APPU :—'' Mr. Speaker, Sir, I support the Resolution moved by the Hon. the Leader of the House. I associate myself with all the sentiments expressed by him about you. I take this opportunity to congratulate you most sincerely on your appointment as a Member of the Union Public Service Commission. I know, as a matter of fact, this appointment has come to you unsolicited. You have a name and fame. You have got a high reputation. You are known for your integrity, honesty, selfless and impartiality. You have been conducting the business of this House in a very dignified manner. I am sure that it was in appreciation of your excellent work that the Central Government have given you this very high appointment. I have also to tell you that all the people are singing a song of praise for you. You

10th August 1955] [Sri A. Appu]

are a very kind gentleman. You have been ungrudgingly helping all, particularly the poor. I submit that those who help others will never come to grief. You will be an asset to the Union Public Service Commission. I am sure that you will discharge your duties there most impartially safeguarding the interests of South India. I wish you, Sir, all luck. May God give you long life and prosperity. I am sure that ere long you will become the Chairman of this Commission. As some of my Friends have said one day you will become the Rashtrapathi of India. I once more congratulate you on your appointment. Thank you, Sir, for the opportunity given to me to speak.''

* SRI V. R. NAGARAJAN :—" கனம் சபா நாயகர் அவர்களே, தாங்கள் எங்களிடையே இருந்து வெகு தூரம் செல்லுவதை குறித்து நாங்கள் எல்லோரும் ஒரு மனதாக வருத்தப்படுகின்றோம் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தாங்கள் எந்த சந்தர்ப்பத்தில் இந்த நகரை விட்டுச் செல்லுகிறீர்கள் என்பதைப்பற்றி நானும் ஒருவாறு தனிப்பட அறிந்திருக்கிறேன். அதே சமயத்தில் தங்களுக்கு அங்கே போவதில் உண்மையான சந்தோஷமில்லை என்பதும் இன்று இங்கு பல அங்கத்தினர்கள் பேசியதிலிருந்து எனக்குத் தெரியவருகிறது. அந்த விஷயத்தைப்பற்றி இப்போது நான் பேசவேண்டுமானால் அதிக நாழியாகும். மேலும், இன்னும் பல அங்கத்தினர்கள் பேசவேண்டியிருப்பதால் என்னுடைய வார்த்தையை சுருக்கமாகவே முடித்து விடுகிறேன். 1-4 p.m.

" தாங்கள் ஒரு உயர்ந்த பதவிக்குப்போகின்றீர்களா அல்லது சாதாரண பதவிக்குப் போகின்றீர்களா என்பதைச் சொல்லுவது சற்று கடினமாக இருக்கிறது. ஏனென்றால், எந்த விதத்தில் ஒரு குறிப்பிட்ட பதவி உயர்ந்தது, மற்றொன்று தாழ்ந்தது என்பதற்கு ஒரு **Ready answer** தயாரிக்கப்பட்ட பதில் இருக்காது என்று நினைக்கிறேன். தங்களுக்கு அதிக சம்பளம் கொடுத்து, கூப்பிடுகின்றார்களே அதனால் செல்லுகின்றீர்களா என்றால், தங்களை அறிந்த வரையில் நான் நீங்கள் அப்படிச் செல்லவில்லை என்றுதான் கூறமுடியும். ஆனால் தாங்கள் எங்களைவிட்டுச் செல்லும் அளவில் நான் ஒரு பக்கம் வருத்தப்படும் போதிலும், இன்னொரு பக்கம், தாங்கள் புதியதொரு வழியில் இந்த நாட்டுக்கு சேவை செய்யத்தான் அங்கு போகிறீர்கள் என்பதை நினைக்கும் போது சிறிது மகிழ்வு அடைகிறேன். தாங்கள் இந்தப் புதிய பதவியை மாத்திரமல்ல, தங்களுக்கு இன்னும் விருப்பமான எந்த பதவியை வேண்டுமானாலும், கவர்னர் பதவியோ, ராஷ்டிரபதி பதவியையோ வேண்டுமானாலும், கூடிய சீக்கிரத்தில் அடைய முருகப் பெருமான் அருள் புரிய வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன். இது வரையில் இந்தியாவில் பெரும் க்ஷேத்திரங்கள் ஆறுதான் இருக்கின்றன என்று நினைத்திருந்தேன். ஆனால் சட்ட சபை அங்கத்தினராக வந்த பிறகு, ஏழாவது க்ஷேத்திரம் ஒன்றும் இருக்கிறது என்பதை கண்டு பிடித்திருக்கிறேன். அந்த க்ஷேத்திரம் இந்தச் சட்ட சபை தான். இந்த சட்ட சபைத்தலைவரில் நாம் முருகப் பெருமானைக் கண்டு மகிழ்ந்தோம், இனி மேல், அந்த மகிழ்வை எப்படி அடைய முடியும் என்பதை நினைத்தால் தான் மிகவும் வருத்தமாகயிருக்கிறது. தாங்கள் இந்த சட்ட சபைத் தலைவர் பதவியை விட்டுச் சென்ற போதிலும், மற்றும் ஏதோ ஒரு புதிய வழியில் நாட்டிற்குப்பணியாற்ற போவதால், உங்களை நல்ல மனதுடன் வழி அனுப்புகிறோம். தாங்கள் நீடூழி வாழ்ந்து நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

" தாங்கள் 9 ஆண்டுகளாக இங்கே சேவை செய்த பிறகு, இந்த இடத்தை விட்டு, அகலுகிறீர்கள் என்ற விஷயம் பெரிய சிக்கலை விளைவித்து விடுமோ என்று அஞ்சுகிறேன். தங்களைப் பொருத்த வரையில் இந்த பதவியை விட்டு தாங்கள் அகலுவது, யாதொரு தொந்திரவுகளையும் கொடுக்கவில்லை என்றாலும் எங்களுக்கு கொடுத்துவிட்டது என்று தான்

தோன்றுகிறது. கனம் சபாநாயகர் அவர்கள் இதை ஒன்றும் தப்பாக நினைக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். தங்களுக்கு பிறகு இந்த ஸ்தானத்தை யார் வகிப்பார்களோ என்கிற பிரச்னை இந்த சட்ட சபையில் இன்றும் வந்தது, நேற்றும் ஒரு இடத்தில் வந்தது, அந்த விஷயத்தைப் பற்றி பேச வேண்டுமானால் எனக்கு உண்மையிலேயே பயமாக இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி பேசவேண்டுமென்கிற ஒரு எண்ணம் என்னையும் அறியாமலே தோன்றி விட்டதால், அதை பூர்த்தி செய்ய ஏதோ சில வார்த்தைகள் சொல்லி விட்டுவிட நினைக்கிறேன். இந்தச் சட்ட சபையில் தங்களுக்கு பிறகு, ஒரு தகுந்த தலைவர் வருவாரா என்பது பெரிய சந்தேகமாக இருப்பதாக பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அபிப்பிராயத்தை நானும் ஆதரிக்கிறேன். ஆனால் யாராவது ஒருவர் வந்து தானே தீர வேண்டும். என்பதை எண்ணினால், தாங்கள் காலியாக விட்டுச் சென்ற இடம், காலியாகவே இருக்காது என்று தான் நினைக்கிறேன். அதே சமயத்தில், யாரோ எங்களுக்குள் ஒருவர் அதை அடைந்து கொள்ளுவார் என்பதை நினைக்கும்போது, சந்தோஷமும், பூரிப்பும் ஏற்படுகிறது. இந்தச் சட்ட சபைக்கு வெளியே இருந்து ஒருவர் வந்து தாங்கள் காலியாக விட்டுச் செல்லும் ஸ்தானத்தில் அமரப்போவதில்லை. இங்குள்ள தோழர்களில் ஒருவர் தான் அமரப் போகிறார். ஆகவே, அவர்கள் தங்களிடம் கற்றறிந்த பாடங்களை கொண்டு, இந்த சட்ட சபையை முடிந்த வரையில் நன்றாக நடத்துவார்கள், மனசாட்சிக்கு பயந்து நடத்துவார்கள் கடவுளுக்கு பயந்து நடத்துவார்கள் என்ற நம்பிக்கையை தெரிவித்துக்கொண்டு, தாங்கள் எனக்கு பேச அவகாசம் கொடுத்ததற்கு வணக்கத்தை செலுத்தி, இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி என்னுடைய பேச்சை முடிக்க விரும்புகிறேன்.

“ நமது கனம் நிதி மந்திரி அவர்கள் பிற்பட்ட சமுகத்தைபற்றி ஒன்று குறிப்பிட்டார். அது எனக்கு பெருத்த சந்தோஷத்தை மனதில் உண்டாக்கியிருக்கிறது. பிற்பட்ட சமூகத்தினருக்கு அரசாங்கத்தார் எவ்வளவோ சலுகைகள் கொடுத்து வருகிறார்கள், அக்கரை காட்டுகிறார்கள். இன்னும் அவர்கள் நிலையை உயர்த்தப் போகின்றோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில், இன்று தங்களுக்காக நடைபெறுகிற திருவிழாவில் சொன்னது எவ்வளவோ உற்சாகத்தை கொடுக்கிறது. அந்த உற்சாகத்தை பரிபூரணமாக செய்ய சீக்கிரத்தில் காரியம் ஆற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு, தாங்கள் சீக்கிரம், கவர்னர், ராஷ்டிரபதியாக வரவேண்டும் என்ற பிரார்த்தனையும் செய்து, தாங்கள் தங்களுடைய பதவி காலமாகிய ஆறு வருஷமும் Union Public Service Commission மெம்பராகவே இருக்கக்கூடாது என்றும் வேண்டிக்கொண்டு, எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.”

1-10 p.m. * **Sri T. C. NARAYANAN NAMBIAR** :—“ ബഹുമാനപ്പെട്ട അദ്ധ്യക്ഷൻ അവർകളെ, പുല്ലിൽ കിടക്കുന്ന സ്വർണ്ണപേടകത്തിലെ കാന്തിത്തിളപ്പേറിയ ഒരു രത്നമാണ് ശ്രീ ശിവഷണ്മുഖംപിള്ള. ശിവഷണ്മുഖംപിള്ള എന്ന വാക്കുതന്നെ പാർല്ലിമെൻററി സാഹിത്യത്തിന്നു അങ്ങു നല്കിയ ഒരു സംഭാവനയായിക്കഴിഞ്ഞിരിക്കുന്നു. പാർല്ലിമെൻററി ജനാധിപത്യത്തിൽ സ്പീക്കർഷിപ്പിൻെറ പര്യായമാണ് ശിവഷണ്മുഖംപിള്ള.

“മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, അവസരം കിട്ടിയാൽ ആർക്കും എത്ര ഉന്നതമായ പദവിയിലേക്കും ഉയരാനും പ്രശോഭിക്കാനും കഴിയുമെന്നുള്ളതിന്ന് അങ്ങു സാക്ഷ്യം വഹിക്കുന്നു. എങ്കിലും അതിന്ന് സ്വന്തമായ ഒരു കഴിവുംകൂടെ ആവശ്യമാണെന്നുതന്നെ ഞാൻ വിശ്വസിക്കുന്നു. ശ്രീ ശിവഷണ്മുഖം പിള്ളയെപ്പോലെ തേച്ചുമിനുക്കിയാൽ കാന്തിയും ശോഭയും ചിതറുന്ന അനവധി രത്നങ്ങൾ നമ്മുടെ സമുദായത്തിൻെറ അടിത്തട്ടിൽ കിടപ്പുണ്ടെന്നുള്ളതിന്നു സംശയമില്ല. ‘നെല്ലിൻചുവട്ടിൽ മുളയ്ക്കും വെറും പുല്ലല്ല സാധുപ്പുലയൻ’ എന്നു അങ്ങ് തെളിയിച്ചുകഴിഞ്ഞിരിക്കുന്നു.

സർ, അങ്ങ് ഈ സഭയിലെ അംഗങ്ങളോട് സഭയ്ക്കകത്തുവച്ചായാലുംശരി, പുറത്തുവച്ചായാലും ശരി, പ്രദർശിപ്പിച്ചുപോന്നിട്ടുള്ള സ്നേഹവും ഔദാര്യവും അളവററതാണ്. ഒരിക്കൽ പാലക്കാട്ട് ഒരു സെലക്ട് കമ്മിററിയോഗം കഴിഞ്ഞു ഞാനും സഖാവു

10th August 1955] [Sri T. C. Narayanan Nambiar]

കന്തസാമിയുംകൂടെ റോഡരികിൽകൂടെ സംസാരിച്ചുകൊണ്ടു നടക്കുകയായിരുന്നു. അപ്പോഴുണ്ടു് ബഹുമാനപ്പെട്ട സ്പീക്കർ ആ വഴിക്കു വരുന്നു. ഞങ്ങളെ കണ്ടതും കാറു നിറുത്തി 'ആ ഹാ, നീങ്കളാ, വാങ്കോ, വാങ്കോ, വാങ്കോ' എന്നും പറഞ്ഞു ഞങ്ങളെക്കൂടെ കാറിൽ കേററി കൊണ്ടുപോയ സംഭവം ഞാൻ ഈ അവസരത്തിൽ അനുസ്മരിക്കുന്നു.

"മിസ്റ്റർ സ്പീക്കർ സർ, ഈ സഭയുടെ അന്തസ്സിനേയും അവകാശങ്ങളേയും പൊക്കിപ്പിടിക്കുന്നതിൽ അങ്ങു് സദാ ജാഗരൂകനായിരുന്നുവെന്നുള്ളതിന്നു പല ഉദാഹരണങ്ങളുമുണ്ടു്. ഈ സഭയുടെ അവകാശങ്ങളെ ബാധിക്കുന്ന പ്രശ്നങ്ങൾ, സഭയിലെ ഏതെങ്കിലും അംഗം ഉന്നയിച്ചില്ലെങ്കിൽതന്നെയും അങ്ങുതന്നെ സഭയുടെ ശ്രദ്ധയിൽ കൊണ്ടുവരികയും സഭയുടെ അവകാശങ്ങളെ വേണ്ടവിധം സംരക്ഷിക്കാൻ ശ്രമിക്കുകയും ചെയ്തിട്ടുണ്ടു്. ബഹുമാനപ്പെട്ട സ്പീക്കർ ഉന്നയിച്ച ഒരു പ്രശ്നം ഇപ്പോൾതന്നെ പ്രിവിലേജസ് കമ്മററിയുടെ പരിശോധനയിലിരിക്കയാണു്. ഈ സഭയുടെ അവകാശങ്ങളും അധികാരങ്ങളും അങ്ങയുടെ കൈയിൽ തികച്ചും സുരക്ഷിതമായിരുന്നിട്ടുണ്ടു്. അതു് നമുക്കേവർക്കും അഭിമാനകരമാണു്. അങ്ങേയ്ക്കു ഈ അവസരത്തിൽ സകല ഭാവുകങ്ങളും നേർന്നുകൊണ്ടു ഞാൻ അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു."

*SRI T. V. SANNASI :—"கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் அடையப்போகும் உத்தியோகத்தைப் பற்றி என் போன்றவர்கள் பெருமைப்படுவதில் ஒன்றும் தவறு இருக்கமுடியாது என்று நினைக்கிறேன். நீங்கள் எங்களை விட்டு பிரிவதை நினைக்கும்போது நாங்கள் வருத்தம் அடைகிறோம். ஏனெனில், எங்கள் சமூகத்தலைவராகிய தாங்கள் இந்தச் சபையின் தலைவராக இருந்து வருவதால் நாங்கள் ஒழுக்கத்திற்கு மாறாக நடந்தாலும் உண்மைக்கு மாறாக நடந்தாலும் தங்களுடைய சலுகையால் காப்பாற்றப்படுவோமே என்கிற எண்ணத்தால் வருந்தவில்லை. 1-13 p.m.

"தாங்கள் இந்த ஸ்தானத்தை விட்டுச் சென்ற பிறகு, இங்கேயுள்ள யாரோ ஒரு அறிவாளிதான் அதை வகிக்கப் போகிறார்கள். வேறு எந்த நாட்டிலிருந்தாவது அறிவாளிகளை கடன் வாங்கி இந்தப் பதவியில் அமர வைக்க வேண்டும் என்கின்ற நிலைமையில் நாம் இல்லை. என்ன இருந்தாலும் கூட, ஆதரிப்பதில் தாய் போல் நின்று, அறிவுறுத்துவதில் தந்தையாக நின்று, போதிப்பதில் ஆசான் உள்ளம் படைத்து நின்ற தங்களைப் போன்ற ஒருவர் இனி கிடைக்குமா என்பதுதான் எங்கள் சந்தேகமும் கவலையும்.

"இந்த நாட்டிலே ஒருவர் உயரவேண்டுமானால், ஒன்று உயர்ந்த இனத்தில் பிறக்கவேண்டும் அல்லது அடர்ந்த செல்வம் இருக்கவேண்டும் என்ற நியதி இருந்து வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், பத்திரிகை பிர்மாக்களால்தான் பலர் உயர்ந்தவர்களாக சிருஷ்டிக்கப்படுகிறார்கள். ஆனால் எனது அரும்பெரும் தலைவர் அவர்கள் தாழ்ந்ததாகக் கருதப்படும் குலத்தில் பிறந்திருந்தாலும் சொந்த முயற்சியால், தூய்மையான நடத்தையால், உண்மையான உள்ளத்தால் இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறார்கள் என்றால் பாராட்டாமல் இருக்கவே முடியாது. இப்பேர்ப்பட்ட உத்தமர் நம்மை விட்டு பிரிகிறார் என்பதை நினைக்கும்போது யாரும் வருந்தாமல் இருக்க முடியாது. அதோடு மட்டுமல்ல, ஒரு ஜோடி பிரிகிறது என்பதை நினைக்கும்போது அதிக வருத்தத்தை தருகிறது. உண்மை உழைப்பினாலும், உயரிய ஒழுக்கத்தினாலும், தன்னம்பிக்கையினாலும், இந்த நாட்டிலே உயர்ந்த எனது அருமைத் தலைவர் காமராஜ் அவர்களை விட்டு, அதேபோன்று உயர்ந்த திரு, சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் பிரிகிறார்கள் என்பதை நினைக்கும்போது மிகவும் வருத்தத்தை தருகிறது. நாங்கள் இந்த பிரிவிற்கு வருந்துகிறோம் என்றாலும், மீண்டும் தாங்கள் அடைகிற அடைவைபற்றி எண்ணும்போது மகிழத்தான் வேண்டியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்தைப் பொருத்தவரையிலும், இப்போது அடையப்போகிற பதவியானது மிகவும் பிரயோஜனகரமான பதவி என்பதை அந்தச் சமூகத்தில் உள்ளவர்கள் நினைத்து சந்தோஷப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இது ஒரு புறம் இருக்க, அவருக்குப்பின் இந்த சபைத்தலைவர் பதவிக்கு வருகிறவர்கள் இவ்வளவு திறமையாக சபையை நடத்த முடியுமா என்ற சந்தேகத்தை தெரிவித்து வருத்தப்பட்டார்கள்

பல அங்கத்தினர்கள். திறமையற்றவர்கள் வந்து உட்கார்ந்தாலும்கூட, அவர்களுக்கு நேர்மை இருக்குமானால், சபையிலுள்ள அங்கத்தினர்களும் ஒழுக்கம் குன்றாமல், உண்மையான அமைதியையும் நாட்டுப்பற்றையும் ஒன்றுபடுத்திவைத்து நடந்துகொண்டார்களானால், நிச்சயமாக சபையை சுலபமாக நடத்தலாம் என்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்த சீரிய குணங்களால்தான், பாரதநாட்டில் இந்த உயர்ந்த பதவியை எனது அருமைத் தலைவர் அவர்கள் அடைந்தார்கள். அவருடைய அறிவையும் திறமையையும் அறிந்து அவருக்கேற்ற பதவியை அளித்த பெருமை நமது காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சாரும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். முதன் முதலில் இந்த நகரத்தின் மேயராக வந்தார் எனது அன்பின் தலைவர் ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை. இரண்டாவதாக, இந்த சபாநாயகராக வந்தார். தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்த ஒருவர் முதன் முதலாக சபைத்தலைவராக வந்தது இதுதான் முதல் தடவை. மூன்றாவதாக இப்போது அவர் அடையப்போகிற பதவி இருக்கிறது. அதையும் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் முதன் முறையாக அடையப்போகின்றவர் அவர்தான். இத்தியாதி பெருமையும் எங்கள் சமூகத்திற்கு பெருமை என்று மட்டுமல்ல, பாரதத்தின் பெருமை என்றும் நான் நினைத்து, அவர் வாழ வேண்டும், அவர் வாழ்கின்ற காரணத்தினால் நாங்களும் வாழ வேண்டும் என்கிற எண்ணத்தையும் தெரிவித்துக்கொண்டு, மறுமுறையும் அவரை வாழ்த்தி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.''

1–17 p.m. * **Sri G. GOVINDAN** :—" கனம் சபாநாயகர் அவர்களே, உங்களைப் பாராட்டிப் பேசுவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். தாங்கள் சொந்த அறிவால், சொந்த உழைப்பால் உயர்ந்தவர்கள் என்பதை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. நானும் ஒரு தொழிலாளிதான். என்னுடைய உழைப்பைப் பாராட்டி என்னை இந்த சட்டசபையின் அங்கத்தினராக ஸ்தானம் பெறுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்த ஸ்ரீ காமராஜர் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே தங்களையும் சட்டசபையின் சபாநாயகராகத் தேர்ந்தெடுத்ததற்கு அந்தத் தலைவரும் ஒரு காரணம் ஆவார்கள். ஏதோ ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக இந்தப் பதவி தங்களுக்கு அளிக்கப்படவில்லை. அறிவிலும், ஆற்றலிலும் மிக்க தாங்கள், சொந்த உழைப்பால் மேன்மையுற்றிருக்கும் தாங்கள் இந்தப் பொறுப்பை மிகவும் திறமையாக நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையால்தான் தங்களை இதற்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், என்பது உறுதி. ஸ்ரீ காமராஜர் இருப்பதின் காரணமாக தாங்கள் நிச்சயம் டெல்லிக்குச் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுமென்றே நாங்கள் பல நாட்களாக எதிர்பார்த்தோம். டெல்லியில் தங்களுக்கு ஒரு பதவி காத்துக்கொண்டிருப்பதை நாங்கள் பலநாட்களாகவே அறிவோம். தாங்கள் இப்பொழுது யூனியன் சர்விஸ் கமிஷன் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். அதனால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

